உ

சிவமயம்

அங்காதிபாதம்

(வாகடதத்துவத்துடன்)

பரராசசேகரத்தைச் சார்ந்தது

I. B. நடராஜ சாஸ்திரி
ஆயுர்வேதாசார்ய்
ஆத்ரேயாச்ரமம்
28. தென்னூர் ரோடு
திருச்சிராப்பள்ளி -

ஐ. பொன்னையா

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை
மல்லாகம், சுன்னாகம்.

தாதுஹூ வைகாசிமீ
1936
விலை ரூபா 1-50

உ
சிவமயம்

முகவுரை

இந்நூலின் முற்பகுதி முன்னரே எம்மால் வெளியிடப்பட்டுள்ளது. இப்பொழுது, 'வாகடதத்துவம்' என்னும் இரண்டாம்பிரிவையும் சேர்த்து இதனை வெளியிட்டிருக்கிறோம். வைத்தியர்க்குமட்டுமன்றி, ஏனையோர்க்கும் பயன்படும் அரிய பொருள்கள்பல இதன்கண் சொல்லப்பட்டு இருக்கின்றன. சுகவாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய உவாந்தி, பேதி, நசியம், அஞ்சனம் என்னுமிவற்றைச் செய்யும்முறைகளும், அவற்றிற்குரிய காலம் முதலியனவும், வாதாதி தேதிகட்குரிய உணவுவர்க்கம்:- கறிவகை, கீரைவகை, சாறுவகை, வற்றல்வகை ஊறுகாய்வகை முதலியனவும், உடம்பிற் பூசிக்கொள்ளுதற்கேற்ற களபவகைகளும், இன்னும் பாகற்காய், பேய்ச்சுரைக்காய் வேப்பிலைமுதலிய கைப்புப்பொருட்களின் கைப்புத்தன்மை, மாங்காய்முதலிய புளிப்புப் பொருட்களின் புளிப்புத்தன்மை, துவர்த்தன்மை, உப்புத்தன்மை ஆகிய இவற்றையகற்றும் முறைகளும் போன்ற அரியகாரியங்கள்பல இதன்கண் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

வாகடதத்துவம் 43ம். பக்கத்தில் 'பிறநூற்கோவை' என்னும் தலைப்பின்கீழுள்ளவை எம்மாற் சேர்க்கப்பட்டவையன்று. கையெழுத்துப் பிரதியிலேயே அவ்வணம் தலைப்பிட்டு எழுதப்பட்டிருந்தவற்றை அப்படியே பதிப்பித்திருக்கிறோம். இன்னும் இதில் நாடிவிதி, காலத்தளவிடை, நிலத்தளவிடை, மூலிகைத்தொகுப்பு, கடைச்சரக்குத்தொகுப்பு முதலியபகுதி

கள் உள்ளன. அவை பின்னர் தனிப்புத்தகமாக வெளியிடப் படும்.

இப்பொழுது அச்சிலிருப்பன

1- பரராசசேகரம் 6ம் பாகம்

உதரரோகம், மூலம், குன்மம், சூலை, கிரகணி, அதிசாரம், வாயு தலிபமுரோகங்களின் நிதானங்கள்.

2- அவிழ்தத்திரட்டு

முன்னர்த் தெரிவித்திருந்தபடி 'வைத்திய அகராதி' அச்சிடத்தொடங்கியிருந்தும், இடம்பொருளேவல்களின் குறைவினால் நினைத்தபடி காலத்தில் அவ்வேலையை முடித்துக்கொள்ள இயலாதிருக்கின்றது. இறைவன் திருவருள் முன்னின்று முடிப்பிப்பதாக.

ஏழாலை ஐ. பொன்னையா

தாது-வைகாசி

யாழ்ப்பாணத்து வைத்தியநூல் வெளியீடு.

(விலைகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன)

1. வைத்தியவிளக்கம் பதார்த்தசூடாமணியுடன்;
இருபாலைச் செட்டியார் இயற்றியது. விலை ரூபா 1-50

2. பரராசசேகரம் 1-ம் பாகம்
சிரரோகநிதானம் „ „ 3-00

3. பரராசசேகரம் 2-ம் பாகம்
கெர்ப்பரோக பாலரோக நிதானங்கள் „ „ 2-00

4. பரராசசேகரம் 3-ம் பாகம்
சுர, சன்னி, வலி, விக்கல், சத்திரோக நிதானங்கள் „ „ 1-50

5. பரராசசேகரம் 4-ம் பாகம்
வாத, பித்த, சிலேற்பன, ரோக, நிதானங்கள் கிளேஸ் „ „ 2-50
றவ் „ „ 1-75

6. பரராசசேகரம் 5-ம் பாகம்
மேகம், பிளவை, பவுந்திரம், கைக்குழித்தாமரை ரோகநிதானங்கள் வன்மவிதி, சத்திரவிதி, அரைவிதி, இரட்சைவிதி. அனுபந்தத்துடன்
விலை ரூபா 2-00

7. வைத்தியத்தெளிவு
செட்டியாரியற்றியது „ சதம் 50

8. வைத்தியசிந்தாமணி
அரியதொருவசனநூல்: எட்டுப்பிரதியிலுள்ளது „ ரூபா 1-50

9. அங்காதிபாதம் வாகடதத்துவத்துடன்
பரராசசேகரத்தைச் சார்ந்தது „ „ 1-50

10. சொக்கநாதர் தன்வந்திரியம்
உக்கிரகாண்டம், சௌமியகாண்டம் என்னுமிரு பிரிவினையுடையது. இது தன்வந்திரிபகவான் செய்த சதச்சுலோகி என்னும் வடமொழி வைத்திய நூலைத் தழுவி' சொக்கநாதக்குருக்கள் என்பவரால் தமிழில் செய்யுள்ரூபமாக இயற்றப்பெற்றது. விலை ரூபா 1-50

11. கிளிவிடுதூது விலை சதம் 6

12. பாட்டியல்வினாவிடை „ „ 10

ஸ்ரீ

74

4297.

முகவுரை

பன்னீராயிரம் செய்யுட்களை உடையது எனக் கூறப் "பரராசசேகரம்" என்னும் விரிந்த வைத்தியநூலின் தியாயுள்ளது அங்காதிபாதம் என்னும் இச்சிறியநூல். ாதிபாதம் என்னும் பெயரோடு வேறும் இருநூல்கள என்று கேள்வியுற்றமையினல், அவற்றையும் அரிதின் ன்று தேடி இதனோடு ஒப்பு நோக்கினோம். மூன்று நூல ம் சொல்வேறுபாடு உடையனவாயினும் அவற்றிற் கூறப் ம் பொருள் ஒன்றே. அம்மூன்றனுள் ஒன்றில் 275 செய் கள் மாத்திரமே உள்ளன.

சிறப்பாக வைத்தியரும் பொதுவாக ஏனையோரும் ழ்க்கை நலத்திற்கு இன்றியமையாது அறியவேண்டிய ிய பொருள்கள்பல இந்நூலகத்துள்ளன. இதிற் பல தவ ள் காணப்படக்கூடும். அறிஞர்கள் அவற்றை எமக்கு றிவிப்பின் அடுத்த பதிப்பில் அவை திருத்தமுறும்,

பிழையுள தாயின் உலகம் பொறுக்க.

ங்கீரச மார்கழி

ஐ. பொ.

சிறப்புப்பாயிரம்

இஃது
சுன்னாகம்
காவியபாடசாலைத் தமிழ்த் தலைமையாசிரியரும்
வித்துவானும்
ஆகிய
புன்னாலைக்கட்டுவன்
பிரஹ்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் இயற்றியது

பரராச சேகர மாலையென் றோதும் பனுவலிடைத்
தருரே சகபூ ரகநாடி யாதி தமையமைத்து
வரராச மாமுனி தென்மலை யோனருள் மாமரபின்
நரராக வங்க முதற்பாத நூலு நவின்றவஃதே

அன்னதை நுண்மதி கொண்டினி தாய்ந்தச்சி லாக்கினனால்
உன்னுறு வோனரன் றாள்களே மூலை யொளிர் பதியான்
பன்னுறு மாபல் வயித்திய நூல்கள் பதித்துதவும்
துன்னிய சீர்த்தியன் பொன்னைய பிள்ளைத் தொழுந்தகையே

உ

சிவமயம்

அங்காதிபாதம்

கடவுள்வாழ்த்து

விநாயகர் காப்பு

பொன்னத்தா னத்தார் போற்றிப் புகழுமங் காதிபாதம்
என்னத்தா னுரைக்கு நூலை யினியசெந் தமிழாற் பாட
அன்னத்தா னத்தான் காண வருஞ்சிவ னளித்த யானைக்
கன்னத்தா னத்தான் செம்பொற் கழலிணை கருத்துள் வைப்பாம்

நடேசர்

அத்தனை யகில மீன்ற வன்னையா யழிவி லாத
நித்தனைச் சுத்த ஞான நிலையனைப் நிறைபே ரின்ப
முத்தனைப் மறைநான் கிற்கு முதல்வனை யுலகிற் கெல்லாம்
கத்தனைப் மன்று ளாடுங் கடவுளைக் கருதி வாழ்வாம்

சிவகாமசுந்தரி

கங்கையு மதியும் பாம்புங் கலந்தணி சடையெங் கோமான்
பங்குற விருந்தெந் நாளும் பல்லுயிர்த் தொகையைப் பார்மேல்
தங்குறப் படைத்துக் காக்குந் தாய்சிவ காமி யென்னும்
மங்கைசெங் கமலப் பொற்றாள் வழுத்தியே வணங்குவோமே ௨

விநாயகர்

ஓங்கிய மறைகட் கெல்லா மோமெனும் பொருளா யுற்ற
காங்கெயன் றனக்கு மூத்த கரிமுகன் கருணைக் கண்ணன்
தீங்கறு குணத்தன் ஞானந் தேக்கியிட் டிழியுஞ் செவ்வி
தாங்குமும் மதத்துப் பிள்ளை சரணமே யாந மக்கே ௩

சுப்பிரமணியர்

வள்ளிதெய் வானைக் கொந்த மணவாளப் பிள்ளை வாய்ந்த
புள்ளியா மயிலி லேறும் புங்கவன் புலவர்க் காக
அள்ளிலை வேலாற் சூரை யட்டவ னறுமு கேசன்
கள்ளவிழ் கமலத் தாளென் கருத்தைவிட் டகல்வி லாவே ௫

சரசுவதி

வேறு

தொல்லை ஞால மதனிற் றெண்கயிலாப்
பல்லு யிர்த்தொகை யாவும் படைத்தருள்
அல்லி யங்கம லத்தய னில்வாழ்
வல்லி நேரிடை வாணியை வாழ்த்துவாம் ௬

பாயிரம் (நூற்பொருள்)

வேறு

சீர்வளர் கயிலை யென்னுஞ் சிலம்பினில் வாழெங் கோமான்
வார்வளர் கருணை தன்னுன் பாங்கருத் பவிக்கு மாறும்
பேர்வளர் நோய்கள் சேரும் பெற்றியும் பிணியின் கூறும்
ஏர்வளர் நாடிப் போக்கு வயித்திய னியல்பு தானும் ௭

தானமர் முடம்பின் கூறுந் தசவாயுத் தன்மை யோடே
ஊனமி னரம்பின் கூறு முற்றதத் துவத்தின் கூறும்
மேனபூ தியத்தின் கூறும் விளம்புசாத் தியத்தின் கூறும்
ஈனமா மரணக் கூறு மேனவு மியம்ப லுற்றும் ௮

அவையடக்கம்

இயம்புமிந் நூலின் கண்ணே யிலக்கண வழுவுற் றலும்
பயனபடு பொருளுஞ் சொல்லும் பண்பொடு குணமின் றேனும்
வியன்படு சிறப்பின் றேனும் வெளிற்றுரை யேனுங் கல்வி
நயம்படு புலவர் குற்ற நாடாமற் கொள்வர் நன்றே ௯

கொள்ளுமா யுருவே தத்திற் குறித்திடு பொருளை யெல்லாம்
தென்னுசெந் தமிழி னூலே சிற்றறி வுடைய பாலர்

தெள்ளரு முனிவர் மிக்கோர் தாமெலா மெளிதிற் றேற
உள்ளவா றெடுத்தி யானு முரைத்தன னுலகி லம்மா க௦

உலகினின் மாந்த ரெல்லா முணர்ந்தன ருய்யு மாற்றால்
பலகலை தெரிந்து நாளும் பயின்றபண் டிதருக் கெல்லாம்
நிலவொளி போலக் காட்டு நானூறு விருத்த நேராய்
நலனுறு தொடையக் காதி யாமுறை நாடிச் சொன்னேன் கக

பாயிரம் முற்றிற்று

செக உற்பத்தி

சொன்னநான் மறைகட் கெல்லாந் தூயநற் பதியா மீசன்
தன்னுறு சோதி தன்னிற் றனேமெய்ப் பரத்தை நல்க
அன்னமே தோர் பரத்தின் கண்ணே யரியதோர் சிவமுண் டானி
உன்னருஞ் சிவத்திற் சத்தி யுதித்துவந் தெழுந்த தாமே க௨

எழுந்திடுஞ் சத்தி தன்னா னாதம்வந் தெய்தி நின்ற
அழுந்துமந் நாதந் தன்னில் விந்துவந் துதித்த வற்றால்
தொழுஞ்சதா சிவமுண் டான வதின்மயேச் சுரந்தோன் றுற்ற
மொழிந்திடு மயேச்சு ரத்தி லுருத்திர மூர்த்தி வந்த க௩

வந்திடு முருத்தி ரன்பால் மாயவன் றானும் வந்தான்
அந்தமா யவன்கண் வேதா வடுத்தன னவன்வா னத்தைத்
தந்தன னவ்வான் வாயு தனைத்தந்த வாயு தானும்
செந்தழ லதனைத் தந்த தநிலப்புச் சேர்ந்து நின்ற க௪

நின்றவப் புவினிற் றனே பிருதுவி நேர்ந்தங் குற்ற
துன்றுமங் கதனு லோசை தோன்றிய ததனா லன்னம்
ஒன்றிய விரச மற்ற துதித்ததவ் விரசத் தாலே
மன்றநல் லுதிர முண்டாய் வளர்ந்தமா மிசத்தைத் தந்த க௫

தந்தமா மிசந்தான் மூளை தன்னையே யுதிக்கச் செய்த
தந்தமூ ளையினா லத்தி யாயதவ் வத்தி யாலே
முந்திய மேதை யுண்டாய் மூளைத்ததம் மேதை மூலம்
வந்தசுக் கிலந்தன் னாலே சுரோணித மருவிற் றன்றே க௬

மருவுமிந் தியவித் தாலே வந்துதான் வளரு மிந்தப்
பொருவிலா வுடம்பு பார்க்கிற் புகழ்பரா பரமாய் மேவும்
ஒருவனு யுலகுக் கெல்லா முன்னரும் பரசி வன்ருன்
அருவமாய் நின்று நாளு மாட்டுவ னருளி ஞலே கஎ

பிறப்பொழிக்கும்வழி

அருளுடைக் கருவி தொண்ணூற் ருறிரு மூன்ற தாரம்
மருவுமெய் யவத்தை யைந்து மண்டலந் தானேர் மூன்று
திருவெழுத் தைம்பத் தொன்று தெளிந்துநற் சிவத்தை யுள்ளே
உருவொடு கண்டு மாயப் பொறிபுல ஞெடுங்கு நண்ண கஅ

நண்ணிடு கலைக டம்மை யொருகலை செல்ல நாடித்
திண்ணிய வாயி லேழுஞ் சேமமாய்த் தாழ்ப்பா ளிட்டுப்
பண்ணிடு நடங்கும் பிட்டுப் பரானந்த மயமாம் வீட்டை
எண்ணியே யோகஞ் செய்யி லிறப்பொடு பிறப்பும் போமே

போமிரு வினையி ஞலே புரிதரு பொல்லாங் கெல்லாம்
ஆமின்ப வீட்டின் பேறு மறிவொடு ஞான முண்டாம்
பூமனு மாலுங் காணுப் புண்ணிய னருளு முண்டாம்
நாமுரை வழுத்தப் போமோ நாதனு ரியல்பைத் தானே உ0

தத்துவம் 96

தான்முத லாகு மீசன் றந்திடு முடம்பின் றன்மை
ஆனது தொண்ணூற் ருறு தத்துவ வியக்க மாகும்
வான்வளி யனனீர் மண்ணுய் வகுத்திடு பஞ்ச பூதம்
ஆனவை யாதி யான தத்துவ மறைத லுற்ரும் உக

அவற்றில் உட்கருவி 36

அறைதரு பூத மைந்து மடுத்தவிந் திரியம் பத்தும்
நிறைதரு காண நான்கு நிகழ்தன்மாத் திரைக ளைந்தும்
உறைதரு வித்தை யேழு முயர்சிவ மைந்து மென்று
மறைபகர் முப்பத் தாறு மகமினிப் புறம்வ குப்பாம் உஉ

புறக்கருவி-60.

புறத்துறு கருவி யைந்து பூதத்தின் கூறை யைந்து
நிறத்துறு வாயு பத்து நிகழ்தரு நாடி பத்து
மறுத்தவிர் குணங்கண் மூன்று வசனாதி யைந்து நான்கு
திறத்துறு வாக்கு மூன்று மேடணை யறுப தோதும். உ௩

செனனவுற்பத்தி

ஓதுமிக் கருவி தொண்ணூற் றாறென வுரைத்தார் மேலோர்
தீதிலா மாந்தர் செனன வுற்பத்தி செப்பக் கேண்மின்
தாதையுந் தாயுங் கூடித் தழுவிய போகந் தன்னில்
ஆதியாம் விந்தி றங்கிச் சுரோணிதத் தடங்கு மன்றே உ௪

அடங்குமவ் விரண்டுங் கூடி யுருவமா மதனுட் புக்கு
மிடைந்திடு பிராண வாய்வு மேற்றமாந் தானே மூடித்
திடம்பெறு விந்து தன்னை வளர்விக்கு முதானன் சேர்ந்து
கடம்படு கருவைக் காக்கும் பான்மைய காவல் சூழும். உ௫

கருவளரும்முறை

காவல்சூ ழபான வாயு கருதிய வேலி போல
மேவியே சூழ்ந்து நிற்கும் விளம்பிய பிராணன் றானும்
தேவன தருளி னாலே சிறந்துளே கலந்து வாழும்
பாவையே யஞ்சா நாளிற் பக்குவக் கருவாய்த் தோன்றும்.

தோன்றுமே பத்தா நாளிற் சொல்லுமோர் கட்டி யாகத்
தான்றிரண் டிருக்கு நாளோர் பதினைந்திற் சாற்று முட்டை
போன்றிடு மொருமா தத்திற் பொருந்திய சென்னி யுண்டாம்
என்றிடு மதி யிரண்டிற் பிடரிதோண் முதுகு மெய்தும். உ௭

எய்திடு மூன்றாந் திங்க ளியல்விலாத் துடைகால் கையும்
மைதவிர் நான்காந் திங்கள் வயங்கிடும் வதன முண்டாம்
செய்யநற் றிங்க ளைந்திற் செவிநாசி வாயு முண்டாம்
பெய்மல சலத்து வாரம் பெரிதுண்டாந் திங்க ளாறில் உ௮

திங்களங் கேழு தன்னிற் செறிமயிர் நரம்பு நாடி
தங்கிய தொப்புழ் சந்து சரமொடு குடரு முண்டாம்

பங்குறுந் திங்க ளெட்டிற் பலமிக வுண்டாய் மண்டை
யங்கதின் மயிரு முண்டா யன்னையுண் டிட்ட சாரம். ௨௯

சாரமங் குள்ளே செல்லத் தான்றெப்புழ் வழியு முண்டாம்
நேருமொன் பதுமா தத்தி னிறையறி வுணர்ச்சி பெற்றுப்
பாருறு கருப்பந் தன்னிற் பரிந்திடு பரிவு முண்டாய்க்
காருறு கண்டன் றன்னைக் கருதிய நிலைய தாகி ௩0

நிலையதாம் பொருளா யெங்கு நிறைந்தபூ ரணமா யார்க்குந்
தலையதா யமல மாகிச் சராசரப் பொருளாய் நின்ற
தொலைவிலாச் சோதி வாழ்வே தோகைபங் காளா வென்றே
உலைவிலா விருகை கூப்பி யுன்பதந் தருவா யென்றும் ௩௧

என்னவே பத்தாந் திங்க ளீசனார் கருணை யாலே
சென்னிதான் கீழ தாகச் சிறந்திடு மபான வாயு
துன்னியே புதைத்துத் தள்ளத் தொல்லையி லுணர்ச்சி நீங்கி
மன்னிய பாரின் மீதே மதலைவந் துதிப்ப தாமே. ௩௨

மதலையங் குதித்த போது வந்திடு மாயை தானே
கதுமென வளைந்து சுற்றிக் கலக்கிடத் திகைத்து விம்மி
இதமுட னழுவ தாகு மிப்பெரு மாயை யாலே
நிதமுமே பிறவி வந்து நேருநிச் சயம தாமே ௩௩

ஆண்பெண் வேறுபாட்டிற்குக் காரணம்.

ஆமது சுக்கி லந்தான் கதித்திடி லாணே யாகும்
காமது சுரோணி தந்தான் கதித்திடிற் பெண்ணே யாகும்
தாமிவை யிரண்டுங் கூடிச் சமன்படி லிரட்டை யாகும்
பூமலி வையந் தன்னிற் புகல்வேத முறைமை யாமே ௩௪

முறைதரு கொர்ப்பந் தானு முன்னுறப் பொருந்தும் போதில்
அறைதரு பிராண வாயு வலத்திலே யோடி லாணும்
நிறைவுற விடத்தி லோடி நின்றிடிற் பெண்ணே யாகும்
குறைவற விரண்டு மோடி லலியெனக் குறுகுந் தானே ௩௫

குடிகிடு மிரத்த மத்தி கொழுந்தசை சுக்கி லந்தோல்
மறுவிலா மச்சை மேதை வகுத்தன வேழுங் கூடிப்
பெறுமொரு வடிவ மாகிப் பேசுறு சுவையுங் கூடி
உறுவினைப் பாலா லிந்த வுலகினி லுதிக்குந் தானே ௩௬

அங்காதிபாதம்

உதித்திடு முடம்பு தன்னி லுண்டிடு மன்னந் தண்ணீர்
மதித்திடு மூன்று கூறாய் மலசலத் திரண்டு கூறும்
கதித்திடு மொருகூ றுந்தான் கருதிடு மிரத்த மாகி
விதித்தநன் முறைதப் பாமன் மெய்தனை வளரச் செய்யும் ௩௭

செய்திடு முடம்பில் ரோமஞ் செப்புமூன் றரையாங் கோடி
ஐயமி னீளந் தானு மங்குலத் தொண்ணூற் றாறும்
தையலே பருமை நாலெட் டங்குலந் தத்தங் கையால்
மெய்யினி லொன்ப தாக விதித்தன வாயி றானே ௩௮

வாய்ந்திடு தசைப லந்தான் மதிக்கினூற் றறுபத் தைந்து
காய்ந்திடும் விழிக டாமே கழஞ்சிரண் டாகுங் கண்டாய்
ஆய்ந்தநாற் கழஞ்சு கன்ன மன்னிறை யாகும் பித்துப்
பாய்ந்திடு நாசி மூன்று பகர்நாக்குக் கழஞ்சு நாலே ௩௯

நாலிரு பலமா மீர லீரல்பழுப் பதினா றாகும்
தோல்பல முன்னூற் றாறு தொகுநிணம் பலந்தா னாறு
வாலிய பல்லெண் ணான்கு வழுக்கைநாற் பலஞ்ச லப்பை
ஆலவேல் விழிநன் மாதே யதின்முழ மஞ்சு தானே ௪0

அஞ்சுறு குடரி னீள மதின்முழ மைந்நான் காகும்
வஞ்சியே மூளை தன்னை வகுப்பர்முப் பலம தாக
எஞ்சிய வென்பு நூற்றுப் பதினெட்டுப் பலமா மென்ப
மஞ்சுறு மலப்பை யைஞ்சு முழமென வகுத்திட் டாரே ௪௧

இட்டதோர் முதுகந் தண்டு மீராறு கோவை யாகும்
முட்டிய வுதிர நாலு நாழியா முளரி மொட்டுத்

திட்டமா யையஞ்சு றஞ்சு செங்கைகா லசைவைந் தாகும்
தொட்டிடு நரம்பெ லும்பி னசைவினைச் சொல்லி னேழே சஉ

ஏழுபத் துடனி ரண்டா யிரநரம் பிறுகி நிற்கும்
தாழ்விலாத் தாரை தானு மங்குல மெட்டாய்ச் சாற்றும்
நாழிமூன் றாகும் பித்தம் வாதமோர் நாழி யாகும்
பாழ்படு சேற்ப நாலு நாழியாய்ப் பகுத்தா ரன்றே சங

பகுத்திடு மாங்கி ஷந்தான் பலமது றூறே யாகும்
தொகுத்திடு மேதை யெல்லா மிருநூறு பலமாய்ச் சொல்லும்
உகுத்தகெந் தம்ப லந்தா னேதுவ ரெட்ட தாக
வகுத்திடு மிரத மைந்தா யுரைசெய்தார் மறைவல் லோரே

வல்லவேல் கயல்சே லம்பு வாளைவென் றிடுகண் ணேடு
வில்லையு நுதலாக் கொண்ட மின்னிடை மின்னே கேளாய்
சொல்லிய விவைக ளெல்லாஞ் சுருதிநூ லுரைத்த வாறே
நல்லியல் பனைத்து நாடி நயம்பெற வறிந்து கொள்ளே சரு

பஞ்சபூதக்கூறு

கொள்ளுமிச் சடந்தான் பஞ்ச பூதியக் கூறாய் நிற்கும்
அள்ளிலே வேற்க ணுள்ளே பிருதிவி யப்புத் தேயு
விள்ளரும் வாயு மானம் விளம்பிய பூத மைந்தாம்
தள்ளரும் பிருது விக்குச் சார்குணத் தன்மை கேளே சசு

தன்மைதான் மயிரெ லும்பு தசைநரம் போடு தோலாம்
சொன்னவப் பினுக்கு மச்சை சுக்கிலத் தோடி ரத்தம்
பன்னுநீர் மூளையாகும் பகர்தேயுக் குணஞ்சோம் போடு
மன்னிய பயமாங் கார மைதுனந் துஞ்ச லாமே சஎ

துஞ்சலில் வாயுக் கூறு துள்ளியே நடத்த லோடல்
பஞ்சியாய்க் கிடத்த னிற்றல் பரிவுட னிருத்த லாகும்
மிஞ்சுமா காயக் கூறு வெய்யகா மியங்கு ரோதம்
வஞ்சியே மோக லோப மதமுடன் வகையோ ரைந்தே சஅ

ஓரைந்து பூதி யங்க ளொன்றினுக் கைந்து பேதம்
சேருமை யைந்தே யாகச் செறிந்திடு கருவி யாகும்
பார்நிறம் பொன்தா னாகும் பளிங்குநீர் பவளந் தேயு
கார்நிறம் வாயுவாகுங் ககனமும் வெண்மை காணே சகூ

தசவாயுக்கூறு.

காணுநற் பிராணன் கூர்மன் கருதுதா னன்ச மானன்
மாணுறு தேவ தத்தன் வளமிகு கிரிக ரன்றான்
பூணுறு முலையாய் நாகன் றனஞ்செயன் புகல்வி யானன்
சேணுறு மபானன் பத்துஞ் செப்பினர் வாயு வென்னே ௩0

வேறு

என்னவகுத் திடும்பிராண வாயுத் தன்மை
யியம்பக்கே ணீலவண்ண மூலா தாரம்
தன்னிலோங் காரவெழுத் தாகத் தோன்றித்
தானருந்து முணவையெல்லாஞ் சமிக்கச் செய்யும்
சொன்னசிர சினின்முட்டி விழிமை யத்தைத்
தொடுநாசி வழிவிரலீ ராறு பாயும்
மன்னுமெட்டு முள்வாங்கு மொருநான் குந்தான்
வறிதாக வெளிதனிலே பாயும் பாழே ௩க

பாழான வபானன்றன் பரிசைக் கேளாய்
பச்சைநிறஞ் சுவாதிட்டா னத்திற் றோன்றிக்
கேளான போசனத்தைச் சுருக்கி நாளுங்
கீழ்நோக்கி மலசலத்தை யுறுமித் தள்ளும்
தாளான வன்னத்தின் சார மெல்லாஞ்
சடத்தினுக்கா தாரமுறச் சாரு விக்கும்
கீழான வயிற்றினுள்ளே யுலாவி நிற்குங்
கேட்டிடாய் வியானனுடை கெதியைத் தானே ௩உ

கெதியான பானிறமாய்த் தோளி லுற்றுக்
கிளர்ந்தெழுபத் திராயிரமாம் நரம்பிற் சேர்ந்து

பதியான சர்வசத்தின் முடக்க நீட்டப்
பண்ணியே பரிசங்க ளறியச் செய்யும்
புதிதான கலைதவன மாக்கு விக்கும்
பொசிப்பிலுறு சாரமெல்லாம் பூரிந் தெங்கும்
விதியான வுடம்புதனை நாள்க டோறும்
மிகவளரச் செய்யுமென விதித்திட் டாரே ௫௩

விதித்தவுதா னன்றனே மின்னின் வன்ன
மிகவிதயந் தனிலனலை யெழுப்பு வித்து
மதித்தபொசிப் புகளெல்லாஞ் செமிக்கச் செய்து
வளர்நாடி நரம்புகளி லூட்டு விக்கும்
குதித்துதிறுத் திடலெழுப்பல் கலங்கு வித்தல்
குறித்தகனு வருவித்த விரும றும்மல்
கதித்துவருந் திடச்செய்த வினைக ளெல்லாங்
கண்டறிவா யுதானன்கா ரணத்தா லுமே ௫௪

காரணமாஞ் சமானனிறம் புட்ப ராகங்
கசிவாகி யறுசுவைசே ரன்னந் தண்ணீர்
பூரணமா யுடம்புதனிற் சமனு யெங்கும்
புகுத்தியே வாயுகளை மிஞ்சொட் டாமல்
தாரணையா யடக்கியே சமன தாகித்
தானிருக்கு மடிநாபி குய்யந் தன்னில்
வாரணமா முலையாளே கூர்ம னென்னும்
வாயுநிறம் வெண்மையென வகுப்பர் மாதோ ௫௫

வகுப்பான விலாடத்தி னின்றெ ழுந்து
வடிவான வுடம்பினுக்குப் பெலனுண் டாக்கித்
தொகுப்பான விழிகளினை யிமைத்து மூடித்
துறந்திட்டே காட்சியெலாந் தோன்றக் காட்டும்
உகப்பான நயனத்தாற் கண்ணீர் வீழ்த்து
முரையாமல் வாய்மூடு முலாவி நிற்கும்
மிகப்பாலிற் சுவைத்தமொழி மானே கேளாய்
விளம்புவே னுகனுடை யியல்பைத் தானே ௫௬

இயல்பான நாகன்போன் விறமே யாகு
மியம்புகலே யாகமங்க ளெல்லாந் தேரும்
பயில்வாயிற் கொட்டாவி விக்கல் பண்ணும்
படிக்குமிதை யத்திருக்கும் பண்ப தாகும்
செயலான கிரிகான்றன் கரிய வண்ணஞ்
சிந்தைதனி னின்றுபசி யெழுப்பு வித்தங்
குயர்வாக வநுபவித்த லிருத்தல் போத
லுண்ணுக்கு நாசிதனிற் கசிவுண் டாதல் ௩௯

கசிவுண்டா யிருமலும்மன் முடக்கி நீட்டிக்
காட்டுவித்தல் கிரிகான்றன் கண்டு கொள்ளும்
இசைவான தேவதத்தன் படிக வன்ன
மியம்பல்படுத் திடலெழுந்து கோபஞ் செய்தல்
அசையாமல் விழிக்கும்போ தயர்வு நீக்க
லார்ப்பரித்தல் சண்டையிடல் தர்க்கம் பேசல்
நசையாகக் குய்யமிருப் பிடமே யாகு
நல்லதனஞ் செயனடத்துங் குணத்தைக் கேளே ௪௦

குணமான தனஞ்செயன்று னீல வன்னங்
கூரியமூக் கினினின்றுந் தடிக்கு மெய்யை
வணமாக வீங்கிடவே பண்ணு விக்கு
மதிக்கரிய கன்னத்திற் சமுத்தி ரம்போற்
கணமான சுந்தரகோ சந்தா னாகிக்
கடிதாக நீர்வடித்துப் பிராண னோடு
மணமான வாயுவெலாம் போய்மூன் றுநாண்
மண்டைவெடித் தேவரிசை யாகப் போமே ௪௧

தசநாடியின் கூறு

வரிசையாய்த் தசவாயுச் செயலீ தாகும்
வாய்வுகளுக் காதார மாயி ருக்கும்
துரிசில்லாத் தசநாடி தன்னைக் கேளு
சுழுமுனையோ டிடைகலைபிங் கலைகாந் தாரி

சரியான சிங்குவலம் புருட னத்தி
சங்கினிநற் குகுதமொடு வைர வன்றன்
பிரியாமன் மூலத்திற்றோன் றி நிற்கும்
பேசக்கேள் சுழுமுனையின் சூட்சந் தன்னை ௬௦

சூட்சமாஞ் சுழுனைகுய்ய வடிமூ லத்திற்
றோன் றியே கழ்பமதா யெழுந்து மேற்போய்
ஆட்சியா யாதார மாறுஞ் சென்றே
யசைவற்றுச் சிரசளவா யமர்ந்து நிற்கும்
மாட்சியா மிடைகலைபிங் கலையி ரண்டு
மன்னியே கத்திரிக்கோன் மாற லாகி
நீட்சியாஞ் சுழுனைதனைச் சுற்றி யேறி
நெட்டிட்டே சிரசளவாய் நேருந் தானே ௬௧

நேரான மூக்குநடுப் புருவ நெற்றி
நின்றுமே நாசியிரு மூலம் புக்கும்
பேரான காந்தாரி நாபி யுற்றுப்
பெருநரம்பின் வழியாக வுலாவி யேறிச்
சீரான சிரசளவாய்க் கண்டஞ் சேர்ந்து
செப்பியவே ழிசைக்குருவாய் நாவி னின்று
நீரான தைப்பொழிந்து கசியப் பண்ணி
நிற்குமே சிங்குவத்தி நிகழ்த்து வேனே ௬௨

நிகழ்த்துவேன் சிங்குவத்தி மூலந் தன்னி
னின்றுநரம் பெவற்றினும்போய்க் கலந்து லாவி
மகத்தான செவிகளிரண் டினிலுந் தொட்டு
வலமிடமாய்க் கண்களிலே மருவிச் சேர்ந்தே
அகத்தினிலே வருமவத்தை நான்கி னுள்ளு
மளவாகி நின்றிடுமங் கறிந்து கொள்வாய்
சுகத்தான வலம்புருடன் செய்தி கேளு
சுழித்திடுமுந் திக்கிழாய்த் தோன்றுந் தானே ௬௩

தோன்றியே நரம்புவழி விலாவூ டோடித்
தோளொடுகைக் குழிபுக்கு நயனத் துற்றே
ஆன்றசெவி தன்னிலிடம் வலமாய் நின்றங்
கறிவவச மாக்கியே யமர்வன் கண்டாய்
ஏன்றகுகு தன்னுபி தன்னி னின்றங்
கீரல்பற்றி யேகுடலைக் குமட்டி வித்தங்
கூன்றிய வாயாற் றண்ணீர் குழகுழத்தே
யோடுவிப்பன் சங்கினியி னுண்மை கேளே கூச

உண்மைகேள் சங்கினியா நாடி குய்யத்
துறுதியாய் நின்றுடலிற் றத்து வங்கள்
வண்மையாங் கருவிகளை மிஞ்சொட் டாமல்
வசப்படுத்திக் கொண்டிருக்கும் வரிசை யாக
வெண்மையாங் கலைநிறைந்த மதியம் போல
விளங்குமெழின் முகம்படைத்த மின்ன னுளே
திண்மையா நாடியிவை பத்தின் பேருஞ்
செய்கைகுணங் குறிகளையுந் தேர்ந்து பாரே கூரு

ஆறுதாரம்

வேறு

பாருநீ யாறு தாரப் பரிசது பகரக் கேளாய்
சீர்பெறு மூலா தாரஞ் செப்பிடு சுவாதிட் டானம்
ஏர்மணி பூர கத்தோ டனகதம் விசுத்தி தேற்றம்
சேருமாக் கினையா றென்னத் தெரிந்தவர் செப்பினுரே கூகூ

செப்பிய மூலா தாரந் தெரிவருஞ் சூட்ச மாகும்
ஒப்பிலா முக்கோ ணத்தாய்க் கமலநா விதழ்கொண் டோங்கும்
தப்பிலா நடுவோங் காரந் தன்னிலோர் தம்பந் தோன்றி
அப்படிச் சிரமட் டாக வடுத்திடு மேரு வாக கூஎ

மேருவ தான வீட்டில் விளங்கிய கணேசன் றன்பாற்
சேரும்வல் லபையி னேடு சிறந்துவீற் றிருந்து வாழ்வன்
ஆருமங் கறியொ ணுவீ டருங்கதி கொடுக்கும் வீடு
நேரிலா மூல வீடு நித்திய மான வீடே கூஅ

வீடிது தனக்கு மேலாய் விளங்கிய சுவாதிட் டானம்
கூடித ழாறு நான்கு கோணநவ் வெழுத்தைக் கொள்ளும்
பீடுறு துரியா தீதப் பெரும்பதி பிரம னோடு
நாடிய வாணி யாங்கே நயந்துறைந் திடுவ ராமே ௬௯

உறைந்தவப் பதிக்கு மேலா யுறுமணி பூர கந்தான்
பிறிந்திடு மிதழீ ரைந்து பிறைவடி வாமக் கோணம்
அறிந்திடு மெழுத்து மவ்வா மடுத்திடு மரியி னோடு
சிறந்தலக் குமிதா னங்கே சேர்ந்துவாழ் துரிய வீடே ௭0

துரியமாம் பதிக்கு மேலாய்ச் சுழுத்திவீ டனுக தந்தான்
உரியமுக் கோண மாகு மோங்கிடு மிதழீ ராறு
தெரியுமக் கரஞ்சிவ் வாகுந் தேவிருத் திரிதன் னோடு
பொருவரு முருத்தி ரன்றன் பொலிந்திடும் பதிய தாமே ௭௧

பதியதன் மேல்வி சுத்தி பகருஞ்சொப் பனவீ டாகும்
துதியுறு கோண மாறு சூழ்ந்திடு மிதழீ ரெட்டாம்
கதிகொளக் கரம்வவ் வாகுங் கருதரு மயேச்சு ரன்றன்
துதிமயேஸ் வரியி னோடு சூழ்ந்துறை தலந்தா னாமே ௭௨

தலமிதன் மேல தாகத் தங்குமாக் கினைதான் வட்டம்
உலையுமூன் றிதழா கார முரியசாக் கிரத்தின் வீடு
தொலைவறு சதாசி வந்தான் றாமனோன் மணியி னோடே
அலகிலா வருளி னோடு மரசிருந் தளிப்ப னாமே ௭௩

அரசுசெய் பதிமே னாத மங்குல மாறீ ராறில்
இரவிமண் டலமா மப்பா லிருக்குநா லங்கு லத்தில்
உரைசெயும் விந்தி யங்கி யொளிவெளி யாயி ருக்கும்
தெரிசனங் கண்டோர் மண்ணிற் செனித்திடாச் சென்ம மாமே

சென்மமா முடம்பி னுக்குட் டிகழ்ந்துதெய் வீக மான
மன்னிய லாறு தார வகையிவை புகன்றே மாகக்
கன்னலை யமுதைத் தேனைக் கனியினைப் பாலை வென்ற
நன்னய மதுரத் தீஞ்சொ னங்கையே தெரிந்தி டாயே ௭௫

நரம்புநிலை

தெரிந்தவுந் திக்கி லாகச் செப்புமோங் காரந் தன்னில்
இருந்திடு மெழுபத் தீரா யிரமெனு நாடி யெல்லாம்
திருந்திய நரம்புக் கொன்றாய்ச் செறிந்துட லெங்குஞ் சுற்றிப்
பிரிந்திடா தோடி யாலின் விழுதெனப் பின்னி நிற்கும் எசு

பின்னியே நரம்பு நிற்கும் பிரிவினை யுரைக்கக் கேளாய்
சென்னியி னரம்ப தேழா யிரமாகுஞ் செவியி ரண்டில்
கன்னமுட் படவே மூவா யிரமுதாங் கண்க டம்மின்
மன்னியே நிற்கு நாலா யிரமூக்கின் வகையைக் கேளே எஎ

மூக்கின்மூ வாயி ரத்து முன்னூற் றுமுப்ப தாகும்
தூக்கிடிற் பிடரின் கீழ்மேற் றோளிலை யாயி ரந்தான்
ஊக்கமாங் கண்டத் தாறா யிரமுறுங் கையி ரண்டிற்
தாக்கமாய்ப் பார்க்கின் மூவா யிரமுண்டு தொண்டை தானே

தொண்டையின் கீழுந் தொப்புழ் மேலுமாய்த் தோன்று நாடி
ஒண்டொடி கேளா யொன்ப தாயிரத் தொருபத் தாறு
மண்டியே விலாவின் மூவா யிரம்வளர் முதுகந் தண்டில்
அண்டுமெண் ணாயி ரந்தா னிராயிரஞ் சந்தி யாமே எகூ

சந்தடி வயிறி லிங்கந் தன்னிலே லாயி ரந்தான்
பிந்திய கணைக்கால் பாதம் பெருந்தொடை யளவு நின்ற
அந்தவெண் ணாயி ரத்தோ டறுநூற் றைம் பத்து நாலாம்
முந்திய வாயி ரந்தான் மூலத்தி னிற்கு மாமே அ0

மூலமா முந்திக் கீழாய் முடிச்சுடை யுறியொன் றைப்போல்
மேலுறு கண்டத் தந்தம் விரவிய பிடர்க்கீழ்க் கோவை
ஏலவே யெழுபத் திரா யிரநரம் பென்பு நாடி
சாலுமென் றசையிற் கூடிச் சமமாக விருக்கு மெங்கும் அக

எங்குமே யெழுபத் திரா யிரநரம் பெவற்றி னுள்ளும்
தங்கியே யுதிர மூறுந் தசைதனின் மருவி நிற்கும்
பங்கமி லெலும்பி னுள்ளே பரந்துதான் மூளை நிற்கும்
கொங்கைவெற் பனைய மாதே கூறிடு மாயுள் வேதம் அஉ

வேதமாஞ் சென்னி யாதி விளம்பிடு பாத மீறாய்
மோதியே யுடம்பு தன்னின் முடிச்சுறு மிடங்க ளெங்கும்
ஓதர சிலைதோல் போனு லுற்றிடு நரம்ப தென்னத்
தீதிலா நரம்பு பின்னித் தசையுடன் செறிந்து புக்கும் ௮௩

புக்குறு சென்னி கால்கை புருவநெஞ் சொடுமு ழங்கால்
கைக்குழி முழங்கை கண்டங் கணைக்காலிங் கிவையு டம்பின்
முக்கிய தான மாகு முடிச்சுறு மிடங்கள் பத்தும்
சிக்கியே நரம்பு நிற்குஞ் செழுந்தசை யொடுசெ றிந்தே ௮௪

சுவாசம்.

செறிதரு நாளொன் றுக்குச் சிறந்திடும் பிராண வாயு
அறிதா விருபத் தோரா யிரத்தறு நூறு நாசிற்
பறிதரு மதிலி ரண்டு பங்குமீண் டுள்ளே வாங்கும்
வெறியதா யொருபங் குந்தான் வீணிலே பட்டுப் போமே ௮௫

பட்டிடு சுவாச மேழா யிரத்திரு நூறு பாழில்
விட்டுநா ளுக்கு நாளாய் வீணிலே கழிந்த லாலே
மட்டுறு மலர்ப்பூங் கோதாய் மங்கைபங் காள னிட்ட
கட்டளை தன்னுற் கால னுயிரினை காத்து நிற்பன் ௮௬

காத்திடு முடம்பி னுக்குக் கணக்குள வயது நூறு
பூர்த்திய தாயி ருக்கும் பூமியே முதலாம் பூதம்
ஆர்த்திரு பதுவாண் டுக்கொன் றாகவே யடுத்து மெய்யைச்
சேர்த்துநா டொறும்வ ளர்க்குந் திருமலி யணங்க னாளே ௮௭

அணங்கனுப் சென்ம மாதி யாண்டுபத் திளமை நீங்கும்
இணங்குநல் வளர்ச்சி யெல்லா மிருபது வயதிற் போகும்
மணம்பெறு மழகு முப்ப தாண்டுமட் டினிற்போ மேதை
நுணங்கியே குறைவு காணு நுவல்நாற்ப தாண்டி னுக்கே ௮௮

ஆண்டுதா னைம்ப தாகி லவனியப் புவைநெ ருக்கும்
தாண்டிடு மப்பு மேலே நோக்கலாற் றேல்சு ருங்கி

நீண்டரோ மத்து வார நீரூறி வெளுக்கு மேனி
ஈண்டறு பதினி லப்புத் தேயுவை நெருக்கு மென்னே அசு

நெருக்கிடத் தேயு மேலே நோக்கிநின் றிடுத லாலே
பெருக்கமாங் கண்ணின் பார்வை யொளியின்றிப் பிரபை குன்
செருக்கிள ரெழுப தாண்டிற் றேயுவா யுவைநெ ருக்கும் [றும்
தருக்குறு வாயு மேலே நோக்கலாற் றன்சி றுக்கும் சு0

சிறுத்திடு மசன மெல்லாந் திடமின்றி நடையுங் குன்றும்
மறுத்தவாண் டெண்ப தாகில் வாயுவா காய நோக்கும்
குறித்திடு சுவாச நாசிற் குறைந்துமேற் கொண்டு நின்று
பிறித்திரு காதுமந்த மாய்ச் சத்தப் பிரதி குன்றும் சுக

குன்றிடு வயது தொண்ணூற் றினிலேயா காயங் கும்பித்
தொன்றுமான் மாவை நோக்கி யுறுநிலை கலக்க மெய்தி
மென்றிகழ் சகுடநீர் போன் மெய்யினிற் பற்று நீங்கி
மன்றநூ றாண்டி லான்மா வரும்வழி போவ தாமே சுஉ

வயதளவு.

போவதா மெய்யின் மூலச் சுழியினிற் பொலிபி ராணன்
ஆவதாம் வாய்வைக் கும்பித் தரியநேத் திரமை யத்தில்
தூவிரு நாசி பாயுஞ் சுவாசமூன் றொன்றைக் கட்டிற்
சாவதில் லாம லென்றுஞ் சகத்திற்சஞ் சரிக்க லாமே சுங

சஞ்சரித் தாரு தாரத் தத்துவ முடிவி னின்று
விஞ்சிய பரமா னந்த வெள்ளத்தி லாழ்ந்து மூழ்கித்
துஞ்சுதல் பிறத்த லின்றிச் சுகபோகந் துய்த்து வாழ்வார்
பஞ்சின்மெல் லடியி னாளே பரிந்திது பண்ணிப் பாரே சுச

பண்ணிய வுடம்ப தெங்கும் பரந்துதா னரம்பு நிற்கும்
அண்ணிய நாடி தன்னை யரியசாத் திரங்க ளெல்லாம்
எண்ணியே படித்தா ராய்ந்த வியல்புடை யறிஞர் சொன்ன
திண்ணிய குறிகு ணத்தின் செய்திகேள் தோகை மானே சுரு

உரோகவுற்பத்தி

தோணையே யெழுபத் தீரா யிரமதாச் சொலுநா டிக்குள்
ஏகமாய் நாடி பத்தென் றியம்பின ரவைக்குண் மேலாய்
ஆகிய நாடி மூன்று மதின்வழி நோய்கள் சேரும்
பாகண மொழியாய் நோய்க ணிலைமையைப் பகரக் கேளே கசு

பகருவே னுலக மெல்லாம் படைத்தநான் முகத்தோன் றன்பால்
மிகுநகை மதிமு கத்து மேதினிப் பெண்சென் றேத்தித்
தகுமுயிர் பலவு மென்பாற் சஞ்சரித் திடுகை யாலே
அகமெலி வுற்றேன் றுங்க வல்லளோ வைய வென்றாள் கஎ

என்றுநின் றுரைத்துப் போற்று மெழில்கொள்பூ மாதை நோக்கி
நன்றெனக் கமல யோனி ஞாலமேற் பாரந் தீர்ப்பான்
வென்றிசேர் மிருத்து வென்னுந் தெய்வத்தை விதித்தல் செய்தான்
அன்றந்த மிருத்துத் தானே ரிவையா யமர்ந்து நின்ற கஅ

நின்றவம் மிருத்து நாம நிகழ்கலை கண்டி யென்பாள்
சென்றெதி ரயனைப் போற்றித் தேவனே யடியா டன்னை
இன்றுநீ விதித்தல் செய்த தென்னென விரங்கிக் கண்ணீர்
பொன்றிகழ் முலைமேற் சோர வழுதிவை புலம்பிச் சொன்னாள்

புலம்பிய மாதின் கண்ணீர் பொம்மென வுருத்து விம்மி
அலம்புரி மூவேழ் கோடி யோகமா யடர்த்து மேவ
விலம்புரை புருவ நோக்கார் மெல்லியல் வெருவி யெந்தாய்
சலம்பயில் ரோக மென்பாற் சனித்திட்ட வகையே தென்றாள்

ஏதென வணங்கி நின்ற மிருத்தையெண் கண்ண னோக்கிப்
போதவே பலசென் மத்துட் புக்குநீ சார்ந்து நின்று
வேதனை செய்பு நோயாய் விதிப்படி மாய்த்துப் பூவின்
பாதிட ரகற்று கென்றே மலரயன் விட்ட தாமே க0சு

வேறு

விட்ட வெம்பிணி யாவும் விரவியே
தொட்ட தெண்டிரை சூழுல கத்திடை

நட்ட மேயுற நல்லுயிர் யாவையும்
மட்டு லாவு மவைநவில் வாமரோ ௧௦௨

நோயின்தொகை

நவிலும் வெம்பிணி நாலாயி ரத்தின்மேல்
அலமில்நா னூற்று நாற்பத்தெட் டாமவை
பலவு டம்பிற்ப யிலுங்க ணக்கினைக்
குவலயத்திற் குறிக்கு மனிதர்க்கே ௧௦௩

ஒவ்வோருறுப்பிலுண்டாகும் நோய்களின் கணக்கு

மனிதர் சென்னி மருவுமுன் னுற்றேழு
கனிகொள் வாயிற் பதினெட்டுக் காணுறும்
இனிய நாசி யிருபத்தே ழாஞ்செவி
பிணிவ ரைம்பத் தாறெனப் பேசினர் ௧௦௪

வேறு

பேசிய நோய்தான் கண்ணிற் பெருகிடுந் தொண்ணூற் றாறு
மாசிலாப் பிடரி தன்னின் மருவிடு நோய்பத் தாகும்
ஏசில்கன் னத்தின் முப்பத் திரண்டென வியம்பும் வேதம்
காசணி முலையாய் கண்டத் தாறென்பர் கலைவல் லோரே ௧௦௫

கலைவல்லோ 'ருந்தி தன்னி லூற்றெட்டுக் கைக டம்மில்
நிலைபெறு நூற்றி முப்ப தாமென்பர் நெடுங்கு தத்தில்
உலவுநோய் நூற்றொன் றாகு மொண்டொடி மானே கேளாய்
வலமிகு தொடையிற் றொண்ணூற் றொன்றென வகுத்திட் டாரே

வகுத்திடு முழங்கால் கெண்டை மருவுநோய் நாற்பத் தேழு
பகுத்திடு மிடைநூற் றைந்தா மிதயநூற் றாறு பற்றும்
தொகுத்திடு முதுகு தன்னி லைம்பதிற் றிரண்டாய்ச் சொல்வர்
சகத்தினி லெவரும் போற்றத் தகுமெழிற் றைய லாளே ௧௦௭

தையலே யுள்ளங் காலிற் சாற்றுநோய் முப்பத் தொன்றாம்
ஐயமில் புறங்கா றன்னி லடையுநோ யிருபத் தைந்தாம்

மெய்யுறுப் பெங்கு மாக மேவியே யிருக்கு நோய்கள்
பையவே பார்க்கின் மூவா யிரத்தொடு பகரு நூறே க0அ

நூறுமெய் யினிலெண் சாணு நுவனுலா யிரத்தின் மேலும்
கூறுகா ணூற்று நாற்பத் தெட்டெனக் குறிப்பி னுலே
தேறுநூற் கடல்க டந்து தெளிந்தமா முனிவர் சொன்னார்
மாறிலா வுலகந் தன்னில் வாழ்ந்திடு மாந்த ருக்கே க0கூ

மாந்தரா னவருக் கெல்லாம் வரும்பிணித் தொகையி தாகும்
ஆய்ந்திவை பார்க்கும் போதி லந்தத்தா னங்க டோறும்
ஏய்ந்திடு வாத பித்த வையத்தி னிசைந்து தோன்றும்
வாய்ந்திடு முடம்பு தன்னை வருத்திடும் வன்மை கொண்டே கக0

நோயின் வகை.

கொண்டதோ ருடம்பிற் றோன்றுங் கொடியநோய் வகையைக் கூறின்
மண்டுவெஞ் சுரமே தோஷம் வருசன்னி வலியுள் வீச்சும்
அண்டொணு மூல ரோக மடுத்திடுங் கணையே சூலை
பண்டுள வக்க ரங்கள் பீனிசம் பகுத்துப் பாரே ககக

பாருநீ குட்ட ரோகம் பகர்மாந்த மெகுத்து வாயு
சோர்விலா துலைவு செய்யுந் தொய்விளைப் பீழை காசம்
சாரும்வா யுக்கி ராணி தங்கிடு சலக்க ழிச்சல்
வாருறு முலையாய் சோகை வருத்திடு மேக நோயே கக௨

மேகமாங் கரப்பன் மேனி வெதுப்புடன் சொறிசி ரங்கு
தாகமே மிகுகா மாலை தங்கிடுங் கழிச்சன் மிக்க
சோகமே விளைத்து வாட்டுஞ் சுவாசநோய் வாத ரோகம்
ஆகுமிந் நோய்க ளன்றி யனேகமா நோய்க ளுண்டே ககங

உண்டுநோய் வாத பித்த வையங்க ளுறுதொந் திப்பால்
மண்டியே வருத்து மென்று மறைமொழி யுரைக்குங் கண்டாய்
கொண்டிடு குறிகு ணங்கள கூறிய முறைவ ழாமல்
பண்டித ருணரும் வண்ண மலைமுனி பகர்ந்த தாமே ககச

வேறு.

பகர்ந்த நூல்கள் பலபல சாத்திரம்
உகந்து கற்றுணர்ச்சியி னுன்மிக
அகந்தெ ளிந்து மணிமந்த்ர மாதியால்
சுகந்த ரும்மெனச் சொற்றனர் திண்ணமே கசரு

திண்ண மாம்பிணி சென்மத் தொடர்ச்சியால்
நண்ணி வெந்துயர் நல்குமி துண்மையே
எண்ணி டாதிடர் செய்யு மிறப்பினை
மண்ணு ளோர்சொல்லு வாரிம் மரபினுல் கசகூ

மரபிற் பண்டிதர் வன்பிணி யாமென்பர்
பெரிய மந்திர வாதிகள் பேயென்பர்
உரிய சோதிடர் கோளென வோதுவர்
விரிவி னோர்கள் விதிப்பயனென் பரே ககஎ

நோயில்லாவியல்பு

வேறு

பயனுறு முடம்பி னுள்ள வங்கிதான் பகை கொளாமல்
வியனுறு காலொ டொத்து மேவியே சமான மாகில்
அயனமாம் பொசிப்ப தெல்லா மடங்கியே சீர ணிக்கும்
வயனமாய் நோய்கள் வாரா மாண்புடன் சுகமுண் டாமே ககஅ

நோய்தோன்றுமியல்பு

சுகமதாய்க் காற்றெ ழும்பிச் சொலிக்கவே யங்கி தன்னை
அகமதி லாது மாகி லதிகமாய்ப் பசியுண் டாகும்
மிகநெருப் பொடுகால் கூடி மீறியே மண்ணைச் சார்ந்தால்
பகர்தரு வாத ரோகம் வருமெனப் பன்னி னாரே ககசு

பன்னிய மண்டான் மீதிற் பரிந்துவாய் வுடன்றொந் திக்கும்
பின்னிய காற்றுந் தீயும் வானுறிற் பித்த மீறும்
மன்னிய தீயுங் காற்று மப்புறி லைய முண்டாம்
வன்னியத் தியினைப் பற்றில் வந்திடும் பித்த ரோகம் கஉ0

பித்தமாந் தீயுங் காற்றும் பெலத்துமூ லையினிற் புக்கின்
மெத்தவே நீர்க டுத்து மேகநோய் வந்து சேரும்
சத்திப நீர்கால் வன்னி சிங்குவை தானுங் கூடி
ஒத்துமூ லத்திற் சேர்ந்தாற் சன்னிவந் துருப்ப தாமே கஉக

உருப்பதாஞ் சுழுனை யுற்றுக் காந்தாரி யோங்கித் தீயைப்
யரப்பிடி ஆடலம் வற்றிப் பரிவுறு தாதுங் குன்றும்
மருப்பயில் கலையி ரண்டு மணிவிசை நரம்பி னுற்றுற்
யருப்பிள வைகள்புண் பற்றி நரம்பினைத் துளைக்கும் பாரே கஉஉ

துளைத்திடு மங்கி காற்றுத் துன்னியே நீருங் கூடி
வளைத்துடன் விசைந ரம்பை மடக்கியே சன்னி தன்னை
விளைத்துயிர் மாளச் செய்யு மிகுவாதம் பித்த மையம்
இளைத்திடா தெழுந்து மீறி லிதுசன்னி யெனச்சொன் னாரே

சொன்னகாற் றங்கி கூடி மந்தத்திற் றுன்னி நிற்கில்
பின்னமாய்ச் சுரங்க ளெல்லாம் விரைவாக வந்து சேரும்
மன்னுகாற் றுடனே தீயு மண்டையி லேறு மாகில்
துன்னுமே பீனி சம்மூக் கனேகநோய் சிரத்தி லாமே கஉச

சிரத்தினிற் காற்று மீறித் தீயொடு நீரைச் சேர்த்துக்
கருத்துற வேற்று நீரைக் காண்மறித் திடுத லாலே
உரைத்தகண் ணொளிதான் குன்றி யுற்றிடு நயன ரோகம்
இரத்தமாஞ் சயம்நாய் வந்தே யேறிடு மங்கி யாலே கஉரு

அங்கிதா னெழுந்து மேலா யப்புவை யேற்ற லாலே
பொங்கிய மதுரம் வானி லூறிமண் டையுட்பொ சிந்து
தங்குநீர் கீழி றங்கிச் சார்ந்துநெஞ் சினிற்சு வாசம்
மங்கியே குறைத லாலே வருங்கய ரோக மாமே கஉசு

கயமான பெருந ரம்பிற் கலந்துடன் கால்வி சைத்து
வயமான தமரை விம்மி மடக்கியே நீரெ ழுந்தாற்
பயமான சூலை நோய்கள் பலவும்வந் தடுப்ப தாகும்
நியமான குடலி னுள்ளே நெல்லுமி கல்லுத் தாமே கஉஎ

கல்லொடு மயிர்நெல் லின்வால் கசடது குடலிற் பற்றில்
வல்லமா சதுவா யன்னஞ் செரியா தம்மாகி னாலே
புல்லிய கிருமி சேர்ந்து குன்மநோய் பொருந்துமென்க
அல்லிருங் குழலி னாளே யடுக்குநீ ரிழிவைக் கேளே கஉஅ

இழிந்திடு நீர்தான் மாத ரிச்சையி னதிபோ கத்தால்
அழுந்தலம் புருடன் மூலத் தடுத்திட வாயு கீழாய்
விழுந்துதி ரத்திற் சேர மேவிடு மூலச் சூட்டால்
வழிந்துசின் னீரி ரத்தம் வருமினிக் கிரந்தி தானே கஉகூ

கிரந்திதான் கபாலந் தன்னிற் கிளர்ந்திடை கலையா நாடி
துரந்திட வாயு தானுஞ் சொருகியே சுழியைச் சேர
நிரந்தசீ யிரத்தம் பற்றி நீங்காமற் கோர மாகிற்
பரந்திடுங் கிரந்தி சூலை பற்சூலை விரவு மென்னே கநா0

விரவிய நாக னத்தி கபாலத்தின் மீது மோதப்
பாவிய வன்னி கூடி விசைநரம் பதனைப் பற்றி
அரவு போல் வளைக்க வூனங் குறுகியே யடைத்துக் காதில்
கரவதாய் நோய்கள் சேர்ந்து தொந்திக்குங் காதிற் றானே கநாக

காதிய வன்னி மீறிக் கனன்றுநா னத்தி புக்கி
வாதியாய் மூலத்துற் றூன் மலசல மந்த மாகி
மோதியே கழுத்து மைந்து முக்கியே யிரத்தம் வீழ்ந்து
பேதியாங் கிராணியாகிப் பெலன்கெட்டுச் சீதம் வீழும் கநாஉ

சீதமா மபான வாயுச் சீயுடன் காலுங் கூடிப்
பாதமே சிரமீ றாகப் பற்றிநின் றெதிர்சொ லிக்கிற்
சேதமாய் மெய்தி ரைந்து சேர்ந்துமே கச்சூ டாகி
மோதியே கடுத்து நீங்காப் பிரமேக முதிர்ந்துண் டாமே கநாநா

முதிர்தரு வாத மெண்ப தூறுமுரண் பித்த மையெட்
டெதிருறு சிலேற்ப னந்தா னிருபதென் றுரைத்தார் மேலோர்
பிதிர்சுணங் கணிந்து விம்மும் பெட்புடை முலையி னாளே
சதிசெயு நோய்க ளெல்லாஞ் சசர்ந்திடு மாறு கேளே கநாச

நடக்கைப் பிழை

ஆறுகேள் பெண்கண் மேலே யதிகமா மோகத் தாலும்
கூறிய மருத்திட் டாலுங் குறைவிலா நடையி னாலும்
மீறுடற் கடுப்பி னாலு மென்பனி நனைத லாலும்
சிறிய கோபத் தாலு மலசலஞ் சிக்கை யாலும் கநரு

சிக்கென வுண்டு பின்பு தெண்ணீரின் முழுக லாலும்
மிக்குநீர் பருகை யாலும் வெய்யிலில் நடக்கை யாலும்
தக்கசீ தளத்தி னாலுஞ் சமிக்குமுன் னுண்கை யாலும்
ஒக்கவுண் டோட லாலும் பசிக்குண வில்லா தாலும் கநசு

இல்லாத மிடிமை தான்வந் தெய்திய கவலை யாலும்
பொல்லாத முள்ளு நெல்வா லுமிமயிர் பொசிக்கை யாலும்
மெல்லமுன் பயின்ற நெய்பான் முழுக்கினை விடுத லாலும்
வல்லவா கனங்க ளேறி வருந்துட னுலைவி னாலும் கநஎ

உலைவறு நீரை யண்ணாந் துண்டிடு தன்மை யாலும்
தலைதனிற் சுமையி னாலுந் தடியடி படுகை யாலும்
தொலைவிலாக் கனல்சேர் கானற் சுனையிடை முழுக லாலும்
இலகிய காதின் மூக்கி னீவண்டு போகை யாலும் கநஅ

போகலா மந்தத் தாலும் பொல்லாத லகிரி யாலும்
பாகமாய்ப் புகற்கா லத்திற் பசுவின்பா லுண்கை யாலும்
வேகமாங் காலை வெய்யில் மெய்படக் காய்த லாலும்
சோகமாங் காற்றி னாலும் பரிமளந் துய்க்கை யாலும் கநகூ

துய்த்திடாப் போசனத்தைச் சுகம்பெறத் துய்க்கை யாலும்
மெய்த்தநல் வாசங் குன்றி மடிந்தபூ முகக்கை யாலும்
வைத்திடு நிதிகள் கெட்டு வருந்துறு கவலை யாலும்
பைத்தபூண் முலையாள் போகத்தி டக்கைகீழ்ப் படுக்கா தாலும்

படுசரு கூறலான தண்ணீரைப் பருக லாலும்
வடுமிகு தனக்கு மூத்த மாதரை மருவ லாலும்
விடுமல சலத்தை நாளும் விடாமலே யடக்க லாலும்
நெடுகாட்சா தித்த தொன்றை நீக்கிடு பயிற்சி யாலும் கசக

பயிற்சியாந் தயிலந் தேய்த்து நாட்படப் படித லாலும்
முயற்சியாய் முடியா தொன்றை முடித்திட முயற லாலும்
அயர்ச்சியாய்ப் பகற்கா லத்தி லதிகநித் திரையி னாலும்
உயர்ச்சியாந் தாம்பூ லம்மிக் குண்டிடு பொல்லாங் காலும் கசஉ

பொல்லாத பாஷா ணத்தின் புகைகண்ணிற் படுத லாலும்
நல்லதன் மரபுக் கெய்தாத் தீமைநண் ணுகையி னாலும் [லும்
தொல்லையூழ் வினையின் சென்மத் தொடர்ச்சியாங் கன்மத் தா
வெல்லரி தான கால பேதத்தின் விகற்பத் தாலும்

விகற்பமில் லாமன் முன்னோர் விளம்பிய பிழைக டம்மால்
புகப்படு நோய்க ளெல்லாம் பொருந்திமெய் தோன்றும் போதி [ல்
மிகப்படு வாத பித்த சேற்பன மொன்றின் மேவி
அகப்படு முள்ளாய்ப் பஞ்ச பூதியந் தனைய டுத்தே கசச

வாதபித்த சேற்பனத்தின் குறிப்பு.

பூதிய பேத மாகப் பொருந்திய வுடம்பி னுக்குள்
ஓதுநா டிகளுக் கெல்லா முறுதியாஞ் சூட்ச நாடி
வாதபித் தத்தோ டையம் வகுத்திடு மூன்ற தாகும்
ஆதியாஞ் சிவன்மால் வேதா வாமிவை நிறத்தைக் கேளே கசரு

நிறமிகு சேற்பம் வெள்ளை நிறைபித்தஞ் சிவப்ப தாகும்
திறமிகு வாத நீல வன்னமாய்ச் செப்பும் வேதம்
குறைவில்வா தத்தின் வீடு குய்யத்தின் கீழ தாகும்
உறைவிடம் பித்தங் கண்ட முச்சியி லைய மாமே கசசூ

ஐயமாஞ் சிலேற்ப னந்தா னெலும்பினை யடுத்து நிற்கும்
துய்யதாம் பித்தந் தோலிற் றுவன்றியே கலந்து நிற்கும்
செய்யவா தந்தான் சோரி தன்னிலே செறிந்து நிற்கும்
பையர வல்குன் மானே பரிவினுங் சேட்டி டாயே கசஎ

கேட்டிடாய் வாதங் காற்றுக் கிளத்திடு பித்தந் தீயாம்
மூட்டிய சேற்ப னந்தா னீரென மொழிவர் மேலோர்

காட்டிய புளிப்பு வாதங் கைத்திடல் பித்த மாகும்
தீட்டுவேல் விழிநன் மாதே தித்திப்புச் சேற்ப மாமே கசஅ

இத்திக்கு மொழியாய் வாதஞ் சேர்ந்திடு முதயந் தன்னில்
பத்துநா ழிகையா மப்பாற் பகருச்சிக் காலம் பித்தம்
எத்திய பத்துக் கன்னல் மேவிடு மையம் பத்தாம்
நித்தமு மிராப்ப கற்கு நிற்குமித் தன்மை காணே கசகூ

தன்மையாம் வாதகால முப்பதாண் டளவுந் தானும்
மன்னிய பித்த காலம் வருடமுப் பத்து மூன்றும்
பன்னிய வைய முப்பத் தாறெனப் பகர்வ ராண்டு
வன்னமெய் யினையிம் மூன்றும் மருவியே வளர்க்கு மாமே கரு0

மருவிய வயது முப்பான் மட்டுமே வளர்க்கும் வாதம்
விரவிய வறுபான் மூன்று மட்டுமே பித்த மேவும்
உரியநூ றுண்டு மட்டு முடம்பினை வளர்க்குஞ் சேற்பம்
வருமிவை மூன்றுங் கூடி வளர்க்குமிப் படியா மென்னே கருக

படிதவிர் வாதந் தானும் பகரிடை கலைய தாகும்
நெடியதோர் பித்தந் தானே நிகழ்த்துபின் கலைய தாகும்
கடியதோர் சிலேற்ப னந்தான் கவின்சுழு முனைய தாகும்
பிடிபட வறிந்து முன்னோர் பேசினர் பெண்மை யானே கருஉ

பெண்மையிற் சிறந்த மென்சொற் பிடிநடை மானே கேளாய்
வண்ணமின் மலத்திற் கூடிக் கலப்பது வாத மாகும்
திண்ணிய சலத்திற் கூடிச் செறிவது பித்த மாகும்
கண்ணிய சுக்கி லத்திற் கலப்பது சேற்பந் தானே கருங

கலப்பதா முயிரில் வாதங் கடும்பித்த முடம்பி னிற்கும்
சலத்துறு மருவி தானு மையத்திற் சார்ந்து நிற்கும்
வலத்துய ரரைய ரைக்கால் வாதங்கால் பித்த மாகும்
மெலத்திடு மரைக்கா லைய மெனமுன்னோர் பேசி னோரே கருச

வாதபித்தசேடத்தின் வந்திப்பு.

மூந்திய வானி யாடி முதியவர் தங்கோ டிக்கும்
பிந்துமா வணிபு ரட்டை பித்தம்வந் திப்ப தாகும்
தொந்திக்கு மைய மாசி பங்குனி தோன்று மென்க
இந்தவா றுக மூன்று மதிகரித் தேறி நிற்கும் ௧௫௫

நிற்குஞ்சித் திரைக்குந் தைக்கு நீங்கியே சமிக்கு மையம்
சொற்றனு விடபத் துக்குஞ் சோர்ந்திடும் பித்த மென்க
ஐப்பசி கார்த்தி கைக்கே யடங்கியே சமிக்கும் வாதம்
விற்புரு வத்தி னுளே மிஞ்சாம லொடுங்குந் தானே ௧௫௬

ஒடுங்கிய கலையி ரண்டு சுழுமுனை யோடிம் மூன்றும்
அடங்கிடும் வாத பித்தத் தத்திசிங் குவைகாந் தாரி
இடம்படு வைர வன்று னிசைந்தசங் கினிகு குத்தன்
மடங்கலம் புருட னேழும் வாய்த்திடுஞ் சேடந் தானே ௧௫௭

சேடம்வெம் பித்தம் வாதஞ் செப்பிய மூன்றி னுக்கும்
வீடதா முடம்பி னுள்ளே வியாதியு மிவையாற் றோன்றும்
ஆடிடு சித்தி யெல்லா மிம்மூன்றி னுமே யாகும்
நாடியின் குணங்க ளெல்லா நங்கையே நயந்து கேளே ௧௫௮

அட்டதானப்பரீட்சை.

நயமுறு வாக டத்தோர் கையின டியைநன் னுவை
வியனுறு கண்ணை மெய்யை விளங்குவான் முகத்தைப் பல்லைக்
கயமுறு மலச லத்தைக் கருத்துறக் கண்டு நாளும்
பயனுறத் தெளிந்திவ் வெட்டும் பார்த்திடல் பண்பு தானே ௧௫௯

நாடிபார்க்கும் விதம்.

பண்புறு மாட வர்க்கு வலக்கரம் பாவை மார்க்குக்
கண்பெறு மிடக்கை யாகுங் கதித்தவங் குட்ட மூலத்
தெண்பெற நெட்டி வாங்கி யேறநெற் கிடைவிட் டப்பால்
நண்புடன் விரல்கண் மூன்றி னடியின் றெரிந்தம் பாரே ௧௬௦

நாடி நடை.

தொந்தமாம் பிராண வாயுச் சொல்லிய கலைக ளோடு
வந்துதான் சுழுனை தன்னை வளம்பெறச் சூழ்ந்து காரின்
முந்திய காது விம்மி முடிச்சுறு கரங்கா றன்னில்
அந்தமாய்த் தோன்றி நிற்கு மசைவினி னாடி பாரே கசுக

பார்முதல் விரற்கீழ் வாதம் பகர்நடு விரற்கீழ்ப் பித்தம்
ஆர்தரு நடுவி ரற்கி ழடுத்திடுஞ் சேற்ப மாகும்
சேரவிம் மூன்றுங் கூடித் தெளிவுறப் பின்னி யோடில்
கூர்தருங் கொடிய சன்னிக் குணமெனக் குறிக்கலாமே கசுஉ

வேறு

குறித்தறியு நாடிகளின் பரீட்சை கேளுங்
குக்குடமோ ணன்மஞ்ஞை முயலே யன்னம்
மதித்திவைபோன் மெல்லநடக் திடுகில் வாதம்
வயங்காமை யட்டைபுறாத் தாராவென்ன
வெறித்துமிடுக் காய்நடத்தல் போலாம் பித்தம்
விளங்குமிளங் கிளிமொழியே வேலிமீதில்
கொறித்துநடந் திடுங்குருவி தவளை நாகங்
கொக்குறக்கம் போலையங் குதிக்குந்தானே கசுஙு

தொந்திப்பு

குதிக்கின்ற நாடிகடா மொன்றோ டொன்று
கூடிநடந் திடலதுவே தொந்த மாகும்
துதிக்கின்ற வாதமிரண் டொன்று பித்தஞ்
சுமைசுமப்போ னிடுப்பசைவின் றோற்றம் போலும்
விதிக்கின்ற பித்தமிரண் டொன்று வாதம்
விரவிநடந் திடிற்பாம்பின் பிணைதல் போலாம்
மதிக்கின்ற சேடமிரண் டொன்று வாதம்
வாலரணை முறிபோலத் துடிக்குந் தானே கசுச

துடிப்பான சேடமிரண் டொன்று பித்தந்
தூங்குபிள்ளைத் தொட்டிலசைத் திடுதன் மானும்

கெடிப்பான பித்தமிரண் டொன்று சேர்ப்பங்
கிளிமொழியே துடியடிபோற் கிளந்தே யோடும்
வடிப்பான வாதமிரண் டொன்று சேற்ப
மற்கடத்தின் பாய்ச்சலென மருவி யோடும்
பிடிப்பாக மூன்றுந்தா னொடு மாகிற்
பேனரணை வான்முறிபோற் றேய்ந்து போமே கசூ௫

நாக்கு

தேய்வான வாதரோ கிக்கு நாக்குச்
சிதறிவெடித் துப்பிசைந்து கறுத்து முள்ளாம்
ஆய்வான பித்தரோ கிக்கு நாக்கங்
கடர்ந்துபச்செசன் றேவரண்டு சிவந்து காணும்
மாய்வான சேற்பனரோ கிக்கு நாக்கு
வழுவழுத்து வெளுப்பாய்நீர் வந்தே யூறும்
தோய்வான தொந்தரோ கிக்கு நாக்குச்
சொல்லில்லரண் டேதிமிர்த்துச் சூடுண் டாமே கசூ௬

கண்

சூடுபெறு வாதரோ கிக்கு நோக்குத்
துரிசாக நொந்துகறுத் தேநீர் சோரும்
பாடுபித்த ரோகிக்குக் கண்ணெ ரிந்து
பச்செசனவே சிவந்திருக்குஞ் சேற்ப ரோகிக்
காடியகண் வட்டித்துப் பீளை சாறி
யதிகவெளுப் பாயிருக்குந் தொந்தத் தோர்க்கு
வாடிமிகக் கண்சிறுத்துக் கருமை வெண்மை
மஞ்சளுமா மெனவுரைத்தார் மறைவல் லோரே கசூ௭

உடல்

மறைகூறும் வாதரோ கிக்குத் தேகம்
வளர்ந்துகுளிர்ந் தேநோவா யுதறி நிற்கும்
நிறைவான பித்தரோ கிக்கு மெய்தா
னிமிர்ந்துமிக வெதும்பியுட்ட ணித்துச் சூடாம்

குறையாத சேத்துமரோ கிக்கு மெய்தான்
குளிர்ந்துசயித் தியமாகி வேர்வுண் டாகும்
முறையான தொந்தரோ கிக்குத் தேகம்
மொழிந்திடிற்பல் பேதமாந்தொட்டுப் பாரே கசுஅ

தொட்டிட்ட வாத ரோகிக்கு நாளுஞ்
சொல்லுகிற்றுன் மிகவுநிறங் கறுத்தி ருக்கும்
மட்டிட்ட பித்த ரோகிக்குத் தானே
மஞ்சணித்து நிறம்பசந்து சிவந்து காணும்
கெட்டிட்ட வையரோ கிக்கு மெத்தக்
கெழுமிவெளுத் துடல்வற்றித் திரைவு காணும்
நெட்டிட்ட தொந்தரோ கிக்குத் தானு
நிறம்வெள்ளை மஞ்சள்மிக்க கறுப்புண் டாமே கசுசு

சலம்

கறுக்கின்ற வாதரோ கிக்கு நீர்தான்
காணவே மிகத்தெளிந்து வெண்மை யாகும்
மறுக்கின்ற பித்த ரோகிக்கு நீரு
மஞ்சணித்துச் சிவந்துசொற்ப மாயி ருக்கும்
செறுகின்ற சேற்பரோ கிக்கு நீருஞ்
சிவந்துவெளுப் பாய்நுரைத்துச் சிந்தி வீழும்
நிறுக்கின்ற தொந்தரோ கிக்கு நீர்தா
னிறஞ்சிவந்து வீழுமிது நிசம தாமே கஎ0

மலம்

நிறமான மலம்வாத ரோகிக் குத்தா
னெருங்கிநுரைத் தேபுளியாய்க் கறுத்துக் காணும்
வசமான பித்தமல மஞ்ச ளாகி
வந்துசிவந் தேசிறுகக் கைப்ப தாகும்
கசமான ரோகிமலம் வெளுப்பாய் மெத்தக்
கனத்துமுறிந் தேயுப்பாய்ச் சீதம் வீழும்
துசமான தொந்தமலம் பலபே தத்தாய்ச்
சுறுக்கிட்டு வரண்டுமிகக் கொதியுண் டாமே கஎக

சத்தம்

கொதித்துவரும் வாதரோ கிக்குச் சத்தம்
குளறுமற் சமமாகத் திக்கிப் பேசும்
மதித்தபித்த ரோகிக்குச் சத்த மெத்த
வலுவாக வேயதிக சுறுக்காய்ப் பேசும்
சதித்தவைய ரோகியுடை சத்தந் தானுஞ்
சலிப்பாக வுள்ள னுங்கிக் கம்மிப் பேசும்
பதித்ததொந்த ரோகியுடை சத்தந் தானே
பலவாகத் தொனிக்குமெனப் பாடி னுரே கஎஉ

பாடியதா யுள்ளவிந்த வட்ட தானப்
பரீட்சைதனைத் தெளிவாகப் பார்த்துத் தேர்ந்து
கூடியதோர் நாடிகளின் வகைய தான
குறிகுணங்க ளனைத்தினையுங் குறித்துப் பாரு
நாடியது சன்னிக்கு மந்த மாகி
நடுங்கியே பெண்போல நடந்து மெல்ல
ஆடியபம் பரம்போலச் சுழன் று பின்னி
யானைவான் முறிபோலக் குறைந்து போமே கஎரு

குறைந்துபோம் வாதத்தின் மந்த நாடி
கொடுமத யானையி னடையும் பந்தும்போ லாம்
நிறைந்தபித்த மந்தத்தி னுடி தானே
நீண்டவிலைப் புழுவேங்கை போலே பாயும்
உறைந்தவைய மந்தமா நாடிதீப்த்
துற்றசுடர்க் கொழுந்தசைவி னுேடி நிற்கும்
அறைந்திடுபோ சனத்தாலே மந்தம் பற்றி
யாகியநோ யெல்லாவந் தடுப்ப தாமே

விகாரநாடி கெர்ப்பநாடி

அடுத்தவரால் வாளைமச்ச மெனப்பாய்ந் தேறி
யானையின் மும்மதம் போலவார்ப் பரித்துக்

கடுத்துநிமி டத்தில்விட்டு நிற்கு மாகிற்
காமவிகா ரங்கொண்டோர் நாடி யாகும்
எடுத்திடுபோ சனஞ்செய்தோர் நாடி யாமை
யியக்கம்போன் மெத்தனவா யிருக்கு மென்ப
விடுத்தபுழு வெறும்பதுபோன் மெல்ல வூர்ந்தான்
மெல்லியர்க்குக் கருப்பமென விளம்ப லாமே களரு

பூப்புநாடி

விளம்புகின்ற கின்னரத்தின் மெலிவ தாகி
மெள்ளவே நீரோட்ட மாயி ருக்கில்
இளம்பருவத் தன்னநடை மயிலஞ் சாய
லேந்திழையார் பூப்பான நாடி யாகும்
உளம்பரிவாம் நீர்படிந்தோர் நாடி மெத்த
வுள்ளடங்கிப் புழுத்தெறித்தா லென்ன வோடும்
தளம்பிவழி நடந்தோர்க்குங் களைத்தோ ருக்குந்
தருச்சுற்றுங் கொடியெனவே சாற்ற லாமே களசு

பூதநாடி

சாற்றுகல்லுத் தனையோங்கி யெறிதல் போலுஞ்
சக்கரஞ்செக் குச்சுற்றுந் தன்மை போலும்
ஊற்றமுறுங் குதிரைகடாப் பாய்தல் போலு
மோங்கியடித் திடவெழும்பும் பந்தைப் போலும்
ஆற்றலுட னுயர்ந்தேறிக் குதித்தல் போலு
மடங்காமற் படபடெனப் பித்த மோடின்
மாற்றவரி தாம்பூத நாடி யென்றே
வாகட ரெல்லா முரைத்தார் வையமீதே களஎ

மரணநாடி

வையமிகு வாதமெனு நாடி தானே
வளைந்துமடங் கிப்பருத்தால் வாதை யுண்டாம்
செய்யபித்த நாடியது புரண்டு விம்மிச்
சிலும்பியே திரண்டிடுகிற் சேரு நோய்கள்

ஐயமா கியநாடி தனித்தே யோங்கி
யசைந்திடுகிற் பலநோய்வந் தடுப்ப தாகும்
பையவே தொந்தமா நாடி பின்னிப்
பதறிடுகின் மரணமெனப் பறைய லாமே

பறையக்கேள் வாதமது முன்னும் பின்னும்
பாய்ந்துவளைந் தோடிலெட்டு நாளிற் சாவாம்
நிறைபெற்ற கயிற்றூசல் வீச்சுப் போல
நின்றோடிற் பக்கமொன்றில் விறைத்தே யோடில்
குறைவுற்ற நாண்மூன்றின் மரண மாகுங்
குதிரைப்பாய்ச் சலைப்போலக் குமிறி யோடில்
மறைவுற்றே நாளிரண்டின் மரண மாகு
மயிர்ப்பேன்போ லோடிலுடன் மரிப்ப தாமே

மரித்திடவே வரும்பித்த நாடி பாம்பு
வளைந்தோடல் போனிற்கிற் பக்க மொன்றும்
தெரித்திடுதேள் கொடுக்கானேற் றிங்க ளொன்றிற்
றீண்டுசுடர்க் கொழுந்தென்னி னுண்மூன் றாகும்
பெருத்துமிகப் படபடத்தா லெட்டு நாளிற்
பிசகில்லை யரணைவாற் றுடிப்போர் நாளாம்
அரித்திடுநீர் தவளையெனக் குதிக்கு மாகி
லாறுநாட் செல்லமுன்னே மரணந் தானே கஅ0

மரணந்தா னுகுமைய நாடி தானே
வயங்குதுடி யடிபோல நிற்கு மாகில்
விரணமதாய் நாளெட்டின் மரண மாகு
மிகவுமுயல் போனிற்கி லொருநா ளாகும்
தரணமதாய்ப் பேன்போல வோடி நிற்கிற்
சருப்பத்தின் பிணைச்சலெனிற் சாவோர் நாளாம்
அரணைவாற் றுடிப்பாக வோடு மாகி
லைஞ்சுநா ழிகைதனிலே சாவுண் டாமே கஅக

சாவுண்டாம் வாதந்தா னாளொன் றோடிற்
றப்பாமன் மூவாண்டின் மரண மாகும்
ஆவதிரு நாளோடி லாண்டி ரண்டா
மடுத்துநாண் மூன்றோடி லாண்டோன் றாகும்
போவதிது வெனவாயுண் மறைநூல் வல்ல
புண்ணியர்க ளுரைத்தபடி புகன்றேன் யானும்
வாவுபிடி யனநடையு மிடையா மின்னும்
வயங்குபெண்ணே மரணத்தின் வகையி தாமே

வகையாகும் பித்தமது நாளொன் றோடின்
மறலிங்கர் தனிலாறு மதியிற் செல்லும்
பகையாக நாளிரண்டு தானே யோடிற்
பதிவிட்டு மும்மதியிற் சாவுண் டாகும்
தொகையாக மூன்றுநாட் படப டத்துத்
தொடர்ந்தோடி னாற்பத் தைந்திற் சோரும்
மிகையாகப் பித்தமிந்தப் படியே நின்றால்
விரைவாக நமனுலகின் மேவு வாரே ௧௮௩

மேவுசிலேற் பனநாடி நாண்மூன் றுக்கு
மீளாம லோடிலைந்து நாளிற் சாவாம்
வாவியே நாளிரண்டுக் கோடு மாகின்
மாணமது வந்தெய்தும் பத்து நாளில்
பாவியொரு நாண்முழுது மோடு கிற்றான்
பதினைந்தா நாண்மரணம் வந்து சேரும்
கூவியநா ழிகைமுப்ப தோடு மாகிற்
கூற்றுவனார் நாளெட்டிற் கிட்டு வாரே ௧௮௪

கிட்டியே கைபிடித்துப் பார்க்கும் போது
கிளர்ந்தெழுந்த நாடிகடாந் தொங்கித் தொங்கி
அட்டமதாய்ப் பதறியெழுந் தோடு மாகி
லையமில்லைக் காலனார் கணுகிச் செல்லும்
தொட்டதுதான் மேலெழுந்து விரைந்து கீழாய்த்
துரிதமிட்டுச் சுழன்றுதா னிற்கு மாகில்

எட்டுநாட் செல்லுமுன்னே யுயிர்விட் டேகு
மேந்திழையே நாடிகளி னியக்க மீதே க௲௫

இயம்பியதோர் வாதமா நாடி தானு
மெழும்பியே பித்தத்தின் வீட்டைச் சேர
மயங்குபித்த நாடியது மெல்லச் சென்று
மன்னுசிலேற் பனவீட்டை மருவிச் சாரத்
தியங்குசிலேற் பனநாடி தனது வீட்டைச்
சேரவிட்டுக் கண்டமதிற் செல்லு மாகில்
வயங்குசெம்பொற் குடமனைய முலைமின் னாளே
மறலியூர் தனிற்சென்று வசிப்பர் தாமே க௲௬

நாடி நிதானிக்கக் கூடாதோர்

வசியாம லோடியிளைத் திட்ட பேர்க்கும்
வாகனமா திக்களேறி மெலிந்து ளோர்க்கும்
பசியாக நெடுநேர மிருந்த பேர்க்கும்
பலநாளும் வியாதியினி லழுந்தி னோர்க்கும்
நசையுண்ட வுடனெண்ணெய் முழுகி னோர்க்கு
நன்னயமாய்க் கீதங்கள் பாடி னோர்க்கும்
கசிவான மழைநீரின் முழுகி னோர்க்குங்
கடிதான வேலைசெய்து களைகொண் டோர்க்கும்

களையாகக் கூத்துவிளை யாடி னோர்க்குங்
கன்னியரைக் கூடியின்பங் களித்து ளோர்க்கும்
இழிவான பழிக்கஞ்சி யேங்கி னோர்க்கு
மிரவுசய னத்தினிலே துயில்செய் வோர்க்கும்
ஒழியாத பேதிகண்டு கழிந்திட் டோர்க்கு
முயர்ந்துகுதித் திட்டறிவு மயங்கி னோர்க்கும்
அழிவான மரணந்தான் கிட்டி னோர்க்கு
மறிந்திடுவாய் நாடிசம னாகு மன்றே க௲௮

மூன்றுநாடிகளின் பேதம்

சமனாக வாதபித்த நேராய் நிற்கிற்
றங்கியநோ யெட்டுநா டன்னின் மீளும்

கமனாக மீறியே பதறியோடிற்
கனத்தநோய் வருமெனவே கண்டு கொள்வாய்
எமனாக வையமுடன் வாத மீறி
னீரைந்து நாழிகையி லிடரே செய்யும்
திமனாகப் பித்தமது பிசகா தோடிற்
றீங்கில்லை நெடுநாளிற் றீருந் தானே கஅகூ

தானென்ற பித்தமுட னேயங் கூடிச்
சமனாக நடந்திடுகி னோய்க டரும்
தோணவே நாகம்போற் றத்து மாகிற்
சுறுக்காகத் தீராது தொந்த மாகும்
பேணவே மதயானை போலே நிற்கிற்
பிடிப்புடனே பலநோய்க ளடுப்ப தாகும்
நாணவே சிறுத்தடங்கி யூரு மாகி
னாளொன்றின் மரணமென நாடு வாயே ககூ௦

நாடுவாய் பித்தமது கொதித்துப் பாய்ந்து
நற்றவளை போனிற்கிற் பயித்திய மாகும்
வாடியே புரண்டுமயில் போலே யோடில்
வந்தபிணி விரைவாக மாறு மென்க
கூடியே திரண்டுநெடுத் தோடு மாகிற்
கொடியசுரம் வந்துமிகக் கோட்டி செய்யும்
ஆடியே மெல்லவசைந் தோடு மாகி
வடங்கிவிடுஞ் சணத்தில்வந்த பிணிக டாமே ககூக

பிணியான சிலேற்பனந்தா னன்னம் போலே
பிசகிநடந் திடுகினோய் பிலனாய் நிற்கும்
துணிவான காகம்போற் றத்து மாகிற்
சுகமில்லை யத்திதனிற் சூடுண் டாகும்
தணிவாக வட்டையைப்போ லூரு மாகிற்
றரிப்பில்லை யமனுலகிற் சார்வ தாகும்
அணியான சிலேற்பனத்தின் கொள்கை யீதென்
றறிந்திடுவாய் வாகடநூ லடக்க மென்றே ககூஉ

அடங்கியே வாதந்தான் பதறு மாகி
லதிகமாய்ப் பழமலஞ்சிக் காகு மென்க
துடங்கியெழுந் தேநிற்கின் மந்த மாகிச்
சுரத்துடனே தீன்மறந்து சுகமின் றாகும்
மடங்கியே மெல்லவசைந் தோடு மாகில்
வயிற்றெரிப்புப் பலவிதனம் வந்து சேரும்
நடுங்கிவிறைத் தேநெடிதாய் நிற்கு மாகி
னுண்மூன்றிற் சன்னிவந்து கூடுந் தானே கசங

கூடியே வாதங்கோ பித்தான் மந்தங்
கொண்டெழுந்து வாயுதனிற் குமிறி நிற்கும்
ஓடியே புழுப்போல வோடு மாகி
லுண்மூச்சுப் பிசத்தவிவை தோஷ மாகும்
வாடியே மடங்கிவிர லுள்ளாய் நிற்கில்
வாயுவுடன் சுரமடுத்து வருவ தாகும்
நாடிதான் பாய்ந்துபுழுப் போல நின்று
ணங்கைவயிற் றினிற்கருப்ப மாமென் றோதே கசச

ஓதியவிட் டிலைப்போல வாத நின்று
லுற்றகருப் பம்மூன்று மாத மாகும்
பேதியாத் திங்களது பத்து மட்டும்
பெலக்காம லுட்பதுங்கி மெல்லப் பாயும்
மோதிவெடித் துச்சிதறி வாத மோதின்
முந்துசுரோ ணிதமடவார் வயிற்றிற் றங்கி
வேதனைசெய் தேயிடுப்பு வலித்து மாத
விடையதனை மறித்துமிகக் குத்துண் டாமே கசரு

குத்தியெழுந் தேபாயுங் குதிரை போலக்
கோபித்து வாதமது குமிறி நிற்கின்
நித்தியமாய்க் குதிரைவலி மூன்று நாளி
னேரிட்டு வந்துபொல்லா வருத்தஞ் செய்யும்
சத்தியமாய் நாண்மூன்றுக் குள்ளே கொல்லுந்
தலைமயிரிற் பேன்போலத் தணித்தே யோடின்

மெத்தநா ளில்லையிரு கடிகை தன்னுள்
விட்டுயிரை யமனுலகில் விரைந்து போமே ககசு

விரைவாகப் பித்தந்தான் பெலத்தே யோடில்
மிகமூளை தானுருகி வரட்சி காணும்
திரைவாகப் புலிபோலச் சீறி நிற்கிற்
சிரசுதனிற் கிறுகிறுப்பாய் வற்றுந் தேகம்
வரைவாக மந்தித்து நிற்கு மாகில்
வன்சுரமாய் மண்டைதனிற் குத்துண் டாகும்
நிரையாக விலைப்புழுப்போ னிற்கு மாகி
னீங்காத பிரமேக நெடிதுண் டாமே ககள

நெடிதான பிரமேகம் வரட்சி சூடு
நீர்க்கடுப்போ டனல்வெக்கை நெருங்கி நிற்கும்
கொடிதான பித்தமது மடங்கி யோடிற்
கூக்குரலாய்ப் பிதற்றிக்கை கொட்டி யாடிக்
கடிதான பயித்தியந்தான் வந்து சேருங்
கனத்தபித்த மதுதிரண்டு டெடுத்தே யோடில்
வடிவான மெய்வெதுப்பு மெலிவு நாளும்
வந்துமிக நலிவுசெய்யு மங்கை யாளே ககஅ

மங்கையே சிலேற்பனமா நாடி யோங்கி
வலுவாக வேதனித்து நிற்கு மாகில்
தங்கியே யிருமலிழைப் புடனே விக்க
லுன்சேரு மிறுகியே தடித்து நின்றால்
தொங்கியே மூச்சிழை பொல்லாக் காசஞ்
சுருங்கியே சழிவாண்டு பலவுங் காட்டும்
சிங்கியே திரண்டோடிற் பீனி சங்கள்
சிரநோய்நீர்ப் பாய்ச்சலிவை வருவ தாமே ககக

வருவதுதான் சிலேற்பனத்திற் பலதொந் தங்கள்
வந்தாலு மாறாது மடிவே செய்யும்
வெருவுறுமச் சிலேற்பனந்தான் கடின மெத்த
விதியதுவே யென்னமறை விரித்துப் பேசும்

பெருவாதை தீரவென்றுற் றன்ம தானம்
பேணியே சிவபூசை குருவின் பூசை
ஒருவாத கன்மத்தை நிவிர்த்தி பண்ணி
யுற்றதவ விரதங்க ளொருங்கு செய்யே உ00

வாதத்தாலுண்டாகும் நோய்கள்.

செய்யவே வாதத்தால் வருநோய் சொல்வேன்
சிக்கிமல சலங்கடுத்த லூளைதல் குத்தல்
நையவே கண்கறுத்துக் கண்ணீர் வீழ்ந்து
நாச்சிதறி வெடித்துவாய் திக்கிப் பேசல்
மெய்தடித்து மிகநோதல் பொருமல் கொள்ளல்
விந்துவலி தான்குறைந்து மந்த மாதல்
பையவே குளிர்ந்திருத்த லான வெல்லாம்
பலவாகக் கண்டறிந்து சிந்திப் பாயே உ0க

பித்தத்தாலுண்டாகும் நோய்கள்.

சிந்திப்பாய் பித்தத்தால் வருநோ யைக்கேள்
தேகமெலாம் வெச்சென்று சிரசிற் சூடாய்ச்
சந்திப்பாய் நாக்குப்பல் வரண்டு கைத்துத்
தலைசுழன்று கண்ணெரிந்து தாகஞ் செய்யும்
தொந்திப்பாய்க் குழறிமிகப் பிதற்றிப் பேசுஞ்
சோருமல சலஞ்சிவந்து மஞ்ச ணிக்கும்
வந்திப்பாய்ச் சத்திசெய்து துயிலா துணு
மறந்துதிரிந் திடும்பித்தச் செயலீ தாமே உ0உ

சிலேற்பனத்தா லுண்டாகும் நோய்கள்.

செயலான சேற்பனத்தி னுளைக் கேளுஞ்
செப்புடம்பு நாக்குப்பல் வெளுத்துக் காட்டும்
இயலான வாயினிக்கும் வேர்வை யுண்டா
மிருமல்விக்கல் கக்கல்தொய்வு மூச்சு முண்டாம்
மயலான மிடறுதனைக் கம்மிப் பேசும்
வாயூறி வழுவழுக்கு மலச லாதி

பயில்வாக வெளுத்துநுரைத் துடனே வீழும்
பரிட்சிப்பாய் சேற்பனத்தின் பாங்கைத் தானே

வாதம்மீறினுற்குணம்

பாங்காக வாதந்தான் மீறு மாகிற்
பருவயிறு சுவாதமுடன் குத்துக் கோழை
நீங்காத பிடிப்புளைவு வாயு தொந்தம்
நீர்வெடித்துப் பாய்தல்மந்தம் விஷமிப் பாதல்
தூங்குசன்னி வாதசுர மதனிற் ஞேஷந்
தொகுத்தகிரா ணிக்கழிச்ச லுதர தோஷம்
வாங்குபல வலிகுளிர்ச்சி குன்ம வாத
மலசலங்கட் டிடல்வாத வந்திப் பாமே உ0ச

பித்தம்மீறினுற்குணம்.

வந்தித்த பித்தமதி கரித்து நின்ருல்
வாயுவுடன் வெப்பிரத்த ரோகஞ் சூலை
தொந்தித்த குன்மமுடன் குடஞேய் மிக்க
துயர்புரிமூ ளையிற்சூடு சிரவ ரட்சி
நிந்தித்துப் பேசிடுத லாடல் பாட
னித்திரையற் றுப்பயந்து கோபங் கொள்ளல்
சந்தித்த காமாலை பலவும் பித்தஞ்
சாதிக்கு மதிவதனத் தையலாளே உ0ரு

சிலேற்பனம்மீறினுற்குணம்.

தையலே சிலேற்பனந்தான் மீறி நின்ருற்
சத்திவிக்க லிளைப்பிருமல் சயமே யாவி
உய்யலிலா வுளைமாந்தை வரட்சி வெப்போ
டுண்மூச்சுத் தொய்வுமுட்டுக் கம்மிப் பேசல்
பையவுடன் மெலிந்தசனஞ் சிறுத்துக் காட்டல்
பலகாலும் வேர்வைகொளல் நெஞ்ச டைத்தல்
நையமிக வெலும்புதனைப் பற்றி நாளு
நலமிலாப் பலபிணிக ணண்ணும் பாரே உ0சு

தொந்தத்தின் குணம்.

வாதபித்த தொந்தம்

நண்ணுகின்ற வாதமிரண் டொன்று பித்த
நலமாகத் தொந்தித்தாற் றலைக னத்துத்
திண்ணமதா யுடம்பெங்கும் குத்தி நோவாஞ்
செமியாமல் வயிறூதிப் பொருமிக் கொள்ளும்
கண்ணதனிற் றுயிலுண்டாய்த் தலைநீர் கொண்டு
கால்கைபொருத் துகள்மிகவு முளைவுண் டாகி
ஒண்ணுதலார் போகத்தில் விருப்ப மாகு
முண்மையிது வெனவாராய்ந் துறுதி காணே உ0எ

பித்தவாத தொந்தம்.

உறுதியாம் பித்தமிரண் டொன்று வாத
மோடியே தொந்திக்கிற் பிடரி நொந்து
வெறிதாகச் சிரம்வரண்டு குத்துண் டாகி
விழிகளிரண் டும்பெருக்கக் கெரிப்ப தாகும்
வறிதாகச் செவியிரைந்து விறைத்து நொந்து
வலியவுடம் பெங்குமே தினவுண் டாகும்
அறிவாயிக் குணம்பித்த வாத மென்றே
யதிமதுரச் செழுங்கனிவா யழகார் மானே உ0அ

சிலேற்பனவாத தொந்தம்.

அழகான சேற்பமிரண் டொன்று வாத
மடுத்திடுகி லதிகமாய்ப் பசியுண் டாகும்
விழைவாகப் விளைப்பதுவு மதிக முண்டாம்
மெய்யெங்கு மசமசப்பாய்த் தினவு காணும்
குழைவாக நீர்த்தாகந் தானுண் டாகுங்
கூறியநா வழுவழுத்துக் குரலுங் கம்மும்
தழைவான மிடறுபுகைந் திருக்கு மாகிற்
சார்ந்திடுசேற் பனவாதங் கண்டி டாயே உ0கூ

சிலேற்பனபித்த தொந்தம்.

கண்டிடுவாய் சேற்பமிரண் டொன்று பித்தங்
கலந்தோடிற் சிரமதிகங் கனத்து நோவாம்
உண்டவச னங்களெலாஞ் செரியா தாகு
முற்றுவிழி மூக்குகளாற் றண்ணீர் பாயும்
மண்டியெழுஞ் சன்னிதோ ஷங்கள் கூடும்
வாய்கனக்கு முடன்முழுதுங் குளிரே காணும்
வண்டுளக்கி மதுவுண்ணுங் கருமென் கூந்தன்
மடமானே சேற்பபித்த மதித்தி டாயே ௨௧௦

பித்தசிலேற்பனதொந்தம்.

மதிக்கவரும் பித்தமிரண் டொன்று சேற்பம்
வந்திடுகி னுக்குமிக மதர்த்தி ருக்கும்
கதித்துவயி றதுவலிக்கு நோவுண் டாகுங்
கய்ப்பாகி நீர்சிறுத்துச் சிவந்து வீழும்
கொதித்துமிக நெஞ்செரித்து வாய்கைப் பாகிக்
கொள்ளாது தீவனந்தான் புளித்தேப் புண்டாம்
உதிக்குமதி யனையமுக மடமின் னாளே
யோதுபித்த சேற்பமென வுரைத்திட் டாரே ௨௧௧

வாதசிலேற்பன தொந்தம்.

உரைத்திடவே வாதமிரண் டொன்று சேற்ப
முற்றமுறை தான்கூடி நிற்கு மானால்
நிரைத்தமயிர்க் கூர்ச்சாகி மெய்கு ளிர்ந்து
நீர்த்தாக மிகவுண்டாய்ச் சோம்ப லாகித்
திரைத்தவயி றதுநொந்து மந்த மாகிச்
சிக்கியே நுரைத்துமலங் கழிந்து வீழும்
அரைத்தபரி மளச்சாந்த முலைமின் னாளே
வாதசேற் பனகுணமென் றறிந்தி டாயே ௨௧௨

திரிதோஷ தொந்தம்.

அறிந்திடுவாய் நாடியிவை மூன்றுங் கூடி
லச்சமாய்க் கண்டுங்கு மறிவு கேடாய்க்

செறிந்தவுடம் புள்ளமூன்று வேர்வை காணுஞ்
சிலிரிட்டுச் சூடாகித் தாக முண்டாம்
மறிந்திடுகால் கைவிறைக்குங் காத டைக்கும்
வலுத்தசுரந் தோஷமதாய்ச் சன்னி தோன்றும்
பிறிந்திடா திக்குணங்கள் பலவு முண்டாய்ப்
பேதமுறும் பலதோஷம் பேணிப் பாரே. உக.

வாதவுடம்பின் குணம்.

பேணாத காரியத்தின் மிகவி சாரம்
பெருக்கினீற்றல் பேசாது பேசல் நாளும்
நாணாது பொய்யதனை மெய்ய தாக
நவின்றிடுத றீயதனி னாட்டம் வைத்தல்
கோணாது கனவதனின் மெய்வ ருந்தல்
குளிர்க்குடை,தல் கூசிமனஞ் சலிப்புக் கொள்ளல்
தூணாக வேயுடம்பு பொருமிக் காட்ட
ரோகையே வாதவுடற் சொயமி தாமே உக

பித்தவுடம்பின் குணம்.

சொயமாக மெய்ம்மெலிதன் மலந்தான் சிக்கல்
சொல்லுமுறை மெத்தெனவா யினிமை யாதல்
நயமாகிப் பெண்களுடன் மகிழ்ச்சி கொள்ள
ளுடியே கருமத்திற் கூர்மை கொள்ளல்
வயமான விளமைதனின் மயிர்ந ரைத்தல்
வலியவுடல் சூடாகி வெச்சென் றிட்டல்
பயனான பலகலைகண் மிகப்பா ராட்டல்
பயித்தியமா முடம்புடைய பாக மீதே உக

சேற்பனவுடம்பின் குணம்.

பாகமா முடம்பிறுகன் மலந்தான் சிக்கல்
பலபுகழ்பா ராட்டல்களைப் பரிந்து காணல்
போகமா னதைவெறுத்தல் பொறுமை யாதல்
பொய்களவா திகணீத்தல் புலவோர்ப் போற்றல்

தாகமாய்ப் போசனத்தி லாசை வைத்தல்
தலைமயிர்நீண் டிடலறிவு தன்னைக் கூடல்
யோகமாய்த் திருமடந்தை யருளைச் சார்த
லுற்றசிலேற் பனவுடம்பின் மிகுதி காணே உகசு

மேற்கூறியகுணங்கள் மாறுபட்டுத் தோன்றுதற்குக்
காரணம்.

மிகுதியா மிக்குணங்கள் குறைந்துங் கூடி
மேற்பட்டுத் தானிருக்கும் விதங்க ளெல்லாம்
பகுதியாங் காலத்தின் பேதத் தாலும்
பகரிளமை மூப்பான பருவத் தாலும்
புகுதியா மனக்கனப்புச் சலிப்பி னாலும்
பொருந்தியதோர் நாடிகுணம் பேத மாகும்
தகுதியா மாந்தருடை மரணக் கூற்றின்
தன்மையினை யுரைக்குமுறை தனைத்தே ராயே உகஎ

மரணக்குறி
வேறு

தேராயிரு கண்கள் சுழன்றுமிகத்
தெளிவின்றி யுடம்பு வரண்டுவர்வாய்க்
கூராகிய மூக்கு மலர்ந்துசுழிக்
கொண்டேவிடு நீள்பெரு மூச்சுடனே
பேராதிரு கால்கை யெடுத்தெறியும்
பெருகச்சுழி நெஞ்சினி னின்றிறுகும்
தீராத விளைப்பொடு முட்டுமிகுந்
தெளிவாயிது தான்வதைசெய்திடுமே உகஅ

வதையாகவுண் மூச்சு மிகப்பொருமி
வசனிக்கவி டாதுசெவ் வாய்குளறி
விதையாகிய ரண்டு முளேசொருகி
மிகநெஞ்சு வாண்டு நாம்புமெழீஇப்
பதையாமெய் யயர்ந்து தணீர்பருகிப்
பஞ்சிட்டிரு கண்களும் வாய்கருகித்

தறையாதுகை கொண்டு முகந்தடவுந்
தடையின்றி யிறப்பது மெய்மயிலே உகக

மயினேரியல் சாயன் மடக்கொடியே
மையத்திரு கண்க ளுறச்சொருகி
இயல்பாக மயங்கி யெழுந்துவிழுந்
தெழுவார்பிடி யென்ன மதர்ப்பதுவாய்த்
துயிலாதிரு காது மடைத்துமுகஞ்
சோம்பாயிரு நாசியி னீர்சொரியும்
பயிலாதுக ழுத்தடி வேர்வைகொளும்
பண்ணுங்குண மாவி பறந்திடுமே உஉ0

ஆவிக்கிட மாகு முடம்புதனில்
லங்கைவிழி மூக்கிரு காதுநகம்
மேவுச்சியண் ணுக்குட னுந்தியுமே
வெளுப்பாயுளங் காலு மிருந்திடுகின்
நாவுக்கினி தாயமர் வாணியுட
னளினத்தினி ருந்தரு ளுலுமுகத்
தேவுற்றெதிர் வந்து விலக்கிடினுந்
தென்பாலிய மன்பதி சேர்ந்திடுமே உஉக

சேரும்விழி மேலுற வேசொருகிச்
சேடத்தொடு மூச்சுமுள் விக்கலுமாய்ச்
சோருஞ்சட மெங்கு நடுக்கமுறுஞ்
சொல்லும்வச னங்கண் மிகத்தவறும்
வாருஞ்சல மிக்கு மலங்கருகி
வாய்பல்லு வரண்டு கறுத்துலர்வாம்
கூரும்மிரு கைகொடு கும்பிடுகிற்
கூற்றுனவ னூர்குடி யேறிடுமே உஉஉ

ஏறுங்கரமோ டிருகா லுதறி
யெப்பாகியுண் மூச்சு வரட்சியதாய்
மீறும்விழி பஞ்சடை வாயிருமி
மிகவுந்துயிலற் றுணர்வுங் குறைவாய்ச்

சிறுஞ்சழி கண்டம துற்றுறையுஞ்
  சோர்த்தடு மாறிய டிக்கடியே
காறும்முணர் வற்று மயங்கிடுமேற்
  காலற்கிரை யென்று கரைந்தனரே ௧௨௩

கரைவாயிரு சண்களி னீர்சொரியிற்
  கைநாசியில் வைத்து முகந்தடவில்
விரைவாய்வச னித்தல் பிதற்றலுடன்
  வெறிக்கத்திசை யெங்கும் விழித்திடுகில்
தரைமீது படாம னிலந்தடவிற்
  றரியாது திடுக்கிடி லேங்கியெழில்
திரையாமென வெங்கு முழுத்திடுகிற்
  செகமீதி னிராது சிதைந்திடுமே ௨௨௪

சிதைவாகிய வுந்தி யிகப்பொருமித்
  தெளிவற்றிரு காலகை பதைத்திடுகில்
மதியுந்தி நரம்பு தெரிந்திடுகின்
  மார்பிற்புடை கொண்டு பருத்திடுகில்
பதிவாகிய வன்னம் வெறுத்திடுகிற்
  பலகாலுமுண் மூச்சு மடங்கிவரில்
அதிதாகிய மாயவ ணர்வரினும்
  மவராவியி னீங்குவ ரம்புவியே ௨௨௫

அம்முஞ்சிறி தேனு மலஞ்சலமற்
  றச்சம் பெரிதாகி மயக்கமுமாய்ச்
செம்முங்கணி ரண்டினு நீர்சொரியுஞ்
  செல்லாதச னங்கள் சிறுத்துவரும்
கொம்மென்றிட நெஞ்சை யடைத்திருகிக்
  குத்தோடிரு மிச்சழி கக்கியிடில்
இம்மென்றிட முன்ன மிறந்துவிடும்
  மிழைபோலிழை மென்சொ விளங்கிளியே

கிளியேயுறு நாக்குண் மதர்த்திருமிக்
  கிளரும்விழி பொங்கி முகங்கருகித்

தெளிவாயுரை யாமன் மிகத்துயராய்த்
திக்கென்றிட நெஞ்சுடல் தானுலைவாய்ச்
சளிதீர வரண்டுகை காலதுவுஞ்
சீரியாக விருக்க விடாதட்டலும்
நெளியாவிரு கண்கள் சிவந்திடுமின்
னிலையாயுயிர் நிற்பது தானரிதே உஉஎ

அரிதாக வெழும்பி விழும்பலகா
லடரும்புரு வங்க ளழித்திருகண்
பெரிதாக நிறங்கரு கிக்குழியும்
பேசாதுகி டந்து மிகக்கழியும்
புரிவாகிய நீர்தனில் வேட்கையுறும்
புவியிற்கிட வாது புரண்டுருளும்
பரிவாக வுடம்பு மதர்ப்புறுமேற்
பதறிக்கெடு மாவி பசுங்கொடியே உஉஅ

கொடிநேரிடை கேண்மல மானதுவுங்
குமிறிப்பல வாக மிகக்கழியும்
அடியோடுகை மெல்ல நடுக்கமுமா
யதிரும்படி நொந்து மயக்கமுடன்
இடிபோன்மிக நெஞ்சு வரண்டுவரும்
பெடிரேவரின் மேற்படு கோபமுடன்
குடியாமன் மருந்துகள் வாந்தியுறிற்
கொல்லும்மரணக்குறி யோர்கணமே உஉகூ

கணமாகும பான மறக்கொதியாய்க்
கருகிக்கழி யும்மல முஞ்சலமும்
நிணமானது சீத முடன்கழியுங்
நெடிதாமிடை வற்றி யொடுங்கிவிடும்
இணையாமிரு கால்கை தளர்ந்துவரும்
மென்புந்தசை மேலெழ வேகிமிரும்
பணமேமிக ரல்குன் மடக்கொடியே
பகரிக்குண மாவி படுந்திடனே உஙo

திடமாகிய கால்கை புறம்வலியாய்ச்
செவிரண்டு மிரைச்சல் குரைச்சலுடன்
விடமேயென மெய்யில் வருத்தமுறும்
மிகநாவும் வரண்டிட லுங்கனமாய்த்
தொடுமார்பு குளிர்ந்துமெய் தோறசையுந்
துடித்தேவிழி சோர்ந்து சிறுத்திடுகிற்
கடன்மேற்றுயில் மாயவ னூர்வரினுங்
காலன்பதி யேகி விடுங்கடிதே உ௩௪

கடிதாயிரு காலொடு கையுதறிக்
கழறும்மொழி தானு மிகக்குழறி
நெடிதாகிய மூச்சு வரட்சியுட
னெஞ்சங்க மழன்று முகங்கருகிக்
கொடிதாகிய சத்தி குணுக்கமுடன்
கொட்டாவியு டன்பல் கறுத்துவரும்
வடிவெங்கணும் வேர்வை மிகப்பொசியும்
மரணக்குறியென் றறிவா யிளமாமயிலே

வாயாலுரை கக்குதல் விக்கலுறல்
வயிறூப்பி மலங்கழி வெய்திடுதல்
பேயாமென வேபல கோட்டியுறல்
பெருகக்கண் மலர்ந்து விழித்திடுதல்
ஓயாதுபி தற்றுதல் நெஞ்சுவரண்
டுண்மூச்சொடு கால்கை துடித்திடுதல்
நீயேயறி யிக்குண மானவெலாந்
நிலையற்றுயிர் பற்றற நீங்கிடுமே உ௩௫

நீங்காது குளிர்ந்துடல் வேர்வையதாய்
நெடுமூச்சுட னீர்மிகு தாகமதாய்
வேங்காடென மெய்கரு கித்திறமாய்
மிகவுஞ்சளி கண்டம துற்றிருமிப்
பாங்காகிய கண்கள் கலங்கிமுகம்
பச்சென்று பதைத்து வருந்திடுமேல்

போங்காலமி தென்ன வறிந்திடுவாய்
புவனத்திலி ருப்பிலை போமுயிரே உ௩௪

உயிர்த்தேமிக கெட்டுடல் வற்றியுலர்க்
குதிரத்தொடு நாரியும் வீக்கமுறீச்
செயிர்த்தேவிழி வாந்தி கழிச்சலுமாய்ச்
செப்பும்வச னங்களு முட்டுளதாய்
மயிர்ப்பேன் றலை நின்று வழிந்துவரு
மாருதிது வேமர ணக்குறிதான்
குயிற்பேடையை யொத்த மொழித்திருவே
கூறுங்குண மிங்கிவை கொன்றிடுமே உ௩௫

வேறு

வைத்தியனியல்பு

கொன்றிடுங் குறியி னோடு நாடியின் குணமு மெய்யில்
நின்றிடும் பூத மாதி தத்துவ நிலைமை தானும்
அன்றியு நோயின் பேத மனைத்தையுந் தெளிந்த றிந்த
வென்றிசேர் வயித்தி யன்றன் முறைபுரி விதியைக் கேளே

விதிமுறை யாக வாயுள் வேதத்தின் றன்மை யெல்லாம்
மதியுறு குருமுன் பாக மரபினிற் படித்தோ னாகி
அதிகமாய்க் குருவைத்தேவை யன்பொடு வணங்கு வோனைத்
துதிபுரிந் தெவரும் போற்றுந் தூயநற் குணமுள் ளோனாய்

தூயநற் செய்கை யுள்ளான் சொலுமனத் திண்மை யுள்ளான்
தீயவஞ் சனையி லாதான் செகமெலா மதிக்குஞ் சீரான்
ஏயமெய் யன்றிப் பொய்யை யியம்பிடான் குணங்கண் மூன்றில்
சாய்வில்சாத் துவித மான குணத்தினிற் றலைமை யுள்ளான்

தலைமையா மினத்தான் மிக்க தகுதியான் றேற்ற முள்ளான்
அலைவறு சிங்கம் போலு மாண்மையா னுறுப்பிற் சற்றும்
நிலைமைசேர் குறைவி லாதா னிதியுளா னிரக்கம் பெற்றோன் [ன்
தொலைவிலாக் கோப மற்றோன் றொழுதகு மினத்திற் சார்ந்தோ

இனமிகு மனையா ளன்றி யாரையுந் தாயென் றெண்ணுங்
கனமுறு நீதி கொண்டோன் காசினி யுயிரை யெல்லாம்
தனதுயி ரென்னக் காக்குஞ் சற்குண தயாளன் சீலன்
மனமது சோர்வி லாதான் மாட்சிமைச் செவ்வி பெற்றோன்

செவ்விதா யிலங்கு கையிற் சிறந்தசங் கிரேகை யுள்ளான்
அவ்விய மழுக்கா றில்லா னண்டினர்க் காக்குஞ் சீரான்
எவ்வகை யாக வேனும் பிறர்பொருட் இச்சை வையான்
நவ்விநோக் குள்ள மின்னார் மோகத்தா னலிவு கொள்ளான் ௨௪௧

நலிவுறு மிடியோர்க் கெல்லா நன்னய மிகவுஞ் செய்வோன்
பொலிதரு புகழின் மிக்கோன் புந்தியாற் சிறப்புப் பெற்றோன்
பலகலைப் பயிற்சி யுள்ளோன் பரனடிக் கன்பு செய்வோன்
மலிவுறு மினைய சீரான் வயித்திய சீல னாமே ௨௪௨

சீலமாம் வயலிற் செய்ய விருப்பெனும் விரைதெளித்து
வாலிய பொறைநீர் விட்டு வளர்பவக் களையை நீக்கிக்
கோலிய தவமாம் வேலி கொடுபுல மிருகங் கொன்று
சாலியாம் சிவம்வி ளைத்துத் தண்ணளி பெற்றோ னாகி ௨௪௩

பெற்றிடு மென்பு காலாய்ப் பேசுகை வளைய தாக
வற்றிடு பழுப்பாச் சாக வரிச்சுக ணரம்ப தாகச்
சுற்றிய தோலால் வேய்ந்து சுவரெனத் தசையை வைத்துப்
பற்றுடற் பிணியைக் காண்பான் பண்டித னென்னு நூலே

நூலதா யுள்ள வாயுள் வேதத்தி னுட்ப மெல்லாம்
பாலென வுண்டு நித்தம் பயின்றதன் பயனை யெல்லாம்
மேலுமா ராய்ந்து கண்ட வைத்திய னிருப்பா னாகில்
ஞாலமேல் விதியில் லாம னணுகிடா துன்பந் தானே ௨௪௫

துன்பம தகற்றத் தக்கோர் தூயவே தியர்பூ பாலர்
அன்புறு வசியர் பின்னோ ராயுறு வேதந் தன்னை
இன்பமாய்க் கற்றுத் தேறி யியல்பாக மருந்து செய்யில்
முன்புதான் மொழிந்த வேத முதன்மையாந் தருமந் தானே

விலக்கப்பட்டவர்

தருமமா யுள்ள வேதந் தன்னையவ் வியன்ற னோடு
பிரதிலோ மன்வி ராத்தியன் பேர்பெறு மந்த ராளன்
தெரியனு லோம னின்னோர் தெரிந்துவா கடத்தைக் கற்கில்
வருவது யாவ மன்றி மத்திம மரபுக் காகா ௨௪௭

ஆகாமல் விலக்கி னோர்க ளக்கசா லையரம் பட்டர்
வகாலி குறவர் செக்கா ரியம்புசே ணியர்கு லாலர்
தோகாயிங் கிவர்ம ருந்து செய்திடிற் றோஷ மாகும்
போகாத நாகிற் போவர் பொசித்தவர் மருந்தைத் தானே ௨௪௮

பிறர்க்குச் சொல்லத்தகாதன.

மருந்துட னுண்மை தெய்வ மந்திர மாதர் கூட்டம்
பொருந்திய வின்பங் கல்வி போற்றிய குருவின் வாய்மை
வருந்தியே பெற்ற செல்வம் வயதுதான் புரிந்த தன்றித்
திருந்திய மொழியா யார்க்குஞ் செப்பிடிற் றீதா மன்றே ௨௪௯

நோயாளியின் கடமை.

தீதுசெய் நோயைத் தீர்ப்பான் செகத்தினிற் றெய்வம் போல்
வாதிதன் மகனு யுள்ள வயித்தியற் கொண்டு வந்து
போதவன் றனிற் றாவிப் பொருந்திட வழிபா டாற்றி
நாதன்மற் றிவனே யென்ன நயப்புடன் றவிசி னேற்றி ௨௫௦

தவிசின்மே லேற்றிப் பின்பு தன்கையாற் றொழுத லன்றி
நவிலுப சாரஞ் செய்து நற்றீப தூபங் காட்டித்
தவமுறப் பூசை செய்து தயவாக முகமன் கூறிப்
புவநோய்க டரவென்றே பணமும்வெற் றிலையும் வையே ௨௫௧

வைத்தியன்கடமை.

வைத்துப்பண் டிதனை நோக்க வன்பிணி யெட்டி லோர்கூ
றற்றிடு முன்ப தாக வன்புட னிருந்து மெல்ல
மொய்த்தெழு பிணியின் வார்தை மொழிந்திடக் கேட்டுப் பின்பு
கைத்தலம் பிடித்துப் பார்த்தல் வயித்தியன் கடமை தானே

நாடிபார்க்கும் விதம்.

கடனதாய் நாடி பார்க்கிற் கைதனி னெட்டி வாங்கி
உடனதா யங்கைமூலத் தோர்விர லடைவு தள்ளி
நெடுவிரன் மூன்றும் வைத்து நின்றிடு மசைவு நோக்கி
நடைமுறை யசாத்தி யங்கள் நாடுசாத் தியங்கள் பாரே உருங

சாத்திய மன்றேல் விட்டுப் போவதே தகுதி யாகும்
தீர்த்திடத் தக்க தென்னிற் செப்பிய பராயங் காலம்
பார்த்துடற் பெலனிந் நான்கும் பண்புட னறிந்து பின்பு
வாய்த்தநோய்ப் பெலனுஞ் செய்யு மருந்துடை பெலனு நோக்கி

நோக்கியே பிணிம ருந்து நட்பங்க ளனைத்து நன்றாய்த்
தூக்கியே தேவ பூசை சொல்லிய குருவின் பூசை
ஆக்கியா துலர்தங் கட்கே யன்னதா னங்க ளீந்து
தேக்கிய மருந்து செய்யச் சிறப்பிது பரிகாரிக்கே உருரு

நோய்தீர்ந்தபின் பணம்பெற

காரிய குணவீ னத்தாற் கனவுபா திகளைச் செய்யும்
பாரிய பிணியைத் தீர்க்கும் பண்டிதன் பாதம் போற்றி
நாரியே நோய்தீர்ந் துள்ளோ னன்முக மகிழ்ச்சி யோடு
சீரிய வெகுமா னங்கள் செய்திடன் மாண்ப தாமே உருசு

வைத்தியன் தீமை

மாண்பதாய்ப் பெறுத லன்றி மாற்றமு னிம்மி யேனும் [ன்று
காண்பதாய்ப் பொருளைப் பெற்றுங் கண்டொன்று காணு தொ
வீண்பல பிதற்றி னாலும் வியாதியை யேற்றி னாலும்
பாண்குழி நரக மந்தப் பண்டிதர்க் கிடம தாமே உருஎ

இடமிகு மனமொன் றாகி யியலொன்றாய் வசன மொன்றாய்
மடமுறு குணத்தின் மூத்து வருந்திடு நோய்மாற் றாது
படிறதாய் மருந்து செய்யும் பண்டிதன் பெருமை கெட்டுச்
சடுதியாய் நிலைமை நீங்கி நரகினுஞ் சாம்பு வானே உருஅ

நாடிபார்க்குங் காலம்

சாம்புகோ யாளர்க் கெல்லாந் நாதுபார்த் தறியுங் காலம்
சோம்பில்சித் திரைவை காசிக்குச் சூரிய னுதிக்கும் போதாம்
தீங்கில்மார் கழிதைக் குந்தான் செப்பிடு மாலைக் காலம்
ஆம்பல்வாய் மானே யானி யைப்பசி யாடி தானே உ௧௯

ஆடிகார்த் திகைநா ளுக்கு மாதப னுச்சிக் காலம்
பாடிலா வணியி னோடு பங்குனி புரட்டா திக்கும்
கூடிய நடுச்சா மத்திற் குறித்திடிற் றெளிவா மென்று
நாடிபார்க் கின்ற கால நவின்றனர் நலங்கொள் பூவாய் உ௨0

நாடியின் அசைவு

பூவையே கலையி ரண்டும் பொருந்திய சுழுனை தன்னோ
டாவியாம் பிராணன் கூடி யங்கமெங் கணும்ப ரந்து
தாவிய நரம்பூ டோடி முடிச்சுடைத் தானம் பத்தும்
பாவியே துடிப்புக் கொண்டு பரந்துநின் றசையு மாமே உ௨௧

அசைவினி னாடி மூன்று மதிரவே தொந்திப் பாகிப்
பசையுறு பிராண வாயும் பங்குமூன் றினுக்கு மாகும்
இசைபெறு மயிலஞ் சாய லேந்திழை முலைமின் னாளே
வசையறு நாடி மூன்று மனத்தினுற் றெளிந்தி டாயே உ௨உ

தெளிவுறு வாத பித்த சேற்பன தோடங் கண்டு
களவுபொய் கொலைகட் காமம் கனவிலு நினைவில் லாமல்
வளமுற மருந்து செய்தல் வயித்தியன் முறைமை யாகும்
உளமகிழ் வோடு பார்க்கு முறுப்புச்சூத் திரத்தைக் கேளே

உறுப்புச் சூத்திரம்

சூத்திரந் தன்னைக் கேளா யிடதுள்ளங் கால்சூ டாகி
ஏத்திடும் வலக்கா றண்ணீ ரென்னவே குளிர்ந்தி ருக்கில்
பேர்த்தொரு மருந்தி னாலும் பிழைத்திட லரிதா மென்று
சாத்திர மறிந்த முன்னோர் சாற்றினா ரிதுபொய் யாதே உ௨௩

பொய்யல்ல விடதுள் ளங்கால் பொருந்திய குளிர்ச்சி யுண்டாய்
வெய்தென வலக்கால் சூடாய் விரவிய நிலைதான் வேர்த்துத்

தொய்யுறு முடம்பு முற்றுஞ் சூடுகொண் டிருக்கு மாகில்
ஐயமி தில்லைச் சொன்னே னவருயிர் பிழைப்ப ராமே ௨௬௫

பிழைப்புறு தலைதான் வேர்த்துப் பெருகவே விலாவிற் சூடாய்க்
குழைச்சுகள் பொசிந்து நீர்மெய் குளிர்கொண்டே யிருக்கு மா
மழைத்தமே னியனுங் காலன் வரவெனத் தென்பு லத்துக்[கில்
கழைத்திட லுண்மை யாமென் றறிந்திடா யன்ன மின்னே

அன்னமே கண்கள் வட்டித் தடிவயி றதுகு ளிர்ந்து
வின்னமாய் நாசி வீங்கி மெய்யது மிகச்சூ டாகிக்
கன்னமுன் வாங்கி விக்கல் காணுமேற் கால னூரின்
மன்னிவீற் றிருப்ப ரென்று வாகடர் வசனித் தாரே ௧௬௭

வசனிக்கு நாப்ப சந்து வலதுள்ளங் கைசூ டாகி
இசைவுறு மிடதுள் ளங்கை நீர்கசிந் திருக்கு மாகில்
அசைவிலா நோய்க ளெல்லா மாதபன் றனைக்கண் டோடும்
பிசியெனக் கலங்கி யேங்கி நிற்குமோ நிலவு மானே ௨௬௮

ஏர்பெறு நெற்றி சூடா யெங்குமே யுடல்வெ துப்பாய்ச்
சோர்வுறு பிடர்கு ளிர்ந்து சுற்றியே கழுத்து வேர்த்துப்
பாரிய வுச்சி நீராய்ப் பசைப்புக்கொண் டிருக்கு மாகில்
மாரியே யிக்கு ணங்க ணல்லது சாவு மின்றே ௨௬௯

நல்லகண் ணீல மாகி நாமிக வரண்டு நெற்றி
மெல்லவே குளிர்ந்து கண்டம் பிடரிதோள் வேர்வை யுண்டாய்ச்
சொல்லிய சேட நெஞ்சிற் சுற்றியே யிருக்கு மாகில்
அல்லியங் கோதை நல்லா யறுநாளிற் சீவிப் பாரே ௨௭0

சீவிய தலையிற் சூடாய்ச் செறிந்திடு முளங்கை பள்ளம்
மேவியே குளிர்ந்து நீர்தான் மிகவுநா சியினுற் பாய்ந்து
பாவிய தொண்டை தானும் பரவியே காக ரக்கில்
ஆவிபோ மென்ன முன்னோ ரறைந்தன ரவனி மீதே ௨௭௧

அவனியின் மாந்தர்க் கெல்லா மரியமுட் டடிசி வந்து
பவனவாய்க் குளிர்ந்து நாசின் பக்கமே சூட தாகித்

தவனமு மின்றிச் சூடாய் வலதுள்ளங் கால்தான் மேவில்
புவனியிற் பிணிகள் வீங்கிப் புகுவர்பொன் னிடையி னாளே

இடையொடு நாரி சற்றே யிரைப்பொடு சூடு முண்டாய்த்
துடையுட னுள்ளங் கால்கள் சூடற்றுக் குளிர்ந்து நீராய்
அடைவுடன் காதி ரண்டு மடைத்தடி யிரைப்புக் காணில்
தடையில்லை யிரண்டு நாளிற் சாதனிச் சயந்தா னாமே ௨௭௩

நிச்சய மாக நெற்றி நெஞ்சுகால் கைசூ டாகி
மெய்ச்சட மெங்குந் தானே வெய்யில்சுட் டதுபோற் காணில்
இச்சக மதனி னோய்தீர்ந் தெய்துவர் சுகத்தை யென்னப்
பொய்ச்சிட லில்லா மேலோர் புகன்றன ரச்ச மற்றே ௨௭௪

வயித்திய னுறுப்பு.

அச்சமி லாயுள் வேத மறிந்தநல் வயித்தி யோர்க்கு
மெச்சுகண் மூன்று நான்கு தலைமிக்க முகந்தா னைந்து
உச்சிதக் கையு மாறு சரீரமெட் டுறுகால் பத்து
நிச்சய மிவைய றிந்து கொள்வதே நெறியா மன்றே ௨௭௫

நெறிகுண மருந்து சுத்தி மூன்றுநேத் திரம தாகும்
பிறிவுறு சேட வாத பித்தஞ்சு ரந்திப்பு நான்கும்
அறியுநாற் சிரமா நாடி யைந்துமே முகங்க ளாகும்
குறிதரு சுவைக ளாறுங் கூறினர் கைக ளென்றே ௨௭௬

கைமுத லட்ட தானப் பரிட்சைதான் காய மெட்டாம்
உய்வுறு நாடி பத்துங் காலென வோதி னார்கள்
செய்புறு வயித்தி யன்பேர் நந்தியந் தேவ னாகும்
வெய்யரோ கியின்பேர்ராகு விளம்பு கல்விழு மனாமே ௨௭௭

விழுமிய கயிறு நாக பாசமாம் விரல்கண் மூன்றும்
நெறிகொண்மும் மூர்த்தி யாகு முலைப்பாணி டமுத மாகும்
குறைவிலா மருந்துப் பைதான் குறிக்கின்வை குந்த மாகும்
மறுவக லறிவன் வாதி மகன் வயித்திய னுமன்றே ௨௭௮

வயித்தியஞ் செய்யலாகாதவர்

வயித்தியஞ் செய்ய லாகா மாந்தரை யுரைக்கக் கேண்மின்
செயிர்த்துமற் றுயிர்க்குத் தீமை செய்பவர் பொய்யர் கோளர்
பயித்தியர் தான தன்மஞ் செய்திடாப் பாவி யானோர்
மயக்குறு காம தூர்த்தர் வயித்தியம் வீணென் போர்கள் உ௭௬

வீணாகத் தம்மைத் தாமே வியப்பவர் நன்றி யில்லோர்
தோணிய பத்தி யத்தைக் கெடுப்பவர் சொற்கே ளாதோர்
காணநோய் தீர்ந்துந் தீரா தென்னுமா ரீசக் கள்வர்
பாணியான் மருந்தின் னோர்க்குச் செய்யினும் பலித்தி டாதே

நோயாளர்க்குப்புத்தி

பலித்திடுஞ் செய்ம ருந்தைப் பத்திய முறையாய்க் கொள்ளில்
சொலித்தெழு நோய்கள் விட்டுத் தொலைந்திடுஞ் சுகமுண் டாகு
வலுத்தநோ யாளி ராசா வாகிடின் மருந்து மில்லைச் [ம்
செலுத்துநற் றுதிவ ணக்கஞ் செய்தருந் துகம ருந்தே உ௮௧

அருந்துநோ யுடனே தீரு மல்லாத பேர்க ளுக்கு
மருந்தினைக் கொடுத்த லாகா வறியநோ யாளி யென்னில்
திருந்திய வயித்தியன்கை மருந்துதான் செய்ய வேண்டும் [டே
பொருந்துவெம் பிணியைத் தீர்க்கிற் புண்ணியம் புகழு முண்

புண்ணிய மில்லான் றன்பாற் போய்வாயில் காத்து நின்றே
பண்ணுறு மருந்து செய்யிற் பலித்திடா நோயா ளன்போய்
எண்ணிய வயித்தி யன்றன் வாயில்காத் திருப்ப னாகில்
நண்ணிய நோய்க ளெல்லா நாடாம லகலப் போமே உ௮௩

நோய்தீரப்பெறுதோர்

அகல்வுறுப் பிணிவந் துற்று லருந்தெய் வமேயே யென்பார்
இகலுநோய் தீரத்தீர வேனென் றுங் கேட்க மாட்டார்
புகலவு டதந்த னக்குப் பொருள்கேட்டாற் கோபஞ் செய்வர்
சுகமிலா திறக்கிற் கொன்று னிவனெனத் தூற்று வாரே உ௮௪

ஆற்றுமிவ் விதமாந் தர்க்குத் துன்புறு நோய்தீ ராது
ஏற்றமாங் கலிகா லத்தி னியற்கையிவ் வண்ணமாகச்
சாற்றுவ னென்று முன்னந் தமிழ்ப்பெருங் கடலை யுண்ட
தோற்றமாம் பெரியோ னுண்மை சொற்றனன் சோம்பி லாதே

தூதுவனிலட்சணம்

சோம்புநோ யாள னேவுந் தூதுவ னிலக்க ணத்தை
யாம்புவி தன்னில் யாரு மறிந்திட வுரைப்பக் கேண்மின்
மேம்பட வந்த தூதன் மிக்கசென் னியிற்கை வைக்கில்
சாம்பிய நோயா ளன்றான் சாவது கடிகை மூன்றே உஅசு

மூன்றுநா ழிகையா மூச்சி மயிர்தனைத் தொடின்முன் னெற்றி
தோன்றுமே வாண்டிற் சாவாஞ் சொல்லிய புருவந் தீண்டில்
ஆன்றநா ளொன்ப தாகு மடுத்தகண் ணுறு நாளாம்
என்றநெஞ் சதுநாட் பத்தா மெழிற்கன்ன மெட்டு நாளே உஅஎ

எட்டியே முதுகைத் தீண்டி லிறப்பது நாளஞ் சாகும்
கிட்டிய காது மூக்கேற் கேடாகு மூன்று நாளில்
மூட்டிய கழுத்தஞ் சாநாள் முழங்கால்கை மாத மாறும்
தொட்டிடிற் புறங்கா ணுக்குத் துஞ்சுவர் மாத மாறே உஅஅ

ஆறிய தூதன் றானே யலறிக்கூப் பிட்டா னாகிச்
சீறிய முகத்தோ னாகிச் சென்னியை விரித்தோ னாகிக்
கூறிய போர்வை செய்ய வாடைய னாகிக் கும்பிட்
டூறுநீர்த் தலையன் மொட்டை யுறுமொற்றைக் கண்ண னாகி

கண்ணிலான் மயிர்க ளைத்தான் கரியபோர் வையினன் கையில்
எண்ணிய கயிறு கத்தி யாயுத மெடுத்தோ னாகி
விண்ணினைப் பார்ப்போ னாகி விழியினீர் சொரிவோ னாகி
மண்ணினைக் கீறு வோனாய் மயிர்க்கெண்ணெய் வார்த்தோ னாகி

வார்தரு குருதி பொங்க வந்திடல் சார்ந்து நிற்றல்
ஆர்தரு காலைப் பின்ன லங்கையை விரித்துப் பேசல்

ஓர்விலா துறுக்கிப் பேச லுயரத்தி லேறி நிற்றல்
சோர்வுற மெய்ந டுங்கல் துரிதமாய்த் தருக்கம் பேசல் ௨௯௧

தருக்கினோ டிருவர் வந்தே யழைத்திடல் தடிகை யூன்றல்
பெருக்கமாம் வியாதி யாளர் பெண்களிற் கைம்மை யானோர்
உருக்கமா யழைத்த வின்ன வோதிய குணங்கள் கண்டால்
வெருக்கொளக் கால னூரின் மேவுவர் மின்ன னாளே ௨௯௨

மருந்தின் பாகம்.

மின்னனாய் மருந்தின் பாகம் விழியினில் நாலு துள்ளி
துன்னவே நைய மாறு துள்ளிகா தினிலு மாறு
உன்னிடு குழம்பு லேகிய முருகுங்கை யளவாய்க் கொள்ளு
பன்னுகண் டட மத்திற் பாதிபக் குவமாய்ப் பண்ணே ௨௯௩

பக்குவ மாங்க ஷாயம் பகர்கைகொண் டளவ தாகும்
நெக்குறு சூர ணங்கள் வெருகடி நிறைய தாகும்
தொக்குறு குளிகை நன்யாத் திரைகள்சொன் னளவாய்க் கொள்க
மிக்கவுஞ் சனமு மூந்தின் பாதியாய் விழியிற் றீட்டே ௨௯௪

மருந்தின் வயது.

தீட்டிடு மருந்தி னங்கள் திங்கண்மூன் றதற்பின் கொள்க
சூட்டினின் மூலி வெந்த கஷாயமொன் றரைநா ளாகும்
கூட்டுசர்க் கரைதேன் னெய்சேர் குழம்புநா னாறு மாதம்
மாட்டிய தயில நெய்தான் வருடமொன் றுவ தாமே ௨௯௫

ஆவுறு மோர்பா லெண்ணெ யாநெய்தேன் பழவர்க் கங்கள்
தேவையாய்ச் செய்க ஷாய மிரண்டுநாட் சென்று லாகா
தாவறு நிணமி றைச்சி சார்கொழுப் புறுக ஷாயம்
மேவுறு மொருசா மந்தான் வேண்டிடு மேலா காதே ௨௯௬

மேலதாந் தயிலத் திற்கு வேண்டிய வயிர மாகில்
ஏலவே கஷாய மெல்லா மெட்டுநா ளாறு லாகும்
சீலமாங் கொடிக ளெல்லாந் தினமது மூன்றுக் காகும்
சாலவே மூல வர்க்க மூன்றுநாட் சத்து மாமே ௨௯௭

சத்துமாம் பிசம் பத்திரஞ் சார்ந்திடு புறவங் கந்தம்
மெத்திய காம்பு மீதாலு மேவிய பலமு மெல்லாம்
வற்றிடக் கஷாயஞ் செய்யும் வாறுகேள் சாம மொன்று
சித்தமுற் றுணர்ந்த மேலோர் தெளிவுறத் திரட்டி னாரே

திரட்டிய புட்ப சாதி செப்பிடில் வயதாண் டொன்றும்
வருட்டிய விரையி னுபுள் வருடமைந் தாகு மென்ப
முருட்டிய தோல்பட் டைக்கு வருடமூன் றுகு மண்ணில்
பிரட்டிய கிழங்கு தண்டு பேசிடில் வயதி ரண்டே உகூகூ

இரண்டுமூன் றுகு மாண்டென் றியம்பிடும் பிசினுக் கெல்லாம்
முரண்டமா மேதைக் குத்தான் மும்மதி யாகச் சொல்லும்
திரண்டவேர் வகைகட் கெல்லாஞ் செப்புவர் வருட மொன்றாய்
மருண்டமா னொக்கி னல்லாய் வயதுமற் றிவையா மென்னே

கணக்குநுட்பம்

இவையுட னிளநீர் நெல்லுப் பொரித்தவித் திடுநீர் தண்ணீர்
கவினுறு கோம யந்தான் காடிநீ ருடனே சாரம்
செவையுள நாழி முப்பத் திரண்டுமுப் பலமாச் செப்பும்
சவையுற வதற்குப் பாதி தான்புத்துப் பலமா மென்னே ௩0௧

பலமதா மெள்ளி லெண்ணெய் பசுவினெய் யுடனே தேனும்
நலமதா யிருப தென்னு நாழிநற் பலமே கொள்க
சலமதாந் தயிரு நாழி தான்பல மிருபத் தஞ்சாம்
குலமதாம் பசுப்பா னுழி கொள்பல முப்ப தாமே ௩0௨

முப்பழ வர்க்க மோடு முதியசர்க் கரைப லந்தான்
தப்பிலீ ரெட்டுப் பத்து நாழியாந் தாழ்வி லாமல்
செப்புமிக் கணக்கி னுட்பந் தெளிவுற வறிந்து செய்க
வெப்புறு முத்தக் காசு மிளகுவேர்க் கொம்ப தாமே ௩0௩

கொம்பொடு சாத்தா வாரி கூறிய தசமூ லந்தான்
பம்பழக் கணங்க டுக்காய் பஞ்சமூ லங்கள் கந்தம்
வெம்பிய மூல வர்க்க மேற்றொலி வயிரந் தள்ளி
நம்பியே மருந்து செய்யி னன்மைய தாகுமானே ௩0௪

எண்ணெய்ப் பதம்

மானேகேள் மந்த மாகும் பதமது வாதத் துக்காம்
ஈனமில் மத்தி பந்தான் பித்தத்திற் கிணங்கு மென்க
தேனேதாம் 0பீத மாகிற் சேற்றுமந் தனக்கா மென்பர்
தானிது பதமூன் றுகுந் தையலே தயிலத் திற்கே ௩0௫

தயிலந்தான் மந்த மாகிற் றுன்வமு வழுத்துக் காட்டும்
இயல்புறு மத்தி பந்தா னிறுகியே மெழுகு போலாம்
செயல்பெறு 0பீத மாகிற் சேர்ந்திடா துருண்டு தூளாம்
குயிலனுய் தயிலம் வைக்கக் கூறிய பதங்க ளாமே ௩0௬

பதமது மந்த மாகிற் பானமே பண்ண லாகும்
நிதமுமே பொருத்தி மூழ்கச் சமபாகம் நேர்மை யாகும்
விதமிகு பீத மாகில் வெடித்திடு புண்ணிற் காகும் [மே
பதமெண்ணெய் செயினே யெல்லாம் பதறியே யேங்கிப் போ

தைலம் பொருத்துங்காலம்

ஏங்கிய வாத மீறி லிருளது விடியற் காலம்
தாங்கிய பித்த மீறிற் சாற்றுவ ருச்சிக் காலம்
வாங்குசேற் பனத்தான் மீறின் மாலையாங் கால மாகும்
பாங்குடன் றயிலம் வைக்க வெம்பிணி பாறிப் போமே ௩0அ

பாறிடு மானி யாடி பகருமார் கழிதை நான்கும்
கூறிய கடிகை யாறு கூனியற் பசிபு ரட்டை
மாறிலா வணியி னேடு மாசிகார்த் திகையோ ராறும்
தேறிய கடிகை மூன்று சித்திரை வைகா சிக்கே ௩0௯

காசிதா மிரண்டி னிற்குங் கடிகைநா லதுவே யாகும்
பூசியே தயிலந் தன்னைப் பொருத்திவெந் நீரில் மூழ்கி
ஆசியாய் நீர்து வட்டி யசனம்பின் னருந்து வோர்க்கு
நாசமாய் வியாதி யெல்லா நடுக்கமுற் றேடுங் காணே ௩௧0

0பீதம் பொன்னிறம்

புடத்திட்டம்

ஓடிய வெருப்பு டத்தின் கணக்கினை யுரைக்கக் கேளாய்
கூடிய கவுதா ரிக்கு மூன்றெருக் கோழிக் குத்தான்
வாடிய வெருப்பத் தாகும் வராகத்துக் கைம்ப தாகும்
காடைக்கு வெருவொன் றுகுங் கசத்துக்கா யிரந்தா னுமே ௫௧௧

எரிப்புத் திட்டம்

ஆயிர மாம்ப ரிக்கே யடுத்திடு மெருநூ றுகும்
காய்தரு மெருவி னீள மகலங்கைத் தடிப்புச் சாணும்
மாயிரு விறகின் றிட்டம் வகுத்திடுந் தீபந் தானென்
றேயின கமலம் ரண்டு கானினுக் கின்ப நான்கே ௫௧௨

விறகினளவும் வகையும்

இன்பமாம் விறகி னீள மீராறங் குலமு தாகும்
வன்புறு பருமை தன்னை வகுப்பரங் குலமி ரண்டாய்
அன்புறு தீத்தி றத்தின் விறகிது வாகு மென்பர்
நன்புள விறகின் சாதி நாட்டினர் வேம்பைத் தானே ௫௧௩

வேம்புநா யுருவி வன்னி வேங்கைமா விலங்கு காயாக்
காம்பொடு கருவே லாச்சாக் கருங்காலி புளியி லுப்பை
நாம்புக வின்ன தாக நல்வயி ரத்தோர் சாதி
தேம்புபா விலாவி ருட்ச விறகுதான் றேடு வாயே ௫௧௪

கல்வத்திட்டம்

தேடுவாய் கல்வத் திட்டஞ் சேர்கபா லத்தைப் போல
நாடுமங் குலந்தா னீள நாற்பதா மகல முப்பான்
வீடுமுள் ளாளம் ரண்டு விரல்விளிம் பதுவி ரண்டாம்
கூடுநீ ளத்தி ரண்டு மூக்கதாங் குளவி கேளே ௫௧௫

குளவித்திட்டம்

குளவிதா னீள மீரெட் டங்குல மளவாய்க் கூறும்
அளவுறு திரட்சி வட்ட மணிவிர லுனு வீதி
சுழலுறுங் குளவி யம்மி தோற்றமா வுடையார் லிங்கம்
பழியிலா மருந்து செய்யும் பண்பிது பண்டி தர்க்கே ௫௧௬

குகைத் திட்டம்

வச்சிரக் குகை

பண்டித நூலிற் சொன்ன குகைத்திட்டம் பகரக் கேண்மின்
கண்டிடு மிருப்புக் கிட்ட மூமிக்கருக் காடைச் சாம்பர்
விண்டிடு கழுதை லத்தி வெவ்வேறு பலமி ரண்டாய்
நண்டுறு குழிமண் ணீரெண் பலமதாய் நாட்டி யாட்டே ௩௧௭

பஞ்சசுன்னக்குகை

ஆட்டியே கடுக்காய் தன்னை யவித்தநீர் விட்டு மைபோல்
மாட்டியே குகையுஞ் சில்லும் வரிசையாய்ப் பிடிப்ப தாகும்
திட்டிய வைந்து சுன்னக் குகையைக்கேள் சிப்பி யண்டத்
தோட்டுட னத்தை நண்டு சங்கைந்து மொக்கக் கூட்டே ௩௧௮

ஒக்கவே சமனாய்க் கூட்டி யோதெருக் கம்பா லாட்டி
மிக்கவட் டாய்ப்பி டத்தில் வெந்துசுண் ணாம்ப தாகில்
குக்குடத் தண்ட வெள்ளை யெருக்கம்பால் கொண்டு மைபோ
சிக்கென வரைத்தெ டுத்துக் குகையுடன் சில்லுச் செய்யே [ல்

ஊத்துமுறை

சில்லுடன் குகையில் வைத்துச் சரக்கெலாஞ் செவ்வே நீற்று
மெல்லிய மருந்தி னூத்து முறையினை விளம்பக் கேளாய்
சொல்லிய சரக்குக் கெல்லாந் துருத்தியொன் றுருக்கி னத்திற்
கொல்லையிற் றுருத்தி ரண்டா முறுதியை யோர்ந்தி டாயே

ஓர்ந்திடாய் சத்து வர்க்கத் தூதிய துருத்தி நாலு
சேர்ந்திடும் முறைய தாகச் செப்பினர் மருந்தின் பாகம்
சார்ந்தவைப் பசிதேள் வில்லுத் தையுருக் கினத்திற் காகும்
வார்ந்தெடு கால மாகு மாசிசித் திரையு மாமே ௩௨௧

குருமுடிக்குங் காலம்

சித்திரை பங்கு னிக்குஞ் செறிந்திடு வைகா சிக்கும்
மெத்திய குருமு டிக்குங் காலமாய் விளம்பு வார்கள்
உத்தம மானி யாடி புரட்டையா வணியு மோதும்
சுத்தமாஞ் செந்தூ ரங்கள் செய்திடத் தொடங்க லாமே ௩௨௨

தொடங்கிடுங் குளிகை யோடு மாத்திரை சொல்லும் வேனில்
தடம்படு குப்பி செய்நீர் தான்பனிக் கால மாகும்
வடம்படு மெண்ணெய் நெய்கள் வைப்பது கூதிர் காலம்
திடம்படு மருந்தி தெல்லாஞ் செய்திடு கால மாமே ௩௨௩

பத்தியம்

காலுறு பிணியா ளர்க்குப் பத்தியங் கழறக் கேளாய்
நீலுறு கடன்மச் சத்தி னெய்ந்நலி சுறுக்கி ளக்கன்
சீலுறு முரல்வி லாங்கு திரளிகட் டாமீன் வாளை
ஏலுறு மிவைநன் றுகு மியம்புமா மிசத்தைக் கேளே ௩௨௪

சேலுமூர்க் குருவி காடை கிளத்திடு கானங் கோழி
காளுடும் பொடுவெள் ளாடு கவுதாரி கோட்டா னுள்ளான்
கோழியின் முட்டை வெள்ளைக் கருவிவை கூட்டலாகும்
நீளிய முருங்கை தன்பூப் பிஞ்சிவை நேர்ந்தி யாமே ௩௨௫

நேர்த்தியாம் பொன்னாங் காணி நெருஞ்சியின் கீரை பூலா
வாய்த்தநா யுருவிக் கீரை வட்டுக்காய் சுண்டை யின்காய்
பூத்திடு பூவன் பிஞ்சு புகன்றிடு மத்திப் பிஞ்சு
காய்த்திடு முள்ளி லந்தைக் கனியொடு தூது மாமே ௩௨௬

தூதுபத் திரிகாய் பிஞ்சு துளிர்பழம் பூக்கொ ளாகும்
சீதமி லிஞ்சி நெல்லிக் கனிசிறு கீரை சீயா
ஓதிடு மிலையி சங்கி லுறுதளிர் நாவ லின்ன
வீதமாய்க் கொள்க வென்றே விளம்பினர் வியப்பாய் மேலோர்

அவபத்தியம்

வியனுறு மருந்துக் கெல்லாம் வேண்டாத பத்தி யங்கேள்
பயனுறு மவரை மொச்சை பருத்தபூ சினிக்காய் தும்பை
துயரறு கடுகி னேடு வெண்காயந் துவரை தேங்காய்
தயிரிள நீர்பிட் டப்பஞ் சமைத்தகூழ் களிவி லக்கே ௩௨௮

விலக்கிடு கோழி பன்றி நெய்த்தமீன் வெள்ள ரிக்காய்
உலப்பில்செம் மறியாட் டுப்பா லுற்றிடு தயிர்மோர் நெய்தான்

கலப்புறு மெண்ணெய் காட்டு மரைமேதி கைப்பி னிப்பு
நலப்புறு மாத ராசை புளிபுகை நல்ல பீர்க்கே ௩உ௯

பீர்க்கொடு மாங்காய் பாகல் பிறத்தின்முட் பொதிப லாக்காய்
ஏர்க்குறு வாழை யின்காய் பயற்றங்கா யெலுமிச் சங்காய்
ஆர்க்கமாம் பசுவின் பாலோ டாவினெய் புடோலு மூந்து
வார்க்கனி முலையி னுளே மருந்தினுக் கிவைகள் தள்ளே ௩௩0

தள்ளிடு சுரைக்காய் சேம்புத் தண்டுடன் கீரை யாகா
கொள்ளுடன் முயல்மான் றூராக் கொம்மடி காட்டு மாங்காய்
வெள்ளையாங் கத்த ரிக்காய் விளவின்காய் பறங்கிக் காயும்
எள்ளள வுட்கொண் டாலு மருந்தெலா மிழப்பர் தாமே ௩௩௧

புளியுப்புக்கூட்டு

இழப்பலா மருந்தி னுக்குப் புளியுப்பி னியல்பைக் கேளாய்
பழப்புளி விரையைப் போக்கிப் பருத்திடு மெட்டி தன்னைத்
துளைத்ததி னுள்ளாய் வைத்து மேற்சீராய்க் கொண்டு மூடிக்
கிளைத்துமண் டலத்தி னப்பாற் கொள்கவுப் பியல்பைக் கேளே

உப்பினை யரைத்து நாளொன் றாதியே மேனிச் சாற்றில்
தப்பிலா தடுப்பி லேற்றி வறுத்தது தன்னைக் கூட்டச்
செப்பினு சிசங்கு மல்லாற் செறிபசுப் பாலை விட்டு
வெப்புறச் சாம மொன்று வெந்திட வறுக்க லாமே ௩௩௩

வறுத்திடு முப்பு நீருய் வந்திடு பருவந் தன்னில்
நிறுத்திய யிறக்கி யாற்றி நேர்த்தியாய் வைத்துக் கொண்டு
மறுத்தவிர் கலைசேர் வெள்ளை மதிநிகர் முகமின் னுளே
திருத்தியாய்க் கமக ளுக்குச் சேர்த்துநீ கொடுத்தி டாயே ௩௩௪

கொடுக்கும்பத் தியத்திற் கிந்தப் புளியுப்புக் கூட்ட லாகும்
அடுக்குநோ யெல்லா முண்ணு மருந்தினு லகன்று போகும்
தடுக்கரும் வேகத் தோடு சாரும்வெம் பிணிக ளெல்லாம் [ளே
விடுக்குநாட் பலனைச் சொல்வேன் விளங்குமெல் லியன்மின் னு

நாட்பலன்

மெல்விரல் லாளே கேளாய் விளம்பசு வதியி னேய்ந்தான்
புல்லிடி லெட்டு நாளிற் போய்விடும் பரணி யென்னிற்
கொல்லுங்கார்த் திகைநா டன்னிற் கூடிய நோய்க ளெல்லாம்
சொல்லிய விருபத் தொன்பா னாளினிற் சுத்த மாமே ௩௩௬

சுத்தமா முரோக ணிக்குச் சொல்லுநா ளெட்டிற் றீரும்
மெத்துமா திரையி னேடு மிருகசீ ரிடமோ ரைந்தாம்
ஒத்திடு புனர்த மெட்டா முறுபூசம் பதினென் றாகும்
வைத்தவா யிலிய நோய்கள் வந்திடிற் சேத மாமே ௩௩௭

சேதமின் மகமீ ராறிற் றீர்ந்திடும் பூர மாகில்
ஓதுநாட் பதினைந் தாகு முத்திரம் பத்தா மென்பர்
ஏதமி லத்த மாகி லேழுநா டன்னிற் றீரும்
பேதமாஞ் சித்தி ரைக்குப் பிசகில்லைச் சோதி கேளே ௩௩௮

சோதியிற் பிணிவந் துற்றாற் சுகம்வர நெடுநாட் செல்லும்
நீதியாய் விசாக மாகி னீங்கிடு மிருபத் தாறில்
வாதையாப் பெண்ணை நாளில் வந்தநோ யீரா றாகும்
தீதுறு கேட்டை மூவொன் பதுவன்றேற் றீரா தாமே ௩௩௯

தீருமொன் பதுநாண் மூலஞ் சிறந்தபூ ராடத் துற்றாற்
பாருநா ளிருபத் தொன்றிற் பறந்திடும் பிணிக ளெல்லாம்
கூருமுத் திராடத் திற்குக் குறித்தநா ளெழுமூன் றாகும்
ஆருமே யறியச் சொன்னே னோணத்திற் காறு நாளை ௩௪0

நாளிதிற் றீரா தாகி னங்கையே மரண மாகும்
கேளுநீ யவிட்டத் திற்கு நாண்முப்பான் கிளத்தி னார்கள்
ஆறிய சதய மாகி லொன்பதி லகன்று போகும்
கோளுறு புரட்டை யெட்டிற் குறுகுநோய்த் துயரம் போமே

துயரறு மூவைந் தாநாட் சொல்வருத் திரட்டா திக்குப்
பயமுறு மிரேவ திக்கு நோய்வரிற் பகைத்துக் கொல்லும்

வயமுறு மினைய நாளில் வன்பிணி வந்து தோன்றில்
செயமுறு தான தர்மஞ் சிவபூசை செய்து போற்றே ௩௪௨

போற்றிய பக்கந் தன்னிற் புகலுவா தசியே சட்டி
சாற்றிடு நவமி யோடு சதுர்த்தியாந் திதிக டம்மில்
ஏற்றமாஞ் சனிசெய் வார மிரவியி னோய்கள் வந்தால்
மாற்றுத லரிய தாகு மரணமு மண்ணி தாமே ௩௪௩

மருந்துண்ணுநாள்

அண்ணிய பூசஞ் சோதி யவிட்டஞ்சித் திரையே யோணம்
பெண்ணமான் றலையு ரோணி பேசிய சதய மத்தம்
எண்ணுமுத் திரங்கண் மூன்று மிரேபதி பதிநாள் புந்தி
நண்ணுபொன் வெள்ளி சோம னுயிறு கன்னி யாமே ௩௪௪

கன்னியே மகர மேடங் கற்கடகந் துக்கென்னும்
மன்னுமிந் நாட்க டம்மின் மருந்தையு ளருந்து வீரேல்
இன்னல்செய் வாத பித்த சிலேற்பனத் தெழுந்து சாரும்
சொன்னவெம் பிணிக ணீங்கிச் சுகம்பெற்று வாழு வாரே ௩௪௫

வாழ்வுறு மாயில் கேட்டை மருவிய செங்கை மூலம்
தாழ்விலா வியாழ னோடு சனிவார மிருத்தை தன்னிற்
சூழ்வுறு கடக மேடந் துலாமெனு மிராசி தன்னில்
வீழுநோய் பரிக ரித்துப் பார்த்திடன் மெத்த நன்றே ௩௪௬

மெத்திய வோணங் கேட்டை விளம்புமுத் திரமே செங்கை
ஒத்தசங் கிரமஞ் சென்ம நாண்மூன்றி னுடனு வாக்கள்
சுத்தமாம் பக்கந் தன்னிற் றுவாதசி துதிகை சட்டி
அத்துடன் பதினொன் றொன்று மாகிய விவையா காதே ௩௪௭

ஆகாத திரிநா ணீக்கி யம்புவி ரவிவா ரத்தில்
ஓதுநற் சுபதி னத்தி லுற்றிடு நோயா ளிக்குத்
தீதிலா வெண்ணெய் தேய்த்துத் தெண்ணீரில் முழுக நன்றாம்
காதலாய் வாக டத்தோர் கருத்துறக் காட்டி னாரே ௩௪௮

காட்டிய விருத்தை சென்மங் கலந்தநாண் மூன்று வாக்கள்
காட்டுசங் கிரம கால நயமிலா நாச யோகம்
நீட்டிய கிரக நீசஞ் செப்புமிங் கிவைக ணீக்கிக்
கூட்டிய சுபதி னத்திற் கோணிலை யுச்ச மாக ௱௪௯

உச்சமாய்த் திக்கோள் பார்வை யுறுநல் லோரை தன்னில்
அச்சமாங் காலநீக்கி யட்டமஞ் சுத்தி யாக
வைச்சுநன் மருந்தை யூட்ட மஞ்சன மாட்ட வெட்ட
இச்சையா யிரட்சை செய்ய விசைத்தனர் திருத்தமாக ௱௫௰

உண்வுகொள்ளும் முறை

திருத்தமாய்ப் போச னங்கள் செய்திடு முறையைக் கேளாய்
பருத்தவுந் தியினை நான்கு பங்கது வாகக் கண்டே
அருத் துநீ யிருகூ றன்ன மப்பொரு கூற தாக
விருத்தொரு கூறு வீணில் விடுவது மேன்மை யாமே ௱௫௧

மேன்மையாம் போச னங்கள் மிகுசுவை யமுதொப் பென்னும்
பான்மையா யருந்தி நூறுயப் பகாடி நடந்து பின்னர்
வான்மிகு தாம்பூ லங்கண் மரபினூற் றுய்த்து மஞ்சத்
தேன்மலி குழலா ரோடு துயில்பவர்க் கில்லை நோயே ௱௫௨

நோயிலை யங்கி நீர்கால் நடங்குடம் பொத்து நிற்கில்
ஆயுவுஞ் சுகமு முண்டா மன்னமப் படைவிற் சேரும்
ஏயசிந் தையினி லின்ப மிசைந்திடு மகிழ்ச்சி யெய்தும்
சேய்மனை வாழ்வி னோடு செல்வமுஞ் சிறக்கு மன்றே ௱௫௩

தாம்பூலம் தின்ன

சிறந்ததாம் பூல மன்னந் தின்னுமு னேழ தாகும்
உறைக்கிடு மன்னந் தண்ணீ ருண்டபி னெட்ட தாகும்
நிறந்தருங் கங்குற் காலை நித்திரைச் சயனந் தன்னில்
அறைந்தன ரைங்கா லாமென் றுதியி னுதனூரே ௱௫௪

நாதனு ருரையி னேற நயந்ததாம் பூலங் கொள்ளின்
ஓதுமெய் வெளுப்புக் காட்டிப் பாண்டுநோ யுறுவ தாகும்

தாதுவுங் குறைந்து கண்ணி னொளிபல்லுந் தான்பா ழாகும்
மாதுகே ளிந்நோய் தீர மருந்தில்லை மதுவென் பாரே ௩௫௫

உணவுகொண்டபின்

மதுமலர்க் குழன்மின் னாளே மனமுற வுண்ட பின்பு
சதமடி நடவா விட்டாற் சமியாமற் சலன முண்டாம்
அதிகமாய் நடக்கில் வாய்வா மடுத்தோடின் மரண மாகும்
இதமுறச் சயனஞ் செய்யி னெழுநோய்கண் மீறு மென்னே

இளநீர்கொள்ள

மீறிடா துண்ட பின்பு மிக்கதெங் கிளநீர் கொள்ளின்
மாறிடா வாத பித்த சேற்பனஞ் சமமாய் மன்னும்
பாறுமுள் வரட்சி வெக்கை பற்றிய சூடுந் தீரும்
மாறிடு மலச்சிக் கெல்லா மனந்தின்ன மனமுண் டாமே ௨௫௭

தின்னிதத் தோடு மேனி சிறந்தெழில் சிறந்து காட்டுங்
உன்னத நோய்கண் மாறு முந்தியிற் பசியுண் டாகும்
தன்னுடன் மகிழ்ச்சி யுண்டாந் தக்ககண் குளிர்ச்சி யாகும்
மன்னிய மொழியி னாளே யதிசுக மடைந்து மன்னும் ௩௫அ

பால்கொள்ள

மன்னிர வுண்ட பின்பு வற்றக்காய்ச் சிடுமா வின்பால்
நன்னய மாகக் கொள்ளி னயனநோய் நாடா தோடும்
பன்னுதீ பனங்க ளெல்லாஞ் சமித்திடும் பலநோய் மாறும்
வன்னமெய் தடித்தூ விம்மி வளர்ந்திடும் வடிவுண்டாமே

வடிவுறுங் கனல்கு றைந்து வளர்ந்திடுந் தாது விம்மிக்
கடிவுறு வாத பித்த கபஞ்சமன் கொண்டு காணும்
படியினிற் சுகம னேகம் பசுவின்பா லுண்ட பேர்க்குப்
பிடிநடை மயிலஞ் சாயல் பெற்றநற் பேதை யாளே ௩௬0

நெய்கொள்ள

பேதையே சுடுசா தத்திற் பசுவினெய் பிசைந்து தின்றாற்
தாதுவும் வலுக்கு முந்தி தளோவாகும் பசியுண் டாகும்

சீதமா முடம்பு ரத்த மடங்கிடும் வெப்புத் தீரும்
வாதைசெய் மலங்க ழன்று மடிவுறுங் தாகந் தானே ரு௬௧

தாகமா முடலந் தன்னிற் றரத்ததா ததிக முண்டாம்
சோகமில் லாமல் நல்ல சுகமுடற் றெளிவுண் டாகும்
போகமு மிகவ ளுக்கும் புத்துருக் கியநெய் யுண்டால்
வாகுறக் குளிர்ந்து கண்ணு மண்டைநோய் மாறிப் போமே

சுகந்தம்பூச

மாறிலாச் சுகந்த சந்த மணமுள வருக்க மெல்லாம்
தேறவே யுடலந் தன்னிற் சிறப்பாக வணியிற் றூதங்
கூறியே வாத பித்த கபங்களுட் டணங்க டீரும்
வாறிதென் றறைந்தார் முன்னோர் மலர்மணக் கூந்தன் மானே

பூச்சூட

மணமுள புட்ப சாதி வகைசூடின் மண்டை நோய்கள்
குணமதாம் வெட்டை மேகங் குறைந்துகண் ணொளியுண் டாகும்
கணமதாம் வாடை. தன்னைக் கண்டிடல் மருந்து பாழாம்
பணமதா நின்ப மென்னப் படைத்தபொற் பாவை யாளே

நீருண்ண உணவின்பேதம்

பாவையே நீரண் ணுந்து பருகிடிற் செவியி ரண்டும்
நோவதாய் மந்தம் பற்றித் துடங்கிடு நோய்கள் சேரும்
நாவினுற் கறிமிக் குண்ணி னண்ணிடுங் காச ரோகம்
வாவுமீன் கறிக டின்று லதிபித்தம் வயங்கு மாமே ரு௬௫

வயங்குசீ தளவூண் கொள்ளில் வாதம்வந் திப்புக் காணும்
இயங்கிய கோழி யுண்டா லெழுந்திடும் பித்த மென்க
நயங்கொள்பா னெய்மோ ருண்டா னடந்திடும் வாத மென்க
பயங்கொணற் பழவர்க் கங்கள் பழகினும் வாத முண்டே ரு௬௬

வாதமாங் களிபிட் டாதி மந்திப்பு வளருங் காலை
ஓதுநீ ராகா ரத்தை யுண்ணினும் வாத முண்டாம்
பேதமி விறைச்சி முட்டைக் கறிபித்த வாத மாகும்
சீதமாங் கீரை தன்னைத் தினில்வாத நடக்குங் காணே ரு௬௭

நடக்குஞ்செம் மறியி னெய்பா னற்கறி வாத மாகும்
துடக்கில்லிவள் ளாட்டு நெய்பால் சொல்லிய கறிக ளெல்லாம்
அடுக்குற வுண்ணில் வாத பித்தம்போ மழகா மேனி
திடப்படு மருந்துக் கெல்லாஞ் செப்புநற் கறிதா னாமே ௬௬அ

கறியதாய்ச் சமைத்த நல்ல காய்கறி புண்ணில் வாதம்
பிறிவின்மற் றவையிற் பிஞ்சு பேசிடிற் சமமா மென்றே
அறிகுதி கந்த மூல மருந்திடில் வாத மாகச்
செறியுமென் றுரைத்தா ராயுண் மறைகண்டார் செகத்தி லம்மா

சுகநெறி

செகத்தினிற் பிணியி லார்தந் தேகத்திற் சவுக்கி யங்கேள்
வகுத்தமுப் பொழுது நித்தம் வதனத்தைச் சுத்தி செய்தல்
தொகுத்தகுச் சதனாற் பல்லை முக்காலுந் துடைத்துக் கொள்ளல்
அகத்தியஞ் சலமோ ராறிற் கழிந்திட லதிக மாமே ௬எ0

அதிகமாய்ப் பசிவந் தாலு மளவதிந் தசனஞ் செய்தல்
மெதுவதா யுடன டத்தல் வெந்நீரிற் குளித்தன் மூழ்கல்
நிதமும்பால் மோர்ப முங்கள் நெய்யுட னினிதா யுண்டல்
புதியவிந் திவைக்கு வெந்நீ ருண்டிடல் புத்தி யாமே ௬எக

புத்தியாம் வாலி பஞ்சேர் பூங்கொடி மாரைச் சேர்தல்
மெத்திர வினிற்பா லுண்ணல் வெய்யின்மா லையினிற் காய்தல்
சொத்துறு சுகந்த கந்தம் பரிமளங் கூட்டிப் பூசல்
முத்திய கிழக்கோ லத்தின் முதுமைபோய் வாலை யாமே ௬எஉ

வாலையா மிளநீ ருண்போ மலசலந் தனைய டக்கோஞ்
சீலமார் மணங்கு ளிர்ந்த தெளிவான நீர்கு டிப்போம்
கோலமாங் காலை யுண்டி கொள்ளுவோ மரைத்த சந்தோ
டேலகிற் புகையுங் கொள்வோ மிடமில்லை நமனா ருக்கே ௬எ௩

நமதாகு மனையாளோடு நற்பகற் சேர மாட்டோம்
சமனதாய்த் தென்றல் வீசித் தடவவீற் றிருத்தல் செய்வோம்
கெமனமாம் புணர்ச்சி யின்கண் வலக்கைகீழ்க் கிடக்க வொட்
எமன் றனக் கிருப்பி டந்தா னே துாகம் மூரிற் றூனே [டோம்

ஊருநீர் கருக்கி மோரைப் பெருக்கிநெய் யுருக்கி யுண்போம்
சீர்பெறு மாடை தன்னைத் தினந்தினங் கழுவிச் சேர்ப்போம்
வாருநீ ரா று தும்மல் மலம்வாயு மூன்று செய்வோம்
பாருமென் பிடிமின் னாளே பயமில்லை யெமக்குத் தானே ௩௭௫

எமக்குறு மனைவி யன்றிப் பிறர்மனைக் கேக மாட்டோம்
அமக்கமாய் நீரி னுள்ளே முழுகுவோ மதிக மோடோம்
சமிக்கமு ணுண்ண மாட்டோ மிளவுறைத் தயிரை யுண்ணோம்
கமுக்கமா யிருப்போ மாகி லென்செயுங் கால னாமே ௩௭௬

கன்மநிவிர்த்தி

ஊழ்வினைத் தொடர்பி னாலே நோய்பலவு ண்டா மென்க
சூழுமந் நோய்க ளெல்லாந் தொந்தமாய் வாதை பண்ணும்
வாழுறு வாணாள் போக்கு மருந்தினாற் றீர மாட்டா
பாழுறு முடம்பை வாட்டும் பற்றிய கன்மத் தாலே ௩௭௭

கன்மத்தால் வந்த நோய்கள் காலனுக் கிரைய தாகும்
கன்மத்தை நிவிர்த்தி செய்தா னேயெலாங் கலங்கிப் போகும்
கன்மத்தின் பகுதி தன்னைக் கண்டிட லரிய தாகும்
கன்மத்தைத் தீர்க்க மாட்டார் கன்மசண் டாளர் தாமே ௩௭௮

சண்டாளப் பிறப்பி னோர்க்குத் தான்கன்ம வினைதீ ராது
மண்டியே வளர்ந்து கொல்லு மற்றவர் செய்கை யாலே
அண்டிய கன்மந் தானே யவர்க்குறு பகையாய் நிற்கும்
கொண்டிடு கன்ம மெல்லாங் கூட்டிய வினையான் மேவும் ௩௭௯

வினையறு சூட்சந் தன்னை விதிமுறை விளம்பக் கேளாய்
கனியுறு நாத விந்தைக் கருதுமோங் காரத் தாலே
நனியுற வளையச் சூழ்ந்து நடுநேராய்த் தலைபி னேற்றி
முனையதிற் சூல மிட்டு மேலினி மொழியக் கேளே ௩௮௦

மொழியுறு சூலத் துள்ளே மூலமாம் விட்டெ முத்தோ
டழகுற விடா தெழுத்து மிரண்டையு மட்சரித்தே
வழுவற நுனியதின் மேல் வயங்கிடச் சுத்தியிட்டங்
கெழுதுமிச் சூட்சத் தைச்சூழ்ந் திடவொரு வளையம் போடே

போட்டிடு வளைய மீதிற் பொருந்திய தளமீ ரெட்டுக்
காட்டியே சோட சத்தைக் கதிக்கவோர் வளைய மிட்டுத்
தீட்டிடு மிதழ்க ளெட்டிற் றிக்குப்பா லகரைப் போற்றி
நாட்டிடுஞ் சதுர வாயி னுலுதிக் கினுமெ டாயே ௩அ௨.

எடுத்தநால் வாயில் தோறு மெழில்பெறு கணேசன் கந்தன்
வடுத்தவிர் காளி வீர வாகுநால் வரையும் பூசித்
தடுத்திடு வெள்ளி செம்பொன் ஞானதோர் தகட்டிற் கீறித்
தொடுத்திடு கிரிகை தன்னைச் சொல்லுவன் றொகுத்துக் கேளே

தொகுத்திடு மண்ட பந்தான் சொல்லிய சதுர மாக
வகுத்துநால் வாயில் போக்கி மரபாகக் கோல மிட்டுப்
பகுத்தமேற் கட்டி மாவி னிலைதூக்கிப் பண்பி யாவும்
மிகுந்தமண் டபத்தி னுப்பண் விளங்கவோர் மேடை போடே

மேடையி னுயர மெட்டு விரனீளஞ் சதுர மாகப்
போடுவாய் முழமி ரண்டு பொருந்தவே சுத்த மாக்கித்
தேடுநெல் லரிசி பாசிப் பயறொடு திலம்ப ரப்பி
வீடரு ளியந்தி ரத்தை மேல்வைத்துப் பூசிப் பாயே ௩அ௫

பூசிப்பாய் மஞ்ச னந்தான் புனுகுடன் பஞ்ச சுத்தி
ஆசிப்பாய் தூப தீப மரியசந் தொடுசு கந்தம்
நேசிப்பாய் புட்ப சாதி நிவேதனம் பலவு மாக்கி
வாசிப்பாய் வாயி றோறும் வைத்திடு நாலு கும்பம் ௩.அ௬

கும்பத்திற் சலம்பூ ரித்துக் கூர்ச்சமிட் டாடை சாத்திப்
பம்புற்ற சூத பத்ரம் பரப்பிநற் றேங்காய் வைத்து
நம்புற்று மாலை சாத்தி நறியதாம் பூலம் வைத்து
வம்புற்ற மலர்தூய்ப் போற்றி வயங்குமெண் டிக்கிற் றனே

திக்கினி லட்ட கும்பந் தெய்வீக மாக வைத்து
முக்கிய முடைய வட்ட பாலரை முறையாய்ப் போற்றிப்
புக்க தோரிரவி வாரம் புலரியிற் றனம் பண்ணித்
தக்க வெக்கிய மோமத் தோடுரு லட்சந் தாக்கிடாயே

தாக்கியே பிணியா ளன்றன் சரீரத்தைச் சுத்தி செய்து
நீக்கரும் பிணியை நீக்கு நியமமாய் முன்பு வைத்துத்
தேக்கிய வன்பிற் பூசை செய்வன வெல்லாஞ் செய்து
பாக்கிய நீறு சாத்தப் பவப்பிணி பறந்து போச்சே ௩௮௯

போச்சது நோயா ளிக்குப் பொருந்திய பிணிக ளெல்லாம்
விச்சுறு குருவி னாலே மிக்கயந்தி ரத்தைக் கட்டி
வாச்சுதென் றயனு மாலும் வருந்தியுங் காண வொண்ணாத்
தீச்சுடர் வடிவாந் தேவ சிவநம வென்று போற்றே ௩௯0

சிவத்தைமுன் னாக மாறிச் செபிக்குமட் டாட்ச ரத்தால்
அவத்தமாங் கன்ம நோய்க ளடுத்தபேய் பசாசுந் தீரும்
தவத்தொடு தான தன்மந் தயவுடன் மிடியோர்க் கீந்தால்
நிவப்புற வளர்ந்து கன்ம வினைகளு நிவர்த்தி யாமே ௩௯௧

நிவிர்த்திய தாகு மிங்கு நிகழ்ந்திடுங் கன்ம மட்டோ
பவத்தினுக் குறுவித் தாய பாழிருண் மலமுந் தீரும்
தவித்திடு மாந்தர்க் கெல்லாஞ் சார்ந்திடு கன்மந் தன்னைப்
பவித்திரஞ் செய்யா விட்டாற் பாவம்பண் டிதனைச் சுற்றும்

சுற்றிய தோஷத் தாலே வயித்தியன் றாய்மை கெட்டுப்
பற்றுதீ நரகில் வீழ்வன் பழிவழி யாக நிற்கும்
உற்றசந் ததியு மற்றே யொழிவிலாக் கன்மஞ் சேரும்
முற்றுமீ துணர்ந்து செய்யும் வயித்தியன் முதன்மை யானே

முதன்மையாம் வயித்யன் கன்ம முதலிலே நிவிர்த்தி செய்தல்
அதுதனக் குறுதி யென்றே யறிந்துடன் செய்து நாளும்
மதியணி சடையெங் கோமான் மலரடி பணிந்து போற்றில்
கதுமெனப் பிணியுந் தீருங் கன்மமோ சனமு மாமால் ௩௯௪

மோசன மாமு ரோக முறைப்படி வகாசஞ் செய்யிற்
காய்சின வியாதிக் குற்ற குறிகுணங் கண்டி டாமற்
பேசிய கிரியை தப்பிப் பிசகாக மருந்து செய்வோர்
நீசராய்ப் பிறந்து மண்ணினெடுந்துய ருழப்பர் தாமே ௩௯௫

உழப்பதா நோய்கட் கெல்லா முறுதியா மருந்து செய்யிற்
களைப்பற நீங்கிப் போகுங் காலமே தங்கள் கண்டே
திளைப்புறு குறிகு ணங்கள் செவ்வையாய் நன்று ராய்ந்து
இளைப்பறு மருந்தை யீந்தா லேங்கியே மாயு மென்னே ௯௬

மாயமாய் மருந்து தப்பின் மறுபடி நோயுண் டாகும்
ஏயநோய் வந்த நாட்கோ ளெய்திய வலிமை கண்டே
ஆயதோர் சுகாசு கங்க ளாய்ந்துணர்ந் தவற்றைப் பார்த்துச்
சாய்வற வயித்தி யஞ்செய் வதுமிகத் தக்க தன்றே ௯௭

தக்கதோர் மருந்துக் கெல்லாஞ் சாற்றிய மருந்து சுத்தி
பக்குவஞ் செய்ய வேண்டு மல்லது பலித்தி டாது
மிக்கதாம் பத்தி யங்கெட் டிடுகிலு மீறிக் கொல்லும்
ஒக்கவே மருந்துண் டோர்க்கு முறுபிணி யொழிந்தி டாதே

ஒழிந்திடும் பிணிக ளெல்லா முரியபண் டிதனைக் கண்டால்
விழைந்திடும் வயித்தி யோனை மிகமனம் வருந்தச் செய்தால்
அழுந்திய பிணியா ளன்று ணதிகமா யுபாதிப் பட்டுச்
செழுந்திருப் பொலிவு நீங்கிச் சேர்குவ னரகி லம்மா ௯௯

நரத்துவ மில்லா தார்க்கு நோயுறி னன்மை யாகா
துரத்துநின் றிடுந்தி யான செபதபத் துண்மை யாலே
பரத்துவ முணர்ந்து பின்னைப் பரிகாரம் பண்ணிற் செய்யில்
வருத்துநோய் தீர்ந்து போகும் வளர்முலை மலையன் ஞாளே ௧00

மலைவுறு நோய்கள் வந்தால் வயித்தியஞ் செய்ய முன்னே
அலைவறு கணேச னுக்கு நிவேதன மவலெள் ளுண்டை
தொலைவறு பணிகா ரங்க டெய்யமோ தகம்ப ருப்பு
நிலவிய பொங்க லாவி னெய்யுட னப்ப மாமே ௧0௧

அப்பம்பிட் டுடனே தோசை யரியதோர் நாழி கேரம்
முப்பழ மிளநீ ராவின் முதியபால் பொரிக ரும்போ
டொப்பிலா வடைதே னுதி யுரியதாம் பூலத் தோடு
செப்பிய மலர்தூய்ப் பூசை சிறக்கச்செய் தேத்தி டாயே ௧0௨

எத்தியே தான தன்ம மின்பம தாகச் செய்து
காத்திர மாக வேதான் மருந்தினைக் கருதி யுண்ணிற்
றித்திற மதனிற் பட்ட பஞ்செனத் தேகத் துற்ற
நோய்த்திற மெல்லாந் தீரு' நூல்போலுண் ணிடையி னாளே

நூல்வழி

நுண்ணிய விந்நூ லைப்போ னூலெங்குங் கிட்டி டாது
மண்ணுளோர்க் கிரங்கி யெங்கண் மலைமட மாது போற்றி
அண்ணலை வணங்கிக் கேட்க வருளுமா யுருவே தத்தின்
உண்மையைக் கேட்டு வேதற் கோதினார் நந்தி தானே ௪௰௪

நந்தலின் வேதன் மேக நாதனுக் குரைத்த தந்த
இந்திர னிடத்திற் பெற்ற குறுமுனி யிப்பார் மீதில்
வந்தனை மிசர்க்குச் சொன்ன வகைவழு வாமற் கூறும்
முந்திய கவிநா னூறு முற்றுறச் சொன்ன தாமே ௪௰௫

அங்காதிபாதம் முற்றிற்று.

உ

சிவமயம்

அங்காதிபாதம்

(இரண்டாம்பிரிவு)

வாகடதத்துவம்

வன்னியு மறுகுங் கொன்றை மாலையு மதியும் பாம்பும்
சென்னியி லணிந்த முக்கட் டெய்வநற் களிற்றின் றாள்கள்
உன்னியே வழிபா டாற்றி யுரைபெறு மாயுள் வேதம்
தன்னிலே வாகடத்தின் றத்துவஞ் சாற்ற லுற்றேன் ௧

காணுறு கண்மூன் றானுங் காண்பவர் காண்பா ரத்தைப்
பூணுறு சிறியோ ராலே புகலுதற் கெளிய தாமே
நாணுறு தசைக ளாதி நரம்பினை நிறுத்துக் கட்டும்
மாணுறு பொய்பு மெய்யும் வகையுமே யுரைக்குந் துய்யோன்

துலங்கிய விருபத் தோரா யிரத்தறு நூறு சுவாசம்
இலங்கிய நாடி நாட்டி லெழுபத்தி ராயி ரங்கள்
விளங்கிய ரோம பேத மூன்றரைக் கோடி வீரும்
நலங்கிளர் கலையோ ரெட்டா நாலெட்டுப் பழுவாந் தன்மை 3

தந்தங்க ளுலெட் டாகுந் தளர்வினை யொருநான் காகும்
அந்தமா மறுமை யிம்மை யளவிலா மனஞ்சொற் காமம்
நிந்தையேழ் குற்றம் வாய்மை நீளவாம் பொய்மை கோபம்
முந்திய கிலேச மைந்தா மூவொன்பான் குணமு மன்னும் 4

பஞ்சபூதக்கூறு

மண்ணினிற் கூறு மென்பு நரம்புதோல் மயிரி றைச்சி
தண்ணீரின் கூறு சோரி சாருநீர் நிணமே மூளை
எண்ணமி லான மென்ப வெரியினின் மறப்புத் தாகம்
பெண்ணுறு புணர்ச்சி கோபம் பேசுறு முறக்க மைந்தே 5

கிடைநடை யிருத்த லோடல் கிளரவே நீட்ட லைந்தும்
தடையிலாக் காற்றின் கூறாந் தளர்விலா வானின் கூறும்
இடைவிடாக் காமங் குரோத மெழுமதம் லோபங் கோபம்
புடைபெய ராய வைரந்தும் புக்கவே பூதக் கூறும் 6

கூறிய தொண்ணூற் றாறு தத்துவக் குழாங்க ளோடங்
கேறிய பிராண வாயு வெண்ணிய பிராண னாகி
எறியே றுது போன்றங் கிபல்வினை புணர்த்து நாடி
தேறிய சுவையுண் ணாது செய்வினைப் பயனுண் டாகும் 7

முப்பிணியியல்பு

ஆகிய வியாதி மூன்று மணிபெற வுடலிற் றங்கி
ஆகிய புசிப்பி னாலே யவ்வுயிர்க் கின்பங் காட்டி
ஆகிய முனிவுங் காட்டி யழிந்திடப் பிரித்துக் காட்டும்
ஆகிய வுயிரா கத்துக் கபிமானி யாவ தாமே 8

ஆக்கையிற் பிணியே கூறி லாதியாம் வியாதி தானும்
தாக்கிய வாத பித்தந் தளர்வில்சேற் பனமே யாகும்
தேக்கிய வாயுத் தானுஞ் செப்பிய மூலா தாரம்
நோக்கிய பித்த மங்கி நுண்சப மனிலத் தன்பாழ் 9

அனிலமே கறுப்ப தாகு மானதோர் பித்தஞ் செம்மை
பனிநிறப் பளிங்கு போலும் பாவுசேற் பனத்தின் மேனி
நனிபெற நாடி யோடே நயந்துநின் றுடற்கு ணரும்
முனிவுநற் குணமு முண்டா முறையறு சுவையுண் வாய்ப்பால்

வாதமே யப்பி னோடே மருவிய மூலம் பற்றிப்
போதவே சுழுனை யோடு பொருந்திமெய் தோய்ந்து நிற்கும்
நீதமா யங்கி மீது நின்றுமா ருதத்தோ டொன்றிச்
சீதமே யன்றிப் பித்தச் செயல்கள்வெவ் வேறாய் நிற்கும்

நின்றிதை யத்துட் காற்றி னோர்கபங் கலந்தங் குன்னி
நன்றிய கபமுஞ் சீத நயந்துபி னியாமத் தெய்தும்

கன்றிய வாதத் தோடுங் கனலூறு பித்தத் தோடும்
ஒன்றினோ டொன்று மொன்றி யிரண்டுட னுயிர்போமொன்றாய்

ஒன்றிய காலை பித்த முயர்நடுப் பத்து மையம்
கன்றிய மாலை வாதங் கங்குலிற் கபமுன் பற்றும்
நன்றிய நடுவே யான நாழிகை பத்தும் பித்தம்
வென்றிட விடியப் பத்து மேவிடும் வாத மெய்தி 13

எய்திய வாதக் கூறங் கிடையள வாகு மற்றும்
வெய்தழற் பித்தக் கூறு விரவிய கண்ட மட்டாம்
ஐயதிற் கூறு மெய்யி லானதோர் சிரமே யாகும்
மைதிகழ் வியாதிக் கெல்லா மன்னரொப் பாகு மூன்றும் 14

மூவர்போன் முதன்மை யாகி முதன்மைமுத் தொழிலே யாகி
யாவதும் படைத்த ளித்தங் கழிப்பதுந் தாமே யாகித்
தேவர்போல் வியாதி யெல்லாந் திரண்டுசூழ்ந்திடத்தாமோங்கிப்
பாவகம் பலவுங் காட்டி மீண்டுதம் பதிக்கு ளாமால் 15

ஆமதா மரையில் வாத மனுதின மாகி நாபிக்
காமமார் பிடையிற் கையிற் கதித்தவென் பினில்மேற் றோலில்
நாமமார் நாடியெங்கு நடந்து மெய் யளவுங் காட்டித்
தூமமார் பரிச மெய்தித் துடருமிந் திரிய மெய்யாம் 16

ஐயதா நாடி தானு மங்குல மிரண்டுக் கப்பால்
துய்யதாம் பித்த மெய்தித் துவழ்ந்திடுங் கனவிற் காட்டி
வெய்யதா மெய்யி ரத்த மேவிய நரம்பிற் றண்ணீர்
செய்யதாங் கண்கள் நாடிச் சிலேற்பன மிருக்குங் காணே 17

கானமார் கபத்திற் காற்றுக் கழுத்தினிற் கலந்து சந்தில்
நானமார் சிரத்திற் பற்றி நண்ணுமூ ளைக்கு ளுன்னி
ஊனம தாகும் பைய வுள்ளூற்ற நாவுண் மேதை
கோனமார் முற்க பத்திற் கூடியே திரமாங் கோழை 18

வாதரூபம்—தொழில்

கோலுறு வாத ரூபங் குறித்திடிற் சுவாசந் தங்கி
மேலுறு வெப்ப மற்ப மேவிய சீத மிக்காம்
காலுறு தொழிலே தென்னிற் கண்களைத் திறத்தல் மூடல்
தாலுறு மசைவு கைகால் தரித்தல்நின் றோடல் நீட்டல் 19

நீட்டலு முடக்க லும்பின் னீளுறு சுவாசங் கீழ்மேற்
காட்டலும் படுத்த லுஞ்சொற் கடுத்தலு முவப்பும் வீரம்
கூட்டலு முயற்சி யுஞ்செய் கொடுமலஞ் சலம்விந் தாக்கை
வீட்டலு மெடுத்த லுங்கை விதானமுங் காலிற் செய்கை 20

வாதகோபம்

செய்கையாந் துவர்ப்பிற் கைப்பிற் சென்றிடும் வாத கோபம்
பொய்கையாந் தரத்துட் டேகம்பொருந்துநீர்மலத்தைத்தாக்கிச்
செய்கையாஞ் சுவா தஞ் சோகஞ் சுரங்குளிர் நடுக்கந் துன்பம்
மெய்கைவா யெழும்பா வண்ண மெலிவுற வணக்கிக் கட்டும் 21

கட்பெரு மலங்கள் மந்தங் கறட்டென நோதல் வற்றல்
கொட்பெரு வெயர்வு ரோமங் கூர்ப்புதல் குளிர்தல் காற்றும்
உட்புற முலாவல் சந்தி னூடுநோப் பிடிப்பு மாதல்
வெட்கையால் வாத சன்னி மேவிடு மென்று கூறே 22

வாதம் கோபித்தற்கு ஏது

கானடை யாலச் சத்தாற் கடும்பசி யாற்கோ பத்தால்
ஊனமி லிரவில் வார்த்தை யுரம்பெற விரைக்க லானும்
ஆனபின் முனிவால் மாறு தடுதடுத் துரைக்குஞ் சொல்லால்
ஈனமி லிகழ்ச்சி யான விகல்வாத கோபங் காணும் 23

வாதம் கோபித்தகுறி

காற்றுறு கோபத் தால்வாய் கசப்பிலா தினிப்புப் பெய்தும்
தோற்றுறு புத்தி மந்தஞ் சொல்லுரை காட்டுங் கண்ணால்
தேற்றுறு வாய்மை நீங்குஞ் சிரரோகக் கோப முண்டாம்
கூற்றுறு கால மான குணமுநற் குணமும் பண்பாம்

வாதசரீரத்தின் குணம்

பதிபெறு வாதத் தாலே பற்றிய குணங்கள் செப்பில்
மதிபெறப் புரியுஞ் செய்கை மல்லென வெனவ ழுந்தி
அதிகவெம் பொய்யுங் கூறு மையுற வுழல்வ தாகும்
விதிதலை மயிரே யற்பம் வெங்கீரின் புற்றே தேடும் 25

உடலது கருமை செம்மை கன்னமெய் யுறுப்புத் தூலம்
திடநெறி யறிவு போதஞ் செபநிலை கருணை நீதி
மடமயி லனையார் மீதின் மயக்கம்வஞ் சகத்தாற் றேடல்
படைபடச் சலித்தல் போரிற் பதறியே புறங்கொ டுத்தல் 26

கொடுத்திட லோப ஞானங் குருவுற வறிஞர் தம்பால்
அடுத்திடா துள்ள தின்ப மானதோர் கனவு தன்மேல்
எடுத்தெறிந் திடவுங் காண்ட வினியதண் புனல்வேண் டாமை
தொடுத்தது முடியாத் தன்மை தோன்றுமா ருதத்தின் செய்கை

பித்தரூபம்—தொழில்

எடுத்திடும் பித்த ரூப மியம்பிடின் மதியி ராகம்
கொடுத்திடு நினைவு நன்மை குறித்திடும் பார்வை சூட்சி
தொடுத்திடுங் கிரியை வீரந் தூய்மலர் மேனி பொன்னும்
அடுத்திடு மழகு காந்தி யதிகவெம் பசிக ளாமால் 28

பித்தகோபம்—குறி

ஆயுறு பித்த கோப மதிசெயம் வெப்புத் தாகம்
தோய்வுறு மயர்வு மூச்சுச் சொன்மதம் புத்தி பேதம்
பாயுறு முனிவு வீரம் பரவிய புளிப்பி வின்பம்
வாயுறு முதிரங் கண்கள் மலஞ்சல மஞ்ச ளாகும் 29

குணம்பெறு முகங்கள் மேனி கூர்சிரந் திரங்கி வற்றல்
கணம்பெறு மனம்வே றுகக் காட்டிடுங் குளிர்கா லத்தில்

மணம்பெறு சலமேற் றூகம் வைத்துநா டிடும்பின் வெப்பால்
நிணம்பெறு மதிசா ரத்தை நீட்டிடு முனிவாய்ப் பித்தம் 30

பித்தம்கோபித்தற்கு ஏது

பிணிதரு பித்த கோபம் பெருகவுண் டாகு முண்டி
கணிபெறு மழற்சி யுப்புப் புளிப்புறைப் பதிகத் தாலும்
பணிதரு மதுவி னாலும் பாரண மிகுத லாலும்
மணிதரு வெயர்வு வெய்யில் வழிநடை முனிவி னாலும் 31

ஆனவெம் பித்த கோப மாமடி படுமுக் காலம்
ஆனசொற் பனம்வீழ் கால மதிபசி தாக காலம்
ஆனமெய் வெயர்வு மூர்ச்சை யழிமுனி வெய்துங் காலம்
ஆனமங் கையர்மே லாசை யணிசுக மடையுங் காலம் 32

காணுறு பித்த கோபங் கதித்திடிற் பெருத்த காலம்
காணுறு கண்ணிற் பார்வை கலங்குதல் தெளியுங் காலம்
காணுறு புளிப்புத் தித்திப் பழற்சிகள் சுவைக்குங் காலம்
காணுறு மெய்யி லேப்பங் கலந்திடக் கலக்குங் காலம் 33

காலொடு கபமுங் கூடிக் கலப்பினுங் கனல்சேர் பித்தம்
காலொடு கலவா துற்றே கதித்திடிற் கனத்த வாயு
காலொடு கலந்தங் குண்ணக் கருத்தொடு பசிகண் டுண்ணில்
காலொடு கலவா தென்றுங் கடும்பசி விளைத்து வெப்பாம் 34

ஆலமார் பித்த கோப மாயிடி லத்தி மீது
கோலமார் வெப்புத் தோன்றிக் கொதித்தெழுக் தண்ணீர்த்தாகம்
ஞாலமா ரிராக்கா லத்தி னண்ணுமத் தியானத் தின்பின்
சீலமார் நிசிமூ வைந்து சென்றநா ழிகையிற் செய்யும் 35

பித்தசரீரத்தினியல்பு

செய்யவே பித்த முற்ற செய்குண மறிந்து செப்பில்
மெய்யுரை ஞானங் கேள்வி மிகுபொறை புகழ்சொல் செம்மை

ஐயுற லறிவா சார மடக்கமைந்தடக்க லாண்மை
பொய்யற லழகு நன்மை புகல்நிறை நெறியி னிற்கை 36

நிறைநெறி ஞானத் துண்மை நேர்மையாய்த் தேறல் நீர்மை
குறைவற மடவார்க் கொத்த குணமிக விளமை தன்னில்
கறையற நரைத்தல் நாளுங் கனமுற வெயர்த்தல் கண்கள்
முறைகெடல்சிவத்தல்மேனிவெளுத்தல்சொன்மிகமெத்தென்றல்

என்றுநாற் கலைக ளோதல் யாவரும் போற்றல் சித்தம்
அன்றியே யிருத்தல் நாளு மறிவுடை யோரைப் போற்றல்
நன்றியே யறிதல் நாணல் நயத்தல்சிக் கெனவின் பார்த்தல்
கன்றியே கனவி லங்கி காய்தல்சேர் பித்த மாகும் 38

சிலேற்பன ரூபம்

ஆக்கிய கபரூ பத்தை யறிந்திடு முறைமை செப்பில்
தேக்கிய குளிரே யற்பந் தீயவெப் பதிகங் கண்டம்
தாக்கிய கோழை யாலே தளர்விலாத் திடமுண் டாகித்
தூக்கிய புத்தி யன்றித் துயருறு கெடுதி காட்டும் 39

சிலேற்பனத்தின் தொழில்

காட்டிய கபமே நாளுங் கருதிய தொழிலைக் கூறில்
ஒட்டிய வாயுப் பின்னு முவட்டியே கபத்தைத் தள்ளும்
வாட்டிய பித்தந் தள்ளும் மருவியே யுடலின் முற்றும்
கூட்டிய சந்துக் கெல்லாங் கொளுநரம் பிறுகி நிற்கும் 40

நின்றிடு மகமெய்ப் பூசை நீங்காமற் றுனே தாங்கி
நின்றிடுந் தித்திப் போடு நிறைந்திடு முணர்வு கொள்ள
நின்றிடு நேய நாளு நிகரிலாப் பொறையுண் டாகி
நின்றிடும் பழைய வுப்பி னிரசம்போ னெஞ்சிற் காணும் 41

சிலேற்பன கோபம்

காரண காரி யத்தாற் கதித்திடுங் கபத்திற் கோபம்
ஆரண சேர்க்கை யாலே யாயிடும் பண்பு கூறில்

பூரண வசந்த காலம் போதுமத் தியானத் துள்ளும்
வாரண நிசிமு வைந்தி னுள்ளுமுண் மருவ லாகா 42

காணுறு கபகோ பந்தான் கனமதூ மகர மாதம்
காணுறு சலமே யுண்ணக் கருதிய மந்தந் தாஞ்சக்
காணுறு கன்ன லெள்ளுக் கடும்புளிப் புறைப்புப் போடு
காணுறுந் தித்திப் பான கறிமுத லன்னங் கொள்ளே 43

கொண்டிடுங் கபகோ பத்தாற் குமிறிமுக் கடைத்து வீசப்
கண்டிடுந் தினவு வாந்தி காசமே சுவாசம் வெப்பு
மிண்டிடுங் கபோல மொட்ட மிகுதடிப் பாய்வாய் வெள்ளை
அண்டிடு மதூஞ் சீத மற்பசித் திரையோ டாக்கை

ஆக்கையிற் பிராணனை வனிலமோ டமருஞ் சந்து
ஆக்கையாற் பெலத்துக் கட்டு மைந்ததாந் தொழிலே யாகும்
ஆக்கையா லேக தேசத் தன்னிய மில்லை யென்றும்
ஆக்கையா மனிலம் பித்த மதிற்சிலேற் பனமுஞ் சேர்ந்தே 45

சிலேற்பனதேகத்தினியல்பு

சேற்பன குணமே செப்பிற் சிவப்புமெய் மனஞ்சிக் கென்றல்
ஏற்றுறும் பொய்கே ளாமை யேக்திமை பார்க்கின் பெய்தல்
மாற்றிய கனவில் நீரை மருவுதல் மகப்பே றுண்டால்
கேர்த்தியா யற்ப நீண்டு நிற்பதாங் குணத்தி னாலே 46

வாதபித்தரூபம்--தொழில்

ஆதியாம் வாத பித்தத் தடைந்திடும் ரூபம் வைத்த
தாதியாம் யாக்கை மீதி லதிகமாய்க் கூறல் தானும்
ஆதியாந் தொழிலே தென்னி லதிநடை சேட்டை முட்டும்
ஆதியாம் புளிப்புத் தித்திப் பழற்சியூண் சூட்டோ டுட்டும் 47

ஊடிய வாத பித்தத் துறுதியா விளைத்த மேனி
நீடிய புத்தி வேறாய் நினைவுறாத் தினமுந் தஞ்சும்

கூடிய நடையே யற்பங் கூர்த்தவாய் தடித்து நாளும்
நாடிய வுரைசத் தத்தோ டுயர்ந்திட நவில்வ தாகும் 48

ஆதியாம் வாத பித்தத் தடைந்திடுங் குணத்தா லாகும்
நீதியாம் புத்தி வித்தை நிகரிலாக் கொடைசொற் பாடல்
பேதியாத் துணிபு வெற்றி பிறிவிலாப் படைகாண் வேட்கை
வேதியா வற்ப கோட்டி மிகைபடப் படைத்த வார்த்தை 49

வாதசேற்பனரூபம்--தொழில்

வாதுறு சுணங்கன் சம்பு மருவுமோட் டகம்போ லோசை
மீதுறும் வாத பித்த மேவிய குணத்தின் செய்கை
தாதுறு மனில மையிற் சார்ந்திடும் ரூபங் கூறிற்
போதுறு மற்ப சூடு பொருந்திட வளரு மேனி 50

வாதசேற்பனகோபம்

மேனியாம் வாத சேற்ப மேவிய குணத்தைக் கூறில்
மேனியி லற்ப விந்து விளைவுநித் திரையு மற்பம்
மேனியாங் கோப மாகின் மிகுதித்திப் பாகும் வெப்பாம்
மேனியாங் கோபஞ் சற்றே விரவுவாய் தடித்துக் காணும் 51

வாதசேற்பன சரீரஇயல்பு

காற்றுறு சுபத்தைச் சேர்ந்த சாரிய மினிது கூறின்
நாற்றிசை புகழுண் டாகு நயனமு முருட்சி வெம்மை
தோற்றிய விமையு ரோமந் துளக்கற வரைக்கண் டுஞ்சும்
ஏற்றிடு மழகா மேனி யிளக்குமே யெவருங் காண 52

காலையுற் றதனு லின்பங் கலந்தசே லற்ப மாகும்
சோலையிற் றிருவை நோக்கிற் சூழ்பெரும்வளமாய்த்தோன்றும்
வேலையிற் படையை வெல்லும் வீரமாங் கழுகு காக்கை
மாலையிற் குரல்போல் வார்த்தை வழுத்துமு ளிகலனென்ன 53

பித்தவாதரூபம்—தொழில்

எண்ணிய வியோம மாதி யெழுந்தவைம் பூதம் போல
நண்ணிய வாயு வின்க ணலந்தரு வன்னி யுண்டாம்
தண்ணியல் பித்தம் வீறுய்த் தனித்தெழுங் காற்றோ டொன்றாய்
நண்ணிய வன்னி தானே நவலுறு பித்த மாகும் 54

ஒருமையாய்ப் பித்தங் காற்றோ டொன்றிய ரூபங் கூறில்
பெருமையா முடலே வற்றிப் பெறுங்கழல் வெளுப்பா மிக்க
கருமையா முரோம மெல்லாங் கலந்தசெவ் வண்ண மாகும்
இருமையாந் தொழிலே தென்னி லெழுப்பிடும் பசிதா கத்தை

பித்தவாத கோபம்

தாகமாம் பித்தங் காலுந் தழுவியே கோப மாகில்
மோகமாஞ் சுரமுண் டாகு முனிவுறச் சலிக்கும் புத்தி
வேகமாங் கைப்போ டுண்ணும் விரகுறு சீதம் வேண்டும்
போகமாந் தொழிலே யுண்ணும் புயாசலம் பெலனு மன்னும் 56

பித்தவாத சரீர இயல்பு

மன்னிய பித்த வாதத் தடைந்திடுங் குணத்தால் வாய்ப்புத்
துன்னிய சூர னுருகுஞ் சுசிகுளிர் தலத்தின் மேவும்
பன்னிய புகழ்ச்சி தேடும் பகர்முகங் கைகால் வற்றும்
உன்னிய கணைக்கால் மீதே யொளிசிவப் பதிக மாகும் 57

ஆயுமத் தியானம் போக மதிகமாங் கனவிற் காற்றாய்த்
தேயுவென் றிடுமெப் போதுஞ் செய்கையாய் மருவக் காணும்
தோயுமே வெயர்வ ரும்பத் துர்க்கெந்த முண்டாம் பித்தால்
வாதமே யடைத லாலே வாரிபோ லொலிக்கும் வார்த்தை 58

பித்தகிலேற்பன ரூபம்-தொழில்

வாசமாஞ் சேற்ப னந்தான் மருவிய ரூபங் கூறில்
நேசமா முடலே வெள்ளை நிறஞ்சிவப் படையு நீண்ட
கேசமாம் வெம்மை துன்னுங் கிளராகஞ் செம்மை யாகும்
பாசமாந் தொழிலே தென்னிற் பரவிய பசியா மன்னே 59

மற்றுமே துவர்ப்புக் கைப்புத் தித்திப்பு வாய்ப்ப வுண்ணும்
முற்றுமே பித்தங் கோழை மூச்சுமுச் சுரமுண் டாகிப்
பற்றுமே விக்கல் சத்தி பலபல விதநோய் தாகம்
சற்றுமே தரியா தென்றுந் தனிப்பெருங் கபமே கொள்ள 60

பித்தசிலேற்பன சரீரத்தினியல்பு

கொண்டிடு பித்தங் கோழை யுடனுறு குணத்தின் செய்கை
கண்டிடு மாண்மை சூரங் கடும்பசி காள வண்ணம்
உண்டிடுங் குளிர்மை சாரு மூவந்தடைந் தவரைக் காக்கும்
விண்டிடுங் களவு மச்சம் விரகுறப் புணரு மெச்சே 61

மெச்சிய மதியை மாதர் மேலுறு தயவை யின்பைப்
பச்சிய தெளிவைப் பண்பைப் பகையைநீக் குதலை யீவை
உச்சித மொழியை காளு முயர்நிதித் தேட்டை வாசப்
பிச்சிநன் மலரைச் சாந்தைப் பிரிந்திடார் மித்தை யெய்தி 62

எழுந்திடு மிருகம் பூனை யிசைக்குயி லென்னப் பேசும்
கொழுந்திடும் பலாசைக் காற்றைக் கோங்குவெங் கதிரைக் கங்குல்
அழுந்திடுங் கனவிற் காணு மாகமா காய மேறி
விழுந்திடில் விழிக்குந் துஞ்சு மிகவுற விதைமேற் கொண்டே

கொடுங்கன லொளியில் வீறுங் கோபத்தீ மனுவி லின்பம்
கடுங்கனல் துக்கங் கோடை காலங்கண் டுஞ்சு மெய்யிற்
தொடுங்களி கள்பம் பூசுஞ் சந்தனம் சுகந்தந் தேடும்
நெடுங்கனற் பித்த மையை நீங்கிடாக் குணத்தி னாலே 64

சிலேற்பனவாதரூபம்—தொழில்

ஆர்ந்திடு கோழை வாதத் தடைதலா லுருவங் கூறில்
சேர்ந்திடக் கான்ற சென்னல் நிகழ்நிற மாகு மேனி
கூர்ந்திடு மற்ப வன்னி கொள்வதாந் தொழிலே தென்னில்
சார்ந்திடு சுவையோ டன்னஞ் சமைத்தரு டெய்த வுண்ணும்

சிலேற்பனவாத கோபம்

உண்டியிற் றுவர்ப்புங் கைப்பு மூரம்பெறப் புசிக்கு மற்பம்
பண்டையிற் கோழை வாதம் பலகத்திடி லுடலம் வேர்ப்பாம்
மிண்டிய குளிர்சு வாசம் விளைந்திரைப் புண்டா மந்நாள்
அண்டியே வரத்துக் காட்டு மதிகுண பேதங் காட்டும் 66

சிலேற்பனவாத சரீரத்தி னியல்பு

காட்டிடுங் கபம்வா தத்தைக் கலந்திடு செயற்கை யாவும்
நாட்டிய சினேகம் புத்தி நனிபொறை நெறியா சாரம்
பாட்டிய லறிவு பண்பாம் பருத்தெழு மார்பு நெற்றி
ஓட்டிய கண்கள் நீண்டங் குருண்டகன் றெய்தும் போதாய் 67

போதெழ மலர்ந்த கண்கள் பொருங்கடை சிவந்து தோன்றும்
சூதெனக் குவிந்து விம்முந் துணைமுலை மாதர் கோட்டி
ஈதெனக் காம பாணத் திசைந்ததா மரையைக் காட்டித்
தீதினன் மொழியா முன்னஞ் சேர்ந்திடு குறிப்புங் காட்டும் 68

வேறு

கானுறு மத்த யானைபோல் நடையுங் கருங்கடல் பேரிகை மற்ற
வானுறு மெழிலி யெனநிகர் மொழியும் வளர்தருதூலமாமெய்யும்
தேனுறு மாதர்தெரிவையர் திறமுந்திகழ்பிரமாணமுந்தவமும்
கோனுறுமதியுங்கொடைநடைபடா தகுணமுமாங்கோழைமாருதத்தால்

மால்வரு பிறவி மனைவியை வெறுக்கு மருவிய கனவினிற் சிங்கம்
சூல்வரு மேகம் பிரமணி காமன் சுரூபமும் விழியுறக் காணும்
மேல்வருங்கருமமுறைத்துமுள்ளொடுக்குமேவியமாயையைவிடுத்தும்
கால்வருயோகம்விளைத்துமின்பெய்துங்கபமுடன்கூடியகாற்றால்

சிலேற்பன பித்தரூபம்—தொழில்

வேறு

காமமாங் கபமே பித்திற் கலந்திடும் ரூபங் கூறில்
ஏமமா மலர்செங் கோரோ சனைநிற மெய்து மேனி

தூமமாங் கனல்போல்வெப்புத்தோன்றிடுங்கொழிலேதென்னில்
நாமமா மிரசங் கைப்புச் சினப்புமேன் மூச்சுக் கோழை 71

....

....

சாரம்பெறு மழற்சி வீக்கந் தோன்றிடுந் துவர்ப்புக் கைப்புக்
காரம்பெறு சூட்டோ டன்னங் கலந்துண வுறவாஞ் சிக்கும் 72

சிலேற்பன பித்த சரீரத்தி னியல்பு

சிக்குறு கபமே பித்திற் சேர்ந்திடுங் குணத்தின் செய்கை
தொக்குறு கவடி யென்பு தோன்றிடும் பெரிதாய்த் தோன்றும்
அக்குறு தசைந ரம்பங் கதிகமா யகன்ற மார்பாம்
இக்குறு மொழியார் மோக மெய்துசெங் கண்க ளாமால் 73

ஆயுறு புசிப்புக் கோப மற்பமா யழுகை புத்தி
மாசுறு துக்க மான மகிழ்ச்சிமெய் யொடுக்கம் யோகம்
தேசுறு மழகு செல்வந் திகழ்புயம் பெருத்த சாதி
பேசுறு பொறுமை வார்த்தை பெற்றதாம் பித்தை யண்டி.

அளிதரு கரும மீதி லன்புகெம் பீர மன்றிக்
களிதரு கொடையா சாரங் கருதுறு சினேக மோகம்
ஒளிதரு மசதி மந்த னுடனுப கார முண்மை
தெளிதரு மறிவு ஞானஞ் சேற்றும பித்தத் துண்டாம் 75

உதித்திடு மெழிலி பேரி யுத்திகொ ளரிபோற் சொல்லாம்
கதித்திடு நாக மென்ன நடக்குமே கெஞ்சிற் பற்றிப்
பதித்திடும் வயிர மெந்தப் பகையினு மின்ப மெய்தும்
மதித்திடு கபத்திற் பித்த மருவிய குணத்தி னாலே 76

ஆனசொற் பனத்தி னாதி யாதியோ டனாதி யாகி
ஆனநற் புலவர் மேகம் வருணனிந் திரனோ டெண்மர்
ஞானமே கருடன் பட்சி நனிசலப் புட்கள் யானை
ஈனமுற் றிடுசிங் கங்கோ விடமைபித் தத்தாற் காணும் 77

முப்பிணி
வேறு

காயமுற்ற காற்றினாற் கதித்தெழுந்த பித்தமும்
தோயமுற்ற தானமெய் தொடர்ந்தெழுந்த கோழையும்
நேயமுற்ற தொன்றிரண்டு நெற்பறப் பகைத்துயர்
ஞாயமுற்ற காலன்முன்னர் மண்ணைவிட்டு நண்ணுமே 78

அகத்திலுற்ற காற்றினை யவித்தெழுப்பு மக்கினி
முகத்திலுற்ற விந்துவை முளித்திடா தமைத்திடும்
பகத்திலுற்ற முத்தினைப் பரப்பிமெய் யழித்திடும்
சகத்திலீது கண்டவர் தனித்தறிவ துண்மையே 79

உண்மையான வாயுவு முகந்தெழுந்த பித்தமும்
வெண்மையான கோழையும் விளைந்துகூடி விந்துவாம்
பெண்மையான யோனிவாய்ப் பிறப்படுத்து வாதமே
வண்மையான கோழையை வழுக்கிவீழ்த்து மாந்தரே 80

வேறு

மையுறு மாயை கூடி மறைப்பமண் ணிடையே வீழச்
செய்யுறும் வாதத் தாலே சேற்பனந் தள்ளும் போது
மெய்யுறு வருத்த மெல்லாம் விளம்புவ தறிந்தே நீவிர்
ஐயுறு தொழிலி லுன்னி யடைத்தது பகர லாமே 81

முப்பிணியினாட்சி

பகருமுப் பிணிக டாமும் பாவிய வயது நூறு
மிகவுமுக் கூற தாக விரும்பியே யாளுஞ் செய்கை
அகமுறு கபமே முன்ன ரதன்பின்னர் மருவும் பித்தம்
அகமுறு மதனபின் னுரு மனிலமே நிற்கு மேலாய் 82

மேலுறு கூறுக் காண்டு விளம்பிலா றைந்து மூன்று
மாலுறு மாத நான்கு மருவுசேற் பனத்தின் கூறும்
கோலுறு மதனுள் ளாண்டீ ரைந்தொடு கூட வொன்றும்
காலுறு நாலெண் ணைந்து கருதிய கபமே யாளும் 83

ஆண்டிடு மிரண்டாங் கூறி லதிகரித் தேறிப் பித்தம்
தாண்டிடு மூன்றுங் கூறிற் றணித்துமா ருதமே பொங்கில்
மீண்டிடும் பித்தக் கூறில் விரும்புமுற் கூறே பித்தம்
தீண்டிரண் டாங்கூ றையுந் திகழ்வாதக் கூறு மூன்றும் 84

கூறிய வனிலங் கூறிற் குலவுமுற் கூறும் வாதம்
மீறிய விரண்டாங் கூறில் மிகுத்தெழும் பித்தந் தானே
ஊறிடு மூன்றுங் கூறி லுளத்திடுங் கபமே மிக்காய்
ஈறுசெய் திடுமென் றைய னியம்பிய வாறு தானே 85

தானவை புசிக்குங் காலந் தான்பகை யாகி மற்றும்
கானமங் நேர மாருங் கடிகையிற் பரவி நாளும்
தானதிற் கோளுங் கூடிற் றரித்திடா தாவி பூவில்
ஊனது கிடப்பவானி னுயர்வழிச் செல்லு மன்றே 86

அன்றுறு நேரங் கால மவையவை புசிப்புக்கன்றி
நின்றுறு மற்றொன் றெய்தி நேர்படப் பொசிப்ப தாகில்
நன்றுறு முற்ற நோய்கள் நாடியே யதனுட் சேரில்
வென்றுறு மருந்து தானே வினையற மாற்று மின்பாய் 87

இயம்புமித் தகைமை மூன்று மிடர்புரி வகையே தென்னில்
நயம்புகாச் சுவைக ளாலே நாடிய வகைக ளாகும்
வியன்பெற வொன்றி னோடே மேவியங் கொன்று கூடில்
சயம்பெறு மருந்தினாலே தாழ்ந்தது தீருந்தானே 88

தழைத்திடு முடனே யொன்றாத் தனித்தெழுந் துற்றநோய்கள்
பிழைத்திடு மிரண்டி னோய்கள் பேசினுட் சென்று மாறும்
வளைத்திடு மூன்றுங் கூடி வளர்ந்தநோ யாக்கை தன்னை
விழுத்திடு மருந்தைச் சீறி வென்றிடுங் காணத் தானே 89

நேர்பெறு வினையோர் மூன்று நீடிநித் திலத்தோ டொன்றிப்
பேர்பெறு முடிகிழாகப் பெருகவே வருத்தஞ் செய்யும்

ஏர்பெறு காய மொன்று மேவுதோ விலையா மைந்தும்
வார்பெறு முலையாய் கோப மாற்றுமே யாக்கை மண்ணில் 91

முப்பிணிக்கும் 3 மருந்து

மதுவுறும் புளிப்பால் வாத மாற்றிடு மதனை நெல்லி
கருவுறுங் கைப்பாற் பித்தங் கழன்றிடும் புடோலைக் கொள்ளில்
பெருகுதித் திப்பா லையின் பேதக மாற்றுஞ் செக்தேன்
அருவினை மூன்றின் கோப மமர்ந்திடு மகலு மன்றே 91

உவாந்திமுதலியன

அணிதரு மாயுள் வேதத் தறைந்திடு மருந்தி னாலே
பிணிதரும் வியாதி மூன்றும் பெருகிய கோபந் தீரத்
தணிதரு முவாந்தி பேதி நசியமஞ் சனஞ்செய் யென்றே
மணிதருஞ் சோதி மாதுக் குரைத்தனர் வகுப்பாய் நித்தர் 92

நிலஃிசை மாந்தர் நோய்கள் நீங்கிடத் திங்க ளொன்றில்
சலமற வுவாந்தி செய்யத் தக்கதாந் துலாமா தத்தில்
மலமறப் பேதி செய்க மாதமொன் றினிலே நையம்
பலமுறை மூன்று நாளஞ் சனமிடப் பகர்ந்த தாமால் 93

நாலுதொழில்களின் பயன்

ஆதிமுப் பிணிக டர வமைத்திடுந் தொழில்க ணன்கிற்
பேதிக்கத் தாழும் வாதம் பித்தஞ்சத் திக்கத் தாழும்
ஓதிய நசியத் தாலே யுயர்கபந் தாழு நிற்க
நீதியஞ் சனத்தான் மிக்கு நிகரிலா வொளியாங் கண்ணே 94

ஆடகப் பொதுவி லாடு மையனை யன்ப ருள்ளத்
தேடகப் போது நீங்கா விறைவனை யிமய வல்லி
யோடகத் திருத்தி மூன்று பிணிகளா லுற்ற மெய்யின்
ஊடகப் பிணிக டர வுரைத்தனர் மருந்து வாய்ப்ப 95

நேர்வாளப்பேதி

வாளகஞ் சதனைப் போக்கி மருவுநேர் ‡நீதந் தன்னில்
மீளவுஞ் சுத்தி செய்து மிளகுசுக் கதனோர் கூட்டி
நாளதொன் றரைததுக் குன்றி யளவினி லுண்டை செய்து
கோளற வெண்ணெய் சுக்கிற் கொள்ளமா ருதர்க்காஞ் சுத்தி 96

சிவதை

சுத்தமாம் பாலில் வெந்த சிவதைவேர்த் தோலைச் சீவி
ஒத்தசீரா சனிகற் றூளை யுயர்கடு தான்றி நெல்லி
சித்தமா யிடித்த தைத்துச் சேர்வெரு கடியே போதப்
பித்தமுந் தாழ வெந்நீர் தனிவிடப் பேதி யாமே 97

கடுக்காய்

ஐந்ததாங் கடுக்காய் தட்டி யானகோ சலநீர் நாழி
முந்தநாள் தன்னி விட்டு முதிரவே யுரியாய்க் காய்ச்சி
அந்தமா யிறுத்தங் கோரேழ் வடிவடித் ததிலே ரண்டம்
தந்ததாங் கழஞ்சே யெண்ணெய் தானுணத் தாழும் †வல்லை

பேதிச் சரக்குகள்

திரிபலை யவுரி கள்ளி தேடுபேய்க் குமட்டி கொன்றை
கரியகாக் கணவன் வெள்ளைக் காக்கணம் வெள்ளிலோத்தி
பிரமதண் டாதி யாகப் பேசிய விவற்றி னாலும்
வருமுறை பேதி கொள்ள வகுத்தனர் முனிவரம்மா 99

மாற்று

மண்டுநேர் வாளப் பேதி மாற்றிடு முருகஞ் சாறு
டுண்டுமோர் குடிக்க மாறு முறுசிவ தைப்பே திக்கு
விண்டுவெந் நீர்கு டிக்கக் குளிக்கமெல் லியலே மாறும்
மிண்டிய கடுக்காய்ப் பேதி வினவிலன் றிரவில் மாறும் 100

---

‡நீதம்-வெண்ணெய் †வல்லை-வலியகபம்

உணவுகொள்ள

இரவிவா னுச்ச மாகி லுண்பதற் கிசைவா முண்டி
விரவிய வெந்நீர் தன்னில் விரும்பியே குளித்து மிக்க
துரவிய வாத பித்த சேற்பனத் துறவா முண்டி
பரவிய பசிக்குத் தக்க பாரணஞ் செய்யப் பாங்காம் 101

பாரணம் பண்ணிப் பின்னர் பகரிர வின்க ணுண்டி
சீரண முறச்சுக் *குண்டி சீரகங் கழஞ்சு நான்கு
பூரண கும்பந் தண்ணீ ரிருநாழி புகட்டிக் காய்ந்த
தாரணப் படியே யெட்டோன் ருனநீர் குடிக்க வேண்டும் 102

பகைநாள்

வண்மையாம் பரணி பாம்பு மகவிசா கமுழுப் பூரம்
நண்ணுகார்த் திகைநன் மூல நவமிகீழ் நோக்கு நாளாம்
திண்மைசேர் பகைநாள் சென்மத் திரயமென் றுரைக்கு நாளில்
பெண்மையா ரணங்கே சற்றும் பிணிமருந் துண்க லாகா

உவாந்தி

ஆறுதிங் களிலோர் நாளே யானமுப் பிணிக்கும் வாந்தி
பேறுசேர் மருந்தி னாலே பெரிதுறப் பேணிப் பேணி
மாறுசெய் திடுநாட் கால மருவிய பெலனு நோக்கி
வீறுநற் குணமுண் டாக மெய்வயித் தியனார் செய்கை 104

வாத உவாந்தி

செம்பரங் கொண்ட ராவிச் சேர்பொடி கழஞ்சி ரண்டு
சம்புவின் பட்டைச் சாற்றிற் றகுதின மூன்று மூறி
அம்பற வுலர்த்திப் பின்ன ரதனிறை தூள்க ழஞ்சு
கொம்புற விருபத் தோர்நாட் குழைத்தரைத் தெருக்கம் பாலில்

பாலரு தரைத்தங் கோர்நாட் பார்க்கவே யுருட்டிக் காய்ந்த
தேலவே தேவ தாளி கூட்டித்தூ ளிட்டு வைத்தே

*உண்டி-மிளகு

ஆலநேர் விழியீர் வாத தேகத்துக் கான வாந்தி
சாலவே யெடுக்குங் காடி தனினுரைத் திடவே மிக்காம் 106

பித்தவாந்தி-கபவாந்தி

மிக்கசம் பீரச் சாற்றில் வெவ்விய பித்தத் தோர்க்காம்
தக்கிய வனுபா னத்தாற் றருகபத் தவர்க்கே வாந்தி
அக்கண மெடுக்குக் கண்ட தறிந்தவர் பெலத்துக் கேற்ப
ஒக்கவக் கால தேச முணர்ந்துரைப் படியே யீய்வாய் 107

உவாந்திக்குரியன

அன்றியுந் தேவ தாளி யரியபேய்ச் சுரைகொம் மட்டி
நன்றிசேர் பேய்ப்பி சுக்கு நல்லபேய்ப் புடோல்வ சம்பு
வென்றிடு பெருங்கு ரும்பை மிகுமருக் காரை வெட்பால்
தின்றிடு கடுகு முப்புஞ் செய்விக்கு முவாந்தி மன்னே

மாற்று

வாய்ந்திடு மருந்தால் வாந்தி யெடுப்பது மிகவே யாகில்
ஆய்ந்தசீ ரகஞ்சேர் நெல்லி யாவின்பா லுடனே நக்கத்
தோய்ந்த சர்க்கரையே கூட்டிச் செவ்விள நீரிற் கொள்ளக்
காய்ந்திடு முருங்கைச் சாற்றிற் கடிதுறச் செமிக்கும் வாந்தி

பித்தவாந்தி

வாய்ந்திடு பித்தந் தாழ வளரெலு மிச்சஞ் சாற்றை
ஏந்தியே செம்பில் விட்டங் கேற்கவே முதல்நாள் வைத்துக்
காந்திய துரிசு சுட்டுக் காற்கழஞ் சச்சாற் றோடே
போந்தது கொடுக்க நெஞ்சிற் புகுந்திரா தெடுக்கு மெய்ப்பாய்

மாற்று

மெல்லவுக் காரஞ் செய்யா தெடுப்பது மிகுதி யாகில்
நெல்லிசந் தனங்கற் றாழை நேரதா நெய்யிற் பெய்தே
சொல்லிய சிரமார் புந்தி துடையுள்ளங் காலிற் பூசி
வல்லிய கரத்தாற் றேய்க்க வாந்தியே யெழாம லின்பாம் 111

கபவாந்தி

இந்துப்புத் தன்னின் மூன்று முறையெருக் கல்ம்பா லேற்றி
அந்தித்த வாறே செப்பி லவைநிழ லுலர்த்தாய் வைத்து
வெந்துற்ற நீரு ழக்கில் விரைகழஞ் சிந்துப் பிட்டு
முந்திச்சொற் கபத்தோர் கொள்ளமுன்னெழும்வாந்திகைப்பாய்

மாற்று

கன்றிய கபத்தோர் சத்தி கனமுற வெடுக்கு மாகில்
குன்றியி லிலையைக் கொய்து குனித்தசர்க் கரையே கூட்டி
மென்றிறக் கிடமுன் வாந்தி மேவிடா தடங்குந் தின்றால்
நின்றடற் கொண்ட நோயு நீங்கிடு மிமைப்பிற் பண்பாய் 113

பத்தியம்

பழையநோய் வருத்தா வண்ணம் பகர்ந்தவாந் திக்கே பத்தியம்
விழைவுசேர் வெந்நீர் தன்னால் விரும்பியே குளித்துப் பின்பு
குழையவே வடித்த வன்னங் குளிர்தரு மிளகு நீரும்
கழையவே காய்ந்த பானெய் கலந்துண வினிய தாமே 114

வாந்திசெய்ய நாள்

கொண்டிடு மவிட்ட மோணங் குலவுரோ கணிபூ சங்கார்
கண்டநாட் சதய மற்றுங் கலந்தவுத் திரங்கண் மூன்றும்
விண்டுமே மேனுக்கு நாளா மொன்பதும் விலக்க தாகும்
வண்டுசேர் குழலா யென்றும் மருவுவாந் திக்கு மன்னே 115

நசியம்-வாதத்தோர்க்கு

மறிகடற் கடுவுண் டார்தம் வாய்மைமா ருதத்தோர்க் கான
திரிகடு கழஞ்சு மூன்று சேர்த்துழக் கெண்ணெய் தன்னில்
பிறிபடக் கதிரோன் முன்னே பெய்துவைத் தெடுத்து நையம்
செறிபட நாசிக்குள்ளே துளிவிட நேர்மை யாகும் 116

பித்தத்தோர்க்கு

ஆனதோர் நசியங் கேண்மி னவினெய் யுழக்கிற் கற்கம்
ஊனமில் மிளகு சுக்குத் திப்பிலி யுடனேவ் வொன்றாய்த்

தானது பொடிசெய் தாதி தன்முன்வைத் தெடுத்து நையம்
கானகற் பித்தந் தாழக் கருதுறு துளியைக் காட்டாய் 117

சேற்பனத்தோர்க்கு

கட்டிய கபமே தாழக் கருதுவெள் ளாட்டு நெய்யில்
ஒட்டிய மிளகு சுக்குத் திப்பிலி யுடனேர் கூட்டி
மட்டறிந் திரவி முன்னே வைத்தெடுத் திருமூன் றாக
விட்டவத் துளியி னாலே விழியொளி தருமே வித்தாய் 118

மாற்று

விடுத்திடு நசியத் தாலே மேவுநா சியினிற் கோழை
அடுத்தடுத் திழியச் சிந்தி யானதோ ரசடு காய்ந்த
தெடுத்தெடுத் தேகமொற்றி யிசைந்துபின் னிளவெந் நீர்வாய்
மடுத்தடுத் தன்னீ ரூற்றி மருவும்வெந் நீர்கு ளிப்பாய் 119

குளித்தபி னன்னத் தோடு கொள்வது மிளகு நீரே
புளித்தல்தித் தித்தல் கைத்தல் பொருந்திட வருந்தல் போகம்
களித்தல்கள் ளுண்டல் சீறல் கருத்துவே றுறவே நெஞ்சை
அளித்தல்வெங் காம முற்று மகற்றிட மிகவும் பண்பாம் 120

நசியத்துக்குரியநாள்

பண்டிதம் பண்ணப் பாங்காம் படருமொன் பானு ளாகக்
கண்டிடு மனுடஞ் சோதி கலைமதி யத்தங் கேட்டை
மண்டிரே பதிது ரங்கம் வளருஞ்சித் திரைநல் லோர்கள்
எண்டகு புனர்பூ சத்தி லிசைந்தநா ளறிந்து செய்வாய் 121

அஞ்சனம்

செய்திடு நசிய மற்றுஞ் சிறந்திடு படர்நா டன்னில்
மெய்யறு நோயுந் தீரும் விரும்பிய மருந்தும் வாய்க்கும்
உய்திடு கண்ணுக் கான வொளிதரு மடைவு கூறில்
எய்துமுப் பிணியுந் தீர விசைந்ததிப் பிலியே யாதி 122

வாதத்தோர்க்கு அஞ்சனம்

திப்பிலி கழஞ்சிற் பாதி சிறந்திடு மிளகு தானென்
றொப்பவேர்க் கொம்பி ரண்டு கழஞ்சுமே யொன்றாய்க் கூட்டித்

தப்பிலா மலகச் சாற்றிற் றுனரைத் துலர்ந்த வுண்டை
அப்பினிற் காடி தன்னி லுரைத்திட வனிலற் கன்பாம் 123

அனிலமுற் றெழுந்து கண்ணி லடைந்திடு நோயு மற்றும்
பனிகதி ரவன்மு னில்லாப் பண்பென மாற்று மிப்பாற்
தனிவளர் பித்தத் தோர்க்குந் தருமதில் வருங்கண் ணோய்க்கும்
கனிபெறு பாகஞ் செய்யு மஞ்சன நவின்றார் நாதர் 124

பித்தத்தோர்க்கு அஞ்சனம்

நாளிகோத் திளநீர் நாழி நானாழி யதனிற் கற்கம்
வாளிநேர் கடுக்காய் தான்றி வளர்மர மஞ்சள் நெல்லி
நீளிலா மிச்சம் வேலி நிறைமது ரம்மோ ரொன்று
கேளிலா தைங்க ழஞ்சிட் டிடித்தரைத் திளநீர் கொண்டே

கொண்டதிற் கரைத்து நான்கி னொன்றதாய்க் குறுகக் காயக்
கண்டபி னிறக்கிச் சீலை வடியிட்டுக் காய்ந்த கோதை
அண்டிடும் பதத்திற் பாக மானபின் னிறக்கி யாற்றி
விண்டதி ¶லிந்து விந்துப் போரொரு கழஞ்சு மேவ 126

மேவியங் கரைத்துத் தேனல் வெண்கலச் சிமிழில் வைத்துக்
காவியங் கண்ணி னுளே கருதிடக் கண்ணில் முந்தத்
தாவியங் கிடவே பித்தந் தாழ்ந்திடு மதனாற் கண்ணில்
ஏவிய கபமு நீங்கி யிருளுமோ வடையா தன்றே 127

அடைவுறு §கரஞ்ச பீச மானவா மலகச் சாற்றிற்
திடமுற வரைத்து மற்றத் தினத்தினி லாற்றிப் பூசி
இடமுறு சாற்றால் யாம மரைத்தித மான வுண்டை
உடன்முலைப் பாலி லிட்டா லொளிக்குறு மொளியாங்கண்ணும்

கண்ணின்முத் தினத்துக் கோர்நாட் கருதுமஞ் சனமா லைக்கே
எண்ணுமுர்க் கத்திற் பாதி யிரண்டதாய்ப் பகிரச் செய்தே

¶இந்து-பச்சைக்கர்ப்பூரம் §கரஞ்சபீசம்-புங்கம்விதை

நண்ணவிட் டிடக்கன் முந்தி நலம்பெற விட்டு வேகம்
பண்ணுதல் வெந்நீர் தன்னாற் பரிவுடன் கழுவல் செய்க 129

காலமறிய

செய்யநற் பேதி தானுஞ் செய்வது கால மேற்க
உய்யமுற் கார மீதுக் குகந்ததோர் யாமத் துள்ளாம்
பெய்யுமா நசியந் தானும் பெறுபதி னேழுக் குள்ளாம்
மெய்யுறு மருந்தே கண்ணில் மிகுத்திடி லதிக மிக்காம் 130

மிக்கவா டெருது காலம் விசாகமா மிதுன நண்டோ
டொக்கவே துலாந்தேள் மாதங் காலையா முயர்வில் லோடு
தக்கதாங் கும்ப மீன மேதகு மத்தி யானம்
பக்கமாந் திரியே கன்னல் பதினெட்டா மஞ்ச னங்கள் 131

களவுறு நரம்பு கொத்தல் கருவிக ளாட்டல் காலை
உளவுறு கொம்பு வைத்தே யுதிரங்கொண் மத்தி யானம்
அளவுறு மட்டை விட்டே யாற்றுத லந்திக் காலம்
தளவுறு நகத்தாய் செய்யத் தருவதென் றுரைக்கும் பெம்மான்

எண்ணெய்க்குணமறிய

எய்திடு மெண்ணெய் தன்னு லெழுந்திடுங் குணங்கள் செப்பின்
ஐதிகழ் சிரத்தில் மத்தித் திடினுட னடிக்கே மேவும்
பெய்திரு வடியிற் றேய்க்கிற் பெருகிரு கண்ணிற் சேரும்
உய்திடும் விழியில் வார்க்கிற் சோத்திர துள்ளா யோங்கும்

ஓங்கிய சிரத்தி லெண்ணெ யுடலுறு பிணியை மாற்றும்
தாங்கிய பதத்தி லெண்ணெய் தடமுறு விழிநோய் தீர்க்கும்
ஆங்கிரு கண்ணி லெண்ணெ யழகிரு செவிநோய் தீர்க்கும்
பாங்கிரு காதி லெண்ணெய் பகர்சிர ரோகந் தீர்க்கும் 134

தீர்த்திடு மவிடம் பண்பாய்த் திருந்திய தயிலந் தானும்
ஆர்த்திடு முவமை யான வதிசய முரைக்குங் காலைக்
கூர்த்திடுஞ் சிரத்திற் றேய்க்கிற் குதித்திடும் பதத்திற் றுளில்
பார்த்துறத் தேய்க்கின் மண்டை கொண்டிடும் பார்வி ளங்க

வில்லொடு மகர மாத மிரண்டாகு மீனங் கும்பம்
சொல்லொரு கடிகை நன்றாந் துய்யவா டெருதோ டைந்தாம்
எல்லுயிர் மீன னெண்டு மெட்டினிற் கன்னி யாறாய்
வல்லெறி மீன்கோல் தேளில் மாற்றுமப் பொழுதே யன்பாய்

தண்ணீர்வகை

மாற்றிடு மெண்ணெய் போக மருவுவெங் நீரின் மூழ்க
வேற்றிடு நீரே யெல்லாம விளைந்திடுந் தண்ணீர் செப்பில்
ஆற்றுநீர் பித்தர்க் காகு மனிலர்க்காங் கிணறே கேணி
சேற்றுமர்க் காகு மோடை சிறுகுளத் தல்லி நீரும் 137

அல்லிசெங் கழுநீர் கொட்டி யரவிந்த மதுபித் தர்க்காம்
வெல்லுறு சேற்ப னர்க்கு மிளகரி சனஞ்சீர் காயம்
சொல்லிய வாதத் தோர்கருச் சுக்குவேம பேலங் காயம்
மெல்லிய மிளகு நெல்லி வேம்புமஞ் செலுமிச் சாமே 138

உப்புக்கொள்ள

மிக்கவா தர்க்காம் நித்தம் விரும்புகல் லுப்புத் தானும்
தக்கவெம் பித்தத் தோர்க்காஞ் சமுத்திர லவணந் தானும்
ஒக்குமே சேற்ப னத்தோர்க் குரைத்தவிந் துப்புத் தானும்
மூக்கணர் விந்தோ டாதி முப்பிணிக் கிந்துப் பீடாம் 139

புளிகொள்ள

ஈந்திடு வாதத் தோராண் டெய்திய புளியே யென்றும்
தீர்ந்திடும் பித்தத் தோர்க்குத் திருந்திய வெலுமிச் சென்றும்
கூர்ந்திடுஞ் சேற்பத் தோர்க்குக் கொறுக்கையு நெல்லிக் காயும்
ஓர்ந்தவிம் மூவர்க் குந்தான் பழம்புளி யினிதா மென்றும் 140

உணவுவகை

எள்ளொடு புராண சாலி யிறுங்கோ தும்பை வெய்ய
கொள்ளுட னுளுந்து சாமை குலவிய துவரை யேனல்
தெள்ளிய வெள்ளி லெண்ணெய் செய்யநெய் வெல்லங் கூட்டி
ஒள்ளிய வனிலர்க் காகு முறைவகைப் படிகள் செய்யே 141

வெண்ணெயின் விதங்கள் கூட்டி விளம்பிய முறையாய்ச் செய்க
நண்ணிய செந்நெல் லாலே நற்பொரி யவல்க ளாக்கி
உண்ணவே நன்று நெய்யை யுருக்கியே யமுது செய்யில்
திண்ணிய வயது நூறு சென்றுமங் கிளையா ரையா 142

ஐயுற வின்றி மிக்க வதிகமுஞ் சினேகத் தாலே
மெய்யுற வாமெந் நாளும் வெள்ளரி வாழைக் காயும்
செய்யுறு முருங்கைப் பிஞ்சு சிறுவழு தலங்கா யுள்ளி
நெய்யுறப் பகுத்த துண்டு நீகரில்கத் தரியின் பிஞ்சே 143

பிஞ்சுறு பாகற் காயாம் பெரும்புடோ லவரைப் பிஞ்சு
மஞ்சுறு காரை சேமை வளரிளங் கீரைத் தண்டு
மிஞ்சுறு கருணைத் தண்டு வெள்ளுள்ளி வாழைப் பூவும்
நெஞ்சுறு கபத்தை மாற்று நீடுதூ துளையின் காயும் 144

நீடுறு கண்டங் காலி நிறைமல ரெருக்குத் தாளி
கோடுற வளர்மாம் பிஞ்சு குலவிய பலாவின் பிஞ்சு
நாடுறு பூசி னிக்காய் நலம்பெறு கறிக ளாக்கிப்
பீடுறு மாநெய் யோடே பெரிதுணக் கபம்போ மன்றே 145

வாததேகிக்குரிய கறிவகை

செய்யகத் தரிக்காய் பாகல் சிறுவழு தலங்காய் நீற்றுத்
துய்யபூ சினியின் பிஞ்சு துவர்ப்பல முருங்கைப் பிஞ்சு
வெய்யநற் கருணை காட்டுக் கருணையுள் விரைமுற் றுமுன்
கொய்திடு மவரைப் பிஞ்சு மனிலர்க்காங் கறிகள் கொள்ளே 146

சாறுவகை

கொண்டிடுஞ் சாறு கேண்மின் குறுநறுந் துளாய்மு ருங்கை
வண்டிலை மிக்க தூது வளையிலை பொன்னாங் காணி
தண்டிளங் கீரை பாகல் தக்காளி வற்றல் காரை
மிண்டுசா றடையு மெல்லாம் விளங்கிய வாதர்க் கின்பாம் 147

கீரைவகை

இன்புறு நெருஞ்சி கோவை யிசைந்தமுக் கிரட்டை யப்பை
வன்புவே லிப்ப ருத்தி வளர்புளி மணித்தக் காளி
துன்பறு பயிரி கீரை சுரைமுசு முசுத்கை வேளை
முன்புறு குப்பை மேனி முதலிலைக் கறிவா தர்க்காம் 148

வற்றல்வகை

வாதத்தோர்க் கேற்ற வற்றல் வழுத்திடும் வண்மை கேண்மின்
போதவே பிரண்டை சுண்டைபொருந்துபேய்ப்புடோலநெல்லி
நீதமா மணித்தக் காளி நிறைந்தது துளையே கோவை
ஓதல்செய் காயு லர்த்தி யுட்கொள்வார் பொரித்தே நித்தம் 149

ஊறுகாய்வகை

நித்தமு மூறு காயா நீடிய கடுக்காய் தேற்றன்
சித்தமுற் றிட்ட விஞ்சி சிறியநா ரத்தங் கச்சல்
மெத்தவிவ் விதங்க ளான கறிகளை விரும்பித் தின்ன
மெத்தநன் றாகும் வாத மேம்படு சரீரத் தோர்க்கே 150

பித்ததேகிகட்கு

கறிவகை

சொல்லிய முருங்கைப் பிஞ்சு சூழ்ந்திடு மவரைப் பிஞ்சு
நல்லகத் தரியின் பிஞ்சு நாடிய புடோலின் பிஞ்சு
வல்லவா ழைக்கா யிஞ்சி வாழைப்பூ வாழைத் தண்டு
செல்லுமீ ருள்ளி வள்ளி சிறுகளாப் பீர்க்கு மாங்காய் 151

காயுறு வெள்ள ரிக்காய் கடியபூ சினிக்கா யின்னம்
ஆயுறு பயறு பாக லருமிதி பாக லாதி
நோயறு மகத்திப் பிஞ்சு நுவலுமா வரையின் பிஞ்சு
வேயுறு தோளா யெல்லாம் பித்தருக் கின்ப நல்கும் 152

சாறுவகை

கொடியுறு வசலை கொத்து வசலைதை வேளை முல்லை
படியுறு மகத்தி நீற்றுப் பூசினி பகர்மு சுக்கை
தொடியுறு காத்தா யெல்லாந் துளிர்வகை சாறு கொள்ள
மடியது பித்தர்க் கின்பாய் வழுத்தினர் கலைவல் லோரே 153

கீரைவகை

பொன்னாங் காணி சிறுகீரை புகலு மப்பை முசுமுசுக்கை
மின்னே கோவை வல்லாரை மிக்க தூது சுரைபசளி
சொன்னேம் பாலை புளியாரை சூழ மிளகு தக்காளி
பொன்னார்முசுட்டையகத்திவகைபொருந்தோரிதழின்கஞ்சமுடன்

கஞ்ச மணியின் றக்காளி கருதா வாரை புளிக்கீரை
விஞ்சுங் கீரை யினும்பலவாம் வேண்டிப் பித்தர்க் குவந்தகறி
மஞ்சேர் குழலாய் முனிவருரைப்படியேவகுத்தோமாநிலத்தில்
பிஞ்சுந் துளிரும் பூவுமிவை பெரிது நன்றாம் பல்லோர்க்கும்

ஊறுகாய்வகை

நலமா மிஞ்சி யெலுமிச்சை நாடுங் கொளுஞ்சி தமரத்தை
பலமா நெல்லி யுடன்றூது பகருங் கோவையுடன் கடுக்காய்
வலமாம் பித்த தேகிக்கு வகுத்தா றூறு காய்வகைகள்
மலமா சறுக்கு முனிவரந்தப் படிநாம் வகுத்தோ மாநிலத்தே

வற்றல்வகை

நிலத்தே சுண்டை தூதுவளை நேடு மணியின் றக்காளி
அலர்த்தா ரணியுங் குழலணங்கே யரிய கண்டங் காரியுடன்
வலத்தாம் முள்ளி வல்லாரை வகுத்த காய்கள் நெல்லிக்காய்
சொலத்தா முலர்த்திக் கறிகொள்ளச் சூழும் பித்தர்க் கின்பாமே

சிலேற்பனதேகிகட்கு
கறிவகை

இன்பந் தருதற் கானகறி யிசையுங் கபத்தோர்க் கியம்பிடுவன்
துன்பந் தீர்க்கு மத்திக்காய் சுரையின் பிஞ்சு மதன்றண்டும்

முன்புஞ் சொன்ன விருபாகல் முதிரா மாவின் பிஞ்சுடனே
அன்புஞ் செறியு மதிமுகத்தா யவரைப் பிஞ்சீ ருள்ளியுமே 158

ஆலம் பிஞ்சு கத்தரியி லதுவும் பிஞ்சு பூசினிக்காய்
மேலும் பீர்க்கம் பிஞ்சதுவும் விளம்பு முருங்கை பெருங்களா
கோல முருக்கிற் சிறுவரும்பு கொள்ளுங் கண்டங் கத்தரியின்
சீலம் பொருந்தும் பிஞ்சுவட்டுச் செறியும் பிஞ்சு தன்னுடனே

செப்பும் வள்ளிக் கிழங்கதுவுஞ் செறிமுள் ளங்கி பயற்றங்காய்
ஒப்பும் வாழைத் தண்டினுட னுறுபேய்ப் புடலி னரும்பிஞ்சும்
அப்புங் கயலும் வேலுமென வடரும் விழியீ ரிவைமுதலாய்ச்
செப்புங் கறிகள் கொளநன்றுஞ் சேருஞ் சாறு செப்புவனே 160

சாறுவகை

அசுத்தி யோமஞ் சிறுகுறுஞ்சி யதுவு மல்லி சதகுப்பை
சுகத்திற் குரிய வோமமுடன் சுக்குக் கடுகு துராய்தும்பை
அகத்திற் கினிய வெந்தயமு மரிய வேளை நிலவாகை
செகத்தி லிவைகள் சாறுவகை செப்புங் கபத்தோர்க் கினிதாமே

கீரைவகை

முல்லை முசுட்டை வல்லாரை முன்னை முருங்கை முளைக்கீரை
நல்ல வேளை நாய்வேளை நாடு மாரை யிருகோவை
சொல்லு மிரண்டு புண்ணாக்கி சுக்குச் செம்பை பொற்காணி
வல்ல முசுக்கை பேய்ப்புடோல் மணித்தக் காளி யுடன்மணலி

குப்பை மேனி கொடிவசளை கூறு நெருஞ்சி சிறுபீளை
செப்பு நெய்தல் சிறுகளா சேருங் காரை சக்ரவர்த்தி
ஒப்பும் பண்ணை புளியாரை யுயர்ந்த பொன்னி ணுவாரை
அப்புங் காரா மணிகடலை யாதிக் கீரை கபத்தோர்க்காம் 163

ஊறுகாய்வகை

அத்தி சுண்டை தூதுவளை யால்மாப் பாகல் பிஞ்சிவைகள்
சுத்த மஞ்சள் மிளகப்பை சொல்லு மாம்பை தனிற்றண்டும்

உற்ற கபத்தோர் தமக்கேற்ற வூறு காயாம் பாகமதாய்
நித்தங் கொள்ள வினிதென்றே நிகழ்த்துமாயுண் மறைதெளிந்தே

வற்றல்வகை

அவரை கோவை தூதுவளை யத்தி முள்ளி நாரத்தை
தவறில் சுண்டை நெல்லியிவை தம்மிற் பிஞ்சு பேய்ப்புடோல்
இவரும் பிரண்டை தக்காளி யெண்ணுங் கண்டங் காரிவட்டு
நவைதீர் முள்ளிமெதுக்கிவைகளுலர்த்திலின்பாங்கபத்தோர்க்கே

முத்தேகிகட்கும் பத்தியத்திற்குரிய
ஊறுகாய்வகை

நாடுங் களாக்காய் சுண்டைக்காய் நாரத் தெனுமிச் சுடனெல்லி
தேடுந் தூதுவளை நுணாவின் காய் தேற்றாவின் காய் பாவட்டை
கூடுங் காயு முதலாகக் கொள்ளு மூறு காய்வகைகள்
பீடு தருமே பத்தியத்திற் பேசு மெல்லாத் தேகிகட்கும் 166

கடுக்காயூறுகாய் செய்யும்விதம்
(முத்தேகிகட்கும்)

பெரிதாங் கடுக்கா யொருநூறு பேணுங் கழுநீர் தனிலிட்டுச்
சரியாய் மூன்று நாட்சென்றாற் றானே யெடுத்து மறுபடியும்
திருவா ரணங்கே யிரண்டு முறை செய்திப் படியே யெடுகழுவி
அரியாய் விதையை நீக்கியிட்டே யடுப்பி லேற்றி மோருற்றே

ஊற்றி யதனுட் கல்லுப்பு முடனே யிட்டு நீர்வற்றச்
சாற்று மடியிற் பற்றுமற் றானே யிறக்கிச் சம்பிரத்தின்
ஏற்ற புளியு மளவாக விட்டே யேலஞ் சதகுப்பை
போற்று முழுவாச் சாதிக்காய் பொருந்துங் காய மிளகுடனே

சீர மிவைகள் வறுத்திடித்துச் சேர்த்து வெயிலில் நாண்மூன்று
சார வைத்துப் போற்றிடுகிற் றக்க வூறு காயாகும்
தேரு முணவிற் சேர்த்தருந்தச் செமிக்கும் வாயு பலநோவு
பாரு மருந்திற் பத்தியமாம் பகரு மெல்லாத் தேகிகட்கும் 169

முத்தேகிகட்கும் நீர்வகை

புல்லிய குளத்து நன்னீர் பொருந்திய பித்தர்க் காகும்
பல்லியல் குளநீர் வெப்பம் பாகிகள் வளர்தல் லோடை
சொல்லிய வனிலர்க் காகுஞ் சூழ்கபத் தோர்க்குக் கேணி
அல்லிய லளக மானே யாயுறு வேத வாய்மை 170

கேணிநீர் வெந்நீ ராகிற் கிளர்ந்தெழு பித்தம் போக்கும்
*வேணிநீர் வாதந் தீர்க்கும் விளம்பிய வெந்நீ ராகில்
நீணிலத் தூற்று வெந்நீர் நிகரிலாச் சேற்ப மாற்றும்
பேணிய குளத்து நன்னீர் பெரிதுறு தாகம் போக்கும் 171

ஆகாநீர்

போக்கிலா மடுநீர் சேற்லறைப் பொருந்திய குளத்து நீரும்
ஊக்கமாஞ் சருகோ டுற துவர்ப்பொய்கை நீரி வற்றை
வாக்கினு லுரைக்க வுண்ண மருவியே குளிக்க மூழ்க
நோக்கிடப் பிணிக ளாகு நொடிக்குமுன் மெய்யிற் றுனே 172

ஆகுந்நீர்

ஐயமா ருதத்தின் கோப மாற்றிட வதிகா லைக்கே
மையறு மோரு நீருங் கொண்டிட மாறு மின்பாய்ச்
செய்கையாற் குடித்து மூழ்கிக் குளித்துவந் தாடிச் செவ்வே
பொய்கைநன் னீரா லன்னம் புசிப்பவர்க் கில்லை நோயே 173

மண்பாத்திரத்தின் மேன்மை

சாற்றிய மட்பாண் டத்திற் சமைத்திடிற் கொடிய நோயை
மாற்றுமவ் வாத பித்த மல்கிய வாத சேற்பம்
மேற்றிகழ் பித்த வாத மிருகபங் கபத்தில் வாதம்
போற்றிய கபத்திற் பித்தம் பொருந்திடா துடலிற் றுனே 174

சமையலுக்கேற்ற பாத்திரங்கள்

சமைக்குமம் முறைகட் கேற்பத் தாம்பிரம் வெண்க லங்கள்
அமைக்கும்பாண் டத்தில் வெந்த வடிசில்மா ருதத்தி னோர்கள்

*வேணீநீர்--வெந்நீர்

தமக்கின்பா மண்பாண் டந்தான் சார்ந்திடு பித்தர்க் காகும்
உமைக்குரைத் திட்ட வாற்று லுபர்கபத் தவர்க்காங் கஞ்சம்

சோறுசமைக்க

கஞ்சமே முதலா யுள்ள பாண்டங்கள் கழுவிப் பண்பாய்
விஞ்சுமே சுத்த மான நீர்வடித் துலைபி லிட்டுத்
தஞ்சமே விருப்பத் தீட்டுந் தண்டுல நீரி லிட்டு
நஞ்சதாந் தவிடு போக நலமுறக் கரந்து மாற்றி 176

மாற்றிய தண்டு லத்தை மாசறு சுத்தத் தோடங்
கேற்றிய வுலையிற் றண்ணீர் கொதித்தபின் பெடுத்துப் பெய்து
சாற்றிய பதத்தி லேதான் றளர்விலா வெண்ணெ யிட்டுச்
சோற்றினை வதங்கக் கண்டு வடிப்பதே யமிர்தாச் சொல்வர் 177

கறிவகை--கீரைவர்க்கம்

உண்பவர்க் கின்ப மான கறிவகை யுவந்து கேண்மின்
கண்டெளி பொன்னாங் காணி கறிசிறு கீரை யப்பை
மண்பயில் நெருஞ்சி கோவை மணலிவல் லாரை சீரம்
தண்பயில் சுண்டை யோடு சர்க்கரை கொத்த மல்லி 178

பாகமா மசம தாகம் பஞ்சிதா துளையே வேளை
ஆகமாங் குப்பை மேனி யகத்தி வெந்தயமூக் கிரட்டை
காகமா சின்மு ருங்கை கருதிளங் கீரை யாரை
சாகமாம் பொன்னு வாரை சாரடை சதகுப் பையும் 179

சதமுறு தேவதாளி தளிர்புரை சுண்டி வண்டார்
இதமுறு சுரைவட் டுத்தோ டிளந்திராய் முசுக்கை பீளை
நிதமுறு குறிஞ்சி பாலை நீளுறு முசுட்டை தேவி
பதமுறு முல்லை தும்பை பரட்டைசேர் பறித்துண் பார்க்கே

பணிபல பூணி மையர் பகரும்வா கடத்தை யாய்ந்தே
துணிவொடு மனிதர் சித்தர் துயரற வனத்தி லெய்தி

அணிபல கந்த மூல சாகங்க ளருந்த லாலே
பிணிபல மூப்புச் சாக்கா டெய்திடார் பெருமை பெற்றார் 181

மாமிசக்கறிவகை

வண்மைவா ரணம்வெள் ளாடு மயில்முய லுடும்பு சிட்டுத்
தண்மைசேர் மரைமான் பன்றி தக்ககான் பன்றி தாரா
உண்மையூர்க் குருவி வெளவா லுடன்மடை யான்செந் நாசை
திண்மையா யுலர்த்தி வாதத் தோரிவை யருந்தச் சொன்னார்

மீன்வகை

வைத்தநற் றடாக மீதில் மயற்றெறு குறவை கீளி
நெய்த்திடு முளுவை யாரல் கெளிற்றுமீ னிதுவல் லாமல்
மெத்தவுங் கிளத்து மீன்க ளுலர்த்தியே கூட்டி மேனி
ஒத்தவா தத்தா ரிந்தக் கறியுண்ண வுரைக்கும் வேதம் 183

வற்றல்வர்க்கம்-ஊறுகாய்வர்க்கம்

எய்திடு மணித்தக் காளி யிசைந்தபேய்ப் புடோலா தண்டை
கொய்திடு பிரண்டை சுண்டை குலவுதூ துவளை வற்றல்
உய்திடு முள்ளி நெல்லி யுலர்த்துநா ரத்தங் கச்சல்
ஐதிட மறுக்குங் கண்டங் கத்தரி யவரை கோவை 184

கோவையே சுண்டை தூது வளையுமா தளைமாம் பிஞ்சு
பாவையே கடுக்காய் தான்றி பசுமஞ்ச ளிஞ்சி தேற்றான்
தேவைய மிளகு மூங்கிற் றிப்பிலி சிறுநா ரத்தை
ஏவையாங் கபத்தோர்க் கென்று மிலகுமிந் துப்போ டுறில் 185

ஊறிய லவணத் தோடு முவர்ந்தவூண் கபத்தோர்க் காகும்
வீறிய பச்சை யூணும் வெள்ளெலி வெள்ளா டாமை
கூறிய வுடும்பு காடை கொக்குமான் கவுதா ரிப்புள்
மாறயில் சிட்டுக் குள்ளான் குறுமுயல் மடையா னாகும் 186

சிறுவரால் குறவை நன்னீர் செய்வரா லுளுவை யன்பாற்
பெறுவராய் நித்தங் கொள்ளிற் பிணிவராக் கடல்வாய் மீனில்

குறுவரால் சுறுவ ராலுங் கொழுப்பிலா தாகு முப்பில்
மறுவரா துலர்ந்த தாகும் வாய்த்தசேற் பனத்தோர்க் காமே

சேற்பனம் வாரா வாறு சிவந்திடு பசுவின் பாலும்
மாற்றுமுப் பிணியை நாரை மருவிய கபிலை வெள்ளா
டேற்றிடு மினிய பால்மே லிசைந்திடு தயிர்மோர் வெண்ணெய்
சாற்றிடு நெய்யோ டன்னஞ் சாரவுண் டிருப்பார்க் கென்றும்

இருப்புறு கபமே தாழ விசைந்தகற் கண்டு சீனி
மருப்புறு நெய்தேன் பேயன் வாழைபின் கனிபூ வுள்ளம்
விருப்புறு பேரீஞ் சோடு விளங்குமுந் திரிகை யாகும்
கருப்புறு கட்டி யன்றிக் கதித்தசர்க் கரையோ டுண்பாய் 189

உணவுகொள்ளும் முறை

உண்பதற் கியல்பு கேண்மி னுறுபசி தணியா முன்னம்
மண்பயில் பதத்தி லாத்தை மாசறக் கழுவிப் பின்பு
பண்பயில் கால்கை நீரிற் பலமுறச் சுத்தி செய்து
கண்பயி லெழுத்தைந் தோதிக் கதிதரு நீறு சாத்தி 190

நீறுசாத் தியபின் னெஞ்சை நிமலன்மேல் வைத்து மேலா
வீறுசாத் துவத்தோ டெய்தும் விருந்தையும் பேணி யுண்மை
கூறுசாத் திரத்தி னாலே குணதிசை தென்பால் நோக்கி
வேறுசாத் திரநெஞ் செண்ணா திருந்துநன் மேன்மை யெய்தி

உண்கலம்

எய்துபொன் வெள்ளி மற்று மிசைந்தவெண் கலமா முந்திச்
செய்திடும் பலன்கள் செப்பிற் சிறந்தழு வைந்து முப்பான்
உய்திடுஞ் சத்த தோடே யோட்டிலுண் பதுங்க லங்கள்
பெய்திடு தண்ணீ ராலே பெரிதுறச் சுத்தி செய்து 191

சுத்தியா லமுதந் தன்னைத் துலங்கவே படைத்த பின்பு
சுத்தியாஞ் சலமுப் போடு சுவைக்கறி குழ வைத்துச்

சுத்தியால் நெய்வே தித்துச் சூழ்ந்துமுக் கால்நீர் விட்டுச்
சுத்தியா போசனங்கள் கொள்வது சுத்தி யாகும் 192

சுத்திசெய் யமுதை யன்பாற் றுணைவிலக் காக நீரால்
புத்தியா விரண்டு கூறு பொருந்தவுண் டோர்கு டிக்க
வித்துறு மிளகு சாறு மேவிய பசுவின் பால்தான்
உத்தம மாகும் வெந்நீ ருண்பவர்க் கில்லை நோயே 193

உண்பவ ருண்ண முன்ன முவந்துதண் ணீரே யுண்டால்
உண்டவர் தமக்கு வன்னி யொடுங்கிடு மிளைக்கு மேனி
உண்டவர் நீருண் ணுமை லுண்டுமத் தியிலே சோற்றை
உண்டவர் தமக்குத் தாதுற் பவித்திடு முரமுண் டாகும் 194

உண்டபின் னமிர்தமாக வுறமிகக் காய்ந்த வெந்நீர்
கொண்டவர் குணத்தை யெம்மாற் கூறுஞ சற்றே கேண்மின்
வண்டணி குழலார்க் கான வளம்பெல னழகு தூலம்
தண்டமிழ்க் கிசைமெய் யின்பந் தாதுமுப் பிணியுந் தீர்க்கும்

தந்திடுஞ் சுவைகொ ளன்னந் தளர்வறக் கொள்ளும் போது
உய்ந்திடுங் கடிகை யீரெட் டெனுண்க வுடலுக் கின்பம்
வந்திடும் பெலன்மெய்த் தூல மருவுத ரத்தில் மிக்காம்
வெந்திடு மன்னங் குற்ற மேவிடா துறைக்குஞ் சித்தம் 196

மேவிய வேளை தன்னில் விரும்பியுண் பவர்க்கு மந்தம்
பாவிய ரறிய வூணும் பந்தமா மந்த மெய்தில்
காவியங் கண்ணு யந்த வேளையிற் கருதி யுண்க
மேவிய தயிர்ப கற்கால் வெயில்விழா முன்னே யுண்க 197

பசித்தபின் உண்க

இடும்புறு பசிமந் தத்தி லிதயமாங் கமல முடி
இடும்புறுங் குவிந்து நிற்கு மாகையா லின்ப மெய்தா
இடும்புறு பசியே யாகி லிதயமே மலர்ந்து தோன்றும்
இடும்புறப் பசித்த வூணு மிகுந்தவின் பத்தைக் காட்டும் 198

மீட்டுமவ் வேளை தப்பா திருந்தலு ணுண்ணு மந்தம்
காட்டினுங் காட்டு முள்ளக் கமலமே மலரா நிற்கும்
கூட்டிய கறிகள் கூட்டிக் குணம்பெறப் புசிப்பார்க் கின்பம்
பூட்டிமுப் பிணியை வாட்டிப் பொருந்துமென் றுரைக்கும்வேதம்

ஆயுறு வேத வாய்மை யறைந்ததோர் யாமந் தன்னில்
ஆயுற வான வன்மை யருந்துக விரண்டாம் யாமம்
ஆயுறும் வேளை யுண்க வறைந்ததே யவர்க்கே யென்றால்
ஆயுறு கறியின் மேற்பா லல்லிலே யுண்ப தாமால் 200

இரண்டுகால உணவு

உண்பதே யொருபோ தாகி லுடலுயிர்க் குறுதி யாகும்
உண்பதே யிருபோ தாகி லுயர்பெல மெழுதா தெய்தும்
உண்பது மூன்று கால முண்டிடிற் பிணியுண் டாகும்
உண்பது மிரண்டு கால முரைத்ததா முலகத் தோர்க்கே 201

உரைத்திடு கால மாறு முயர்நில மைந்து மொக்கும்
வரைத்திட முதலி னன்கும் வளர்பிணி மூன்றுந் தானம்
நிரைத்திடும் பொழுதி ரண்டு நிகரொன் று மொவ்வா நெஞ்சம்
புரைத்தடம் புகாமே லாய்ந்து பொருந்திய கறியோ டுண்க 202

காலந்தப்பா துண்க

கறிமுத லான வன்னங் கபிலையான் பால்நெய் யோடு
நெறியுறு காலந் தப்பா நேர்மையாய்ச் சமைத்த வன்னம்
அறிவுறு மேலோர் செப்பு மாயுரு வேதத் தன்மை
நெறியுற வுண்பார்க் கில்லை நீணில மீதி னோயே 203

மனைவிகையி லுண்க

அருந்திய விடத்தை யம்மை யங்கையால் மறிக்க வப்போ
அருந்திய விடமு ன மயர்க் கமுதமாய் வாய்த்த தாலே
திருந்திய வுலகத் தோர்க்குச் சேயிழை யடிசி லூட்டின்
மருந்தினு மினிதா மென்று வழுத்திடு மாயுள் வேதம் 204

விருந்துபேணியுண்க

உரைத்திடு மைய ரம்மைக் குயிரிது தானே யென்ன
உரைத்திடு மன்னந் தானே யுரிமையாந் தொழில்மன் னர்க்கும்
உரைத்திடு முறைமை மிக்க தண்மையா யுருவே தத்தில்
உரைத்திடு மதனு லெந்த வுரத்திலும் பெலத்த தன்னம்

அறம்பொரு ளின்ப மெய்து மாகையா லறமே வேண்டும்
அறம்பொரு ளின்ப மூன்று மன்னத்தா லாகு மென்க
அறம்பொரு ளின்பத் தாலே யருளொளி வீடு மெய்தும்
அறம்பொரு ளின்ப மெய்தா தடைவரோ வீடு வேறு 206

அடைந்திடு மதிபே ராண்மை யதிபெல மழகு வீரம்
அடைந்திடு மடவார்க் கான வன்புறு தாது தூலம்
அடைந்திடு வயிற்றி லங்கே யதிகமாம் பிணிக ளில்லை
அடைந்திடு மனத்தா ராளு மன்னத்தால் நோயுந் தீரும் 207

அன்னமே பிராண னென்ன வருமறை பகர்த லாலும்
அன்னமே படைத்த ளித்தங் கழித்திடு மென்கை யாலும்
அன்னமே யறத்துக் கெல்லா மதிகமென் றுரைப்ப தாலும்
அன்னமே சிறிது காண வையர்கங் காளங் கொண்டார்

ஐயர்கங் காளங் கொண்டா ராயினு மன்பர்க் கன்பர்
வெய்யபித் தாகு மன்பர் வேண்டுவ தீவ ரென்றும்
செய்தவத் துயர்ந்த வன்பர்த் தேடியே யீயி லன்னம்
ஐயர்கங் காளத் திட்ட வதுக்கது நிகர தாமால் 209

அக்காரவுண்டி

செய்யவுட் டணத்தை மாற்றுஞ் சீனிசர்க் கரைபால் நெய்யில்
நையவெந் திடுமன் னத்தி னலம்பெறு குணத்தை நாடில்
வெய்யபித் தர்க்கு நன்றும் விரகவீ லைக்கும் பித்தாம்
மெய்யுறு மனலுந் தீரும் விளம்பிய குணத்தை நாடீர்

இலங்கனம்

நாடிய வன்னந் தன்னை நவிலுமத் தியானத் தண்ணீ
ஊடிய பசியி லாதே லுணர்விட லிராத்தி ரிக்கு
நீடிய விரவி லன்ன நின்றசீ ரணமே செய்யில்
ஓடிய பகல்முற் றுக்கு முணல்விட லொழிக்கு மந்தம் 211

வேறு

உண்பவர்க் குறுபிணி யுருத வூண்களைப்
பண்பயில் வாகடத் துரைத்த பாங்கினல்
மண்பயில் மனிதர்க்கு வகுத்து வைத்தனர்
திண்பயில் செய்தவத் துயர்ந்த சீரியோர் 213

வேறு

நோயற்றமுறை

மந்தமே யாகி லன்னம் வழுத்திய கறியோ டுண்க
அந்தமா னிடர்க்குச் சொன்ன வம்முறை யுண்ணும் பேர்க்கும்
தொந்தமா மிடக்கை கீழாய்த் துயில்கொளும் பேர்க்குந் தானே
விந்தைசேர் வயித்தி யன்றுன் வேண்டுமோ வேண்டா மென்பர்

வயித்தியர்க் கிசைந்த வாக டத்தினி லுரைக்கும் வாய்மை
வயிற்றினுக் கிசைந்த வூணுண் டுறங்கிடின் மருவா வெந்நோய்
வயித்தியர்க் கிசைந்த செய்தி வழுத்திட வுரைகேட் டென்றும்
வயித்தியர்க் கிசைந்த செங்கை மருந்துணு வண்ணங் கேண்மின்

உண்டபின் இளநீர்கொள்ள

வண்மையா யுண்ட பின்பு வளம்பெறு மிளநீர் கொள்ளில்
உண்மையாம் வாத பித்த சேற்பன மொடுங்கி நிற்கும்
தண்மையாந் தாதுண் டாகுந் தடையற மலமே போகும்
வண்மையா மழகுண் டாகு மறுகுந்தீ பனத்தை மாற்றும் 215

ஆனவூ ணுக்கு முன்ன மாங்கிள நீரே கொள்ளில்
ஊனமாய் வன்னி தாழு முறுமுறை யறிந்து கொள்க
பானமா மிளநீ ரந்தி பருகிடிற் கிருமி மாறும்
வானவிர் சடையார் செப்பும் வாகடத் துற்ற வாறே 216

உற்றிடு மிளநீர் செய்யு முண்மையாங் குணங்கள் செப்பில்
துற்றிடும் வாத பித்த சிலேற்பனந் தொடரா தென்றும்
முற்றிடு மலத்தை நீக்கு முதிருதீ பனமா மங்கி
பற்றிடு மன்றே நன்றும் பகருறு கண்ணோய் மாற்றும் 217

மாறுமுற் றிளநீர் கொள்ளின் மாறும்பித் தங்க ளெல்லாம்
வீறபத் தியமே யாகும் விரும்பிய தாதுண் டாகும்
கூறுமுப் பிணிக ளோடுங் கொடும்பழ விளநீர் தன்னால்
தேறுமே யிளநீ ரந்தி நெகிட்டவுண் டிருப்பார்க் கென்றும் 218

என்றும்செவ் விளநீர் கொள்ளி விதற்குச்சேற் பனகா சம்போம்
மன்றுறு மானூர்க் கான வளரிளங் கெவுளி புண்ணில்
நன்றுறு மங்க தாக நடந்திழைத் தெழுந்த தாகம்
அன்றியும் பித்த சோகை யாயுறு மந்தந் தீரும் 219

தீருமே வாயு வோடு திகழ்வலி பிணிகள் மற்றும்
தீருமே மலங்க ளெல்லாந் திடமுறு தாதுண் டாகும்
தீருமே சத்தி குன்மந் திடனுறு பலமுண் டாகும்
தீருமே சீத வாதஞ் சிறக்கமுற் றியதேங் காய்க்கே 220

காயமேற் சுகமா முண்ட காலமே யிளநீர் கொள்ளில்
நேயமாங் கங்கு லன்ன நிறைந்தவெந் நீரைக் கொள்ளத்
தீயநோய் பலவுந் தீருந் திருந்திய வுண்டிக் கின்பாம்
தோயமே யுண்ண நாளுந் தோயத்தின் குணத்தைச் சொல்வாம்

நீரினால் வருங்குணம்

சொல்லிய வடவி நீரை யுண்டிடிற் றேன்றுஞ் சீதம்
மெல்லிய வுடலிளைத்து மிகமிக வரட்சி யுண்டாம்
வல்லியல் தலைபா ரிக்கும்வயிறுளைந் துழலை யுண்டாம்
சொல்லிய சுரமு முண்டாந் துயர்மிகத் தொடர்ந்து தோன்றும்

தொடர்ந்திடு வியாதி தானுஞ் சுனையுறு நீரை யுண்ணில்
அடர்ந்திடுங் கபமும் பித்த மழலும்வந் தெய்து மெய்யில்

படர்ந்திடு சுரமு மிக்காய்ப் பகர்சொறி தினவு முண்டாம்
விடந்தனிற் கொடிய தான விகற்பங்கள் செய்யு மந்நீர் 223

செய்யுமே குணங்க ளவேறாய்ச் செழுமலை யருவி நீர்தான்
செய்யுமே வாயு வாகத் திரண்டுடன் மலத்தைச் சிக்கிச்
செய்யுமே சுரங்க ளீண்டிச் சேற்பன மிகுதி தோன்றும்
செய்யுமே வயிற்றை யுப்பித் தினங்கள முளவென் றேறி 224

ஏறிய வாயு மென்மே லெழுந்திடு நீரை யுண்ணில்
கூறிய கவுசி யோடு குடிகொளு மகோத ரங்கள்
ஊறிய முறைய யின்று முடன்படக் குடிக்கில் வாயு
சீறியே குன்ம முண்டாஞ் சேற்பன மிகுந்து தோன்றும் 225

வெந்நீர்

இயம்பிட வெளிதோ வெந்நீ ரியம்புவன் சிறிது கேண்மின்
நயம்பெறத் தெளிந்த நீரை நன்றாக வடித்தெடுத்துச்
சயம்பெற வெட்டொன் றாக்கித் தான்குடித் திடுவீ ராகில்
வயம்பெறு பித்த வாத சேற்பன மாறு மெய்யாய் 226

சுயம்படு சிரங்கு குட்ட மாறிடும் வெக்கை தோர்க்கும்
நயம்படு குணமு முண்டா னைபலு மந்தந் தீரும்
செயம்படு தாதுண் டாகுஞ் சித்தமுந் தெளிவே யாகும்
குயந்தரு மடமின் னார்க்குக் கொள்கையு மிவண்மே லென்னே

குளிர்ந்தநீர்

மெய்யுறக் குளிர்ந்த நீரை விரும்பியே குடிக்கிற் சால
நையுறு பித்தந் தீரு நயனமந் தமும்வந் தெய்தும்
உய்யுறு வயதா மற்று முரம்பெறு தாதுண் டாகும்
ஐயுறு மிரும லெய்து மருவிய குளிர்நீ ருக்கே 228

மண்கரகத்துநீர்

மனமுறு வாத பித்த சேற்பனம் வளர்சு வாதம்
கணமுறு விக்கல் சத்தி கம்பிர மேகத் தோடு

தினமுமண் கரகத் தூற்றித் தீதற வுட்கொள் வார்க்கு
அனநடை மயிலே வெந்நீர்க் கதிகமா மருந்து மில்லை 229

குணம்பெறு சலவையாம் வெந்நீர் குறுகவெட் டொன்றுய்க்காயில்
குணம்பெறு மருந்து மாகுங் குறைவற வமுத ருந்திக்
குணம்பெறக் காய்ந்த வெந்நீர் கொண்டுநா றடியு லாவிக்
குணம்பெறு மாத ரோடே கூடுவ தியல்பு தானே 230

களபம்பூசுதலின் குணம்

இன்புறு களபம் பூசி லிசைந்திடு குணங்கள் கேண்மின்
துன்புறு கனல்துர்க் கந்தந் தோன்றிடா திருக்கும் பூமான்
வண்புறு மணநன் ருகு மாதருக் கிடமாந் தூலம்
அன்புறு பெலனே டின்ப மமர்ந்திடும் வசிய மெய்தும் 231

களபவகை

எய்துசந் தனங்கர்ப் பூர மிணையிலா வகில்கஸ் தூரி
செய்யகுங் குமப்பூ வாம்பல் செஞ்சாந்து சவாது மிக்க
துய்யநற் புழுகு கோரோ சனையுடன் ருெகுத்துக் கூட்டி
மெய்யுறப் பன்னீர் கொண்டு விரகுறப் பூசி லின்பம் 232

வாததேகிக்குரிய களபம்

இசைந்தவெள் ளெருக்கம் வேரோ டினியசந் திரகாந் திப்பூ
இசைந்தகுங் குமங்கர்ப் பூர மிணையிலா வாரை கெந்தம்
இசைந்தரோ சினையுங் கூட்டி யிமசல மெடுத்து ரைத்தே
இசைந்திடு முடலிற் பூச வனிலர்கள் தமக்கா மின்பங் 233

பித்ததேகிகட்குரிய களபம்

பனிகொள்சந் தனங்கர்ப் பூரம் பகருங்குங் குமங்கஸ் தூரி
கனியுந்தண் பன்னீர் வாசச் சவாதுரோ சினைமெய் பூசிற்
பிணியும்வந் தெய்தி டாது பெருகுந்தா துவும்பின் தாது
மனிதரிற் பித்த ரோகர் மகிழ்ந்தணி களப மாமே 234

களபவகை

பிந்துறு கபத்தோர்க் கென்றும் பிரியமா மகில்கஸ் தூரி
இந்துசந் தனஞ்ச வாதோ டிதிற்புழு கோடு மம்பர்
கொந்துகுங் குமப்பூக் கோரோ சனைகுளிர் கலவை கூட்டி
முந்துறப் பூசி யின்ப முதிருமெய் முதிரா தென்றும் 532

முதிர்பனி யுலகு மூடு முன்பனி சிறிய வேனில்
கதிருறு வேனில் மற்றக் கார்காலங் கூதிர் காலம்
விதிமுறை களபங் கூட்டி விகற்பமும் பிணிக்கு மேற்க
மதிபெற வமைத்துப் பூசில் வல்லமா தருக்கும் வல்லான் 236

களபங்கூட்ட வகை

மூவகைத் தேகிகட்கும்

வல்லவா தம்பித் தந்தான் மருவிய கபத்தோர்க் கென்றும்
நல்லசந் தனத்து ளிட்டு நறைமிகு பச்சை பொன்று
சொல்கிளி யூறற் பட்டை துலங்கிரு வேலி வேர்சீர்
மல்லிலா மிச்ச மோரோர் வகைபல மொன்றுக் கூட்டே 237

கூட்டுகிஞ் சுக்கி ழங்கு குண்டோ ரோ சனைக்கி ழங்கு
நீட்டுதா ளீச பத்திர நெடுஞ்சடா மாஞ்சி லோடு
கோட்டமோ டொன்றி ரண்டு கழஞ்சுறக் கூட்டி யேதான்
மீட்டுநா கணங்க ழஞ்சு விரைபெற வெக்கை காட்டி 238

விரைபெற விடித்த ரித்து மேன்மையாம் பொடியே யாக்கிப்
புரையற வரைத்துக் கொண்டு பொழுதொரு சாமத் தூக்கு
நிறையொரு பலத்து ளுக்கு நிறைபண விடையி ரண்டாய்
உரைபுழு கிந்து கெந்தா ரிசிபோ டுறவ மைத்தே 239

அதிமண முறவே கூட்டி யானுமேற் பூசி யின்பம்
மதிபெற வசிய மாரு மலர்த்திரு மருவு நாளும்
அதிபெறு காதன் மாத ராசையா வதற்கும் வித்தாம்
திதிபெறு மதனன் போல நிற்கமு மனங்க ளிக்கும் 240

களித்திடு மனலர்க் கான காரகில் நறுக்கி வாசம்
அளித்திடு சந்த னத்தோ டதினிறை சமனய்க் கூட்டி
வெளுத்தசர்க் கரைநீர் தன்னில் விரைபுற முதனுள் வைக்கப்
புளித்திடா தெடுத்துச் செப்பு பொலிகல சத்தி லிட்டே 241

கலசத்திற் சாம்பி ராணி கலந்ததி ஞெலொன் ருகக்
கலசத்தை யேற்ற சாற்குள் வெளியினிற் கவிழ்த்துக் கீழாய்க்
கலசத்தின் வாயில் முன்னே கவிழ்த்திடு சட்டி நீரில்
கலசத்தின் வாய்தட் டாமற் கருத்தினல் வைத்த பின்பு 242

வைத்தபின் கலசஞ் சாலுள் வனத்தெரு முட்டையிட்டு
வைத்தபி னங்கி யாலே யெரித்திடச் சாலின் கீழாய்
வைத்தசட் டியினுக் குள்ளே மதுவுறு தயில மெல்லாம்
வைத்தவக் கலச வாயால் வடியுறக் கரிவீ ழாமல் 243

முன்னமே யெடுத்துச் சாந்தை முதிர்புகை நாற்றம் போக
முன்னமே தண்ணீ ரோடு முற்றிடா யிளநீ ரோடு
முன்னமே கழுவிப் பின்பு முருகிரு வேலிச் சாற்றில்
முன்னமே யூறிப் பூசில் முதன்மையா ருதர்க்கே யின்பாம் 244

பித்தரென் றெருருவர் முன்னுட் பேசிய சுணத்தி ஞலே
நித்தரும் பித்த ராகி நேசமுற் றவரும் பித்தாய்
முத்தமிழ் மருந்தி ஞலே முனிவறத் தெளிந்தா ரென்ருல்
இத்தலத் தோர்க்கி சைந்த காரண மியம்பு வோமே 245

பிற நூற்கோவை

கஞ்சுக்கு மாற்று

இரிபலைவேர்க் கொம்பு சிறுகீரை வேர்நெய்
மரிசமிவை வற்சநா பிக்காம்--அரியசிறு
காஞ்சொன் றி வேர்கருப்புக் கட்டிபெட்காய்ச் சிக்குடிக்கப்
பாய்ஞ்சோடிப் போந்தில்லைப் பால்

பெருங்காயஞ் சுக்குக் குருக்கத்தி வேர்விரை பிச்சிமொட்டு
மருங்காய் மதுரம் பனைவே ரொடுசிற்ற மட்டி நெய்யோ
டிருங்காலி லாவரை கோரோ சனைபகப் பாலெனவே
தருங்கா தலாலென் றுஞ் சொன்னாலுந் தோன்றிக்குச்சாவில்லையே

எட்டி தனக்கு வாழைப்பூ விசைந்த விலவம் பிசினுவற்
பட்டை விளாவேர் மாவிலங்கை படருந் தேவ தாளியிலை
செட்டிக் குகந்த பெருங்காயஞ் செறிந்த காடிதனிற் குடிக்கக்
கட்டி நமன்கொண் டோடுமுயிர் கடுக மீளுங் கண்டாயே 249

முயலிறைச்சிக் கெலிமாற்று மெலிக்குமோராங் கோழிக்கு முருங்கை மாற்றும், சயமிகுந்த பன்றிக்கு விளாவேர் மாற்றுந் தப்பாதாட் டிறைச்சிக்குச் சாதிக்காயாம், புயலனைய குழன்மடவாய் கழுதைமான் தனக்குப் புளிமிளகு மாற்றுகும் பொருந்திய மீனுக்குப், பயன்மருவு மாவிலங்கை யிலைச்சாறு காய்ச்சிப் பருகவுடனே சமித்துப் பற்பமாய் விடுமே

நெய்க்கு வெந்நீ ரவற்குப்பு நெடுமாங் கனிக்குத் தேங்காய்ப்பால்
கைக்குஞ் செருக்கல் வரகுக்குக் கருப்புக்கட்டி பூசினிக்காய்
வைக்கும் பலாவின் பழத்துக்கு மாற்றுஞ் சுக்கு மாங்கொட்டை
மெய்க்கு நெல்வேர்க் கிலாமிச்சம் வேர்மாற் றுகு மெல்லியலே

செரியா மலுக்குப் பாக விலைச்சாறு நற்றேனுக்கு நெய்க்கும்
கரியாங் கொள்ளுச் சாறுமாங் கர்ப்பூரந் தேசிக் காய்க்கும்
வரியார் விழியாய் கோரோசனை மாற்றுங் கையாந் தகரையுமாம்
தெரியாப் பேய்க்கா ளானுக்குச் சிறுமூலகமாந் திடமிதுவே

நச்சுப் பல்லி கடித்தால்மோர் நல்லதேவ தாளியுமாம்
மெச்சுஞ் சுண்ணாம் புக்குமஞ்சள் மிக்கமாற்றென் றுரைசெய்வர்
இச்சை நண்பாற் சோறுதனக் கிதமா மோனாக் குடித்துவிடக்
கச்சுமுலைபா யுள்ளிக்குக் கடுக்காய் மாற்றாங் கண்டுகொள்ளே

குன்றியின் மணிதின் றால்வேர்க் கொம்பினைக் கொடுக்கத் தீரும்
வென்றிகொள் வற்ச நாப மிளகுதின் றளவே தீரும்
நின்றதோ ரெலிமருந்து நிருவிஷங் கொடுக்க நீங்கும்
நன்றினிப் பூமத் துக்கு நளினத்தின் வளையமாமே 254

அலரிக்குக் கடுக்காய் கள்ளிக் காவரை நெல்லித் தோலாம்
நலமில்லெவக் தோன்றியாகில் நாவற்றோல் கொழுந்து சுண்ணாம்
பிலகிய கருக்கு வாய்க்கே யியங்கிலை கொடுக்கத் தீரும்
திலமெனும் பேர்சொன்னாலுந் தீர்ந்திடு மெருக்கம் பாலே 255

உற்றவப் பிரேகத் துக்கு வுகந்திடு மலைய மாற்று
நற்புறு கெந்த மானால் நயந்தபூ சினிக்காய்ச் சாறு
வெப்புறு காந்த மாகில் விளங்கநி மதுரத் தண்ணீர்
பொற்புறக் கலக்கி யுள்ளிற் புகட்டிட மாறு மன்றே 256

அன்றிய விரும்பி னுக்கு விளாம்பழ மோர தாகும்
துன்றிய புளியு மோரிற் கொடுக்கமாற் றென்னச் சொல்லும்
நன்றிசேர் கிட்டந் துக்குப் பாலைச்சா றருந்த நன்றாம்
வென்றிசே ரிரசத் துக்கு வெற்றிலை யருந்த மாற்றே

அருந்திய பொரிகா ரத்துக் காமென்னாக் கடுக்காய் வெல்லம்
பொருந்துமிந் துப்புக் கூட்டிப் புகட்டிட மாற்ற தாகும்
வருந்துவர் தனக்குத் தேங்காய்ப் பால்மிரு சம்ப ழச்சா
றருந்தநெய் யிலையும் வெவ்வே றவையுண மாற்ற தாமே 258

ஆனதோர் கெந்த கங்க ளரிதார மனோசி லைக்கு
மானாய் கடுக்கா யெண்ணெய் வார்ததனைத் துண்ண மாறும்

தானொரு தேங்காய்ப் பாலாந் தனித்தொரு கெந்தந் தின்றால்
கானமா மலையஞ் சங்கு காண்டத்திற் கொடுக்க நன்றே 259

நன்சத குப்பையாகு நவில்கெந்தந் தனக்கு மாற்றுப்
பன்னரி தாரத் துக்குப் பகர்ந்ததா மதூரத் தண்ணீ
ரின்மிகக் கொடுக்க மாறு மிகழ்மனோ சிலைக்கு மாற்று
உன்னரு மவரி வேரைக் கஷாயமிட் டுண்ண லாமே 260

நன்குட சப்பாலைக்கு நவில்புளி யம்ப ழந்தான்
இன்புறு மெள்ளு மாற்று மிகலண்டந் தின்றால் நீடும்
இன்கிளர் கறிகு றிஞ்சா விலையுடன் கொடுக்க மீளும்
இன்பதா மகத்திப் பூவுக் கெலுமிச்சம் பழமுங் கூட்டே 261

கூட்டுசீ தேவி யாருங் கஷாயமிட் டுக்கொ டுக்கில்
மீட்டிடு மென்பர்கையின் விஷத்துக்கு வேப்பம் பட்டை
நாட்டுமொட் டறையு முள்ளிப் பழங்கடுகு ரோகணியும்
ஈட்டுதிப் பிலியும் வெந்நீ ரினிற்கொடுத் திடவு மாற்றே 262

கொடுத்தது வாகைப் பஞ்சாங் கமரைத்துளே கொடுக்க மாறும்
அடுத்தமஞ் சாடி வேரு மதிமதுர முண்ண மஞ்சள்
எடுத்துமுந் திரிகையின் றன்பழ முடனிவை யோரொன்று
மிடுக்குட னெரித்து வெந் நீரினிற் கொடுத்திடவு மீளும் 263

இட்டபேய்ச் சுரையில் வேருந் திப்பிலி யிவைவெந் நீரில்
இட்டறக் கொடுக்க நன்று சிவதையொட் டறையுங் கூட்டி
மட்டிய ரோசனியு மாவின் பாலினை விட்ட ரைத்து
நட்புட னுண்ணப் பஞ்ச தாரையுங் கூட்டில் நன்றே 264

நன்றிசேர் சிறிய கீரை யொட்டறை பயின்ற பாலில்
ஒன்றிட வரைத்தே யுண்ண நன்று திப் பிலியிந் துப்பு
வென்றிசேர் கடுக்காய் மஞ்சள் கூட்டிவெந் நீரிற் கூட்டி
அன்றுணக் கழிச்ச லாகி லகலுங்கை விஷமுந் தானே 265

வெப்புறு விஷங்கள் தின்றால் வசம்பிலை வணந்தண் ணீரில்
ஒப்புடன் கொடுத்துச் சத்தித் துள்ளவி டதங்கொ டுக்கத்
தப்பிலொட் டறைக்கு மஞ்சள் சர்க்கரை பூசி னிக்காய்
வெப்புள சாறு பால்வெந் நீரினிற் கொடுக்க மாறும் 266

மாறருங் கள்ளிப் பாலுக் காவரை யிலைமா மோரில்
வீறுட னரைத்துக் கொண்மின் மிகுந்தசர்க் கரையோடெள்ளுப்
பேறதி மதுரம் பாலி லரைத்துண்ணப் பெருமரத்தின்
கூறிய பட்டை மோரி லரைத்துள்ளே கொடுக்க மாயும் 267

வற்சநா விக்கு மாற்று வளர்கையாந் தகரைச் சாறு
மெச்சுபூ மத்தங் காய்க்கு மேன்மைசேர் பருத்திக் காயாம்
பச்செருக் கதற்குப் பாக்குப்பழத்தேங்காய்ப் பான்மாற்றென்பர்
நிச்சயம் பயறி நஞ்சை நீக்கிடும் விடத்தற் சாறே 268

நஞ்சக ளனைத்தினுக்கு நலமிகு மவுரி வேரை
அஞ்சொலாய் கஷாய மிட்டே யருந்திட நன்றா மென்பர்
மிஞ்சிடிற் பசுப்பால் கூட்டி விரைவுடன் கலந்து கொள்க
விஞ்சிய விடங்க ளெல்லாம் விரைவினிற் பறந்து போமே 269

அன்றியு மவுரி வேரி லறுகின்வேர் மிளகுங் கூட்டி
நன்றிசேர் கஷாய மிட்டு நாலாறு நாட்கள் சேர
ஒன்றிய பசுவின் வெண்ணெ யுடன்கலந் துள்ளே கொள்ள
வென்றிடும் விஷங்க ளெல்லா மெனமுனி விளம்பி னாரே 270

நஞ்சுதின் றெரிப்புத் தொட்டால் நவசட்டி யிற்சுண் ணாம்பை
மிஞ்சிடக் கரைத்து விட்டு மீட்டதைக் கொடுக்க நன்றாம்
அஞ்சொலா ரணங்கே யெள்ளை யரைத்துமே கொடுத்துப்பின்பு
தஞ்சமார் பயிரி தன்னை யரைத்திட மாறுந் நஞ்சே 271

*மாற்று

நெய்விஷத்துக்கு

....

மோரி லரைத்தெரித்து மோசமற வேபருகும்
சேரு மரிசமத்தித் திப்பிலியும்-மோரில்
அரைத்தருந்து நெய்யில்விஷ மங்குநில்லா தோடும்

எள்ளெண்ணெய்க்கு

திருத்துதில நெய்யதனைத் தின்றாற்-பொருந்தமுறக்
காடிதனைக் காய்ச்சியுண்ணுங் கைக்குமெள்ளின் பிண்ணாக்கை
நீடுபசு மோரிலிட்டு நீயெரித்துத்-தேடுமிஞ்சின்
வெல்லந் தனைக்கரைத்து மெய்ப்பாக வேயருந்தும்

கடுகெண்ணெய்க்கு

சொல்லுகடு கெண்ணெய் தனைத் துய்த்தக்கால்-மெல்லிலையை
உள்ளருந்துஞ் சாரடைவே ருள்ளியிலா மிச்சதின்வேர்
நல்லபசு மோரி லரைத்தருந்தும்-சொல்லுமந்த

ஆமணக்கெண்ணெய்க்கு

எரண்ட நெய்பருந்தி லேற்றகடுக் காயெரித்து
மோரிலரைத் துண்ண முறியுமே-கோரமுறு

வேப்பெண்ணெய்க்கு

நிம்பநெய்யைத் தின்றால் நிகழ்குடசப் பாலைதனில்
அன்புறுதோல் மோரி லரைத்தருந்தும்-நன்னிலதாம்

பாகற்காய்கைப்பகற்ற

பாகற்காய் கைப்பகற்றப் பண்பா யுறுகடுக்காய்
வேகத்தை யுள்ள விரைநீக்கி-நோக
இடித்தவித்த நீரை யிறுத்துப்புங் கூட்டித்
திடத்தொடுபா கற்காயுஞ் சேர்த்துப்-படித்தலத்தில்
நன்று யவித்தபின்பு நல்லபுனல் வார்த்தலம்பத்
துன்றுகைப்ப தெல்லாந் தொலையுமே-நன்றியில்லாப்

---

*இத்தலைப்பின் கீழுள்ள கலிவெண்பாவின் முதலும் ஈறும் (இடையும்) செல்வாய்ப்பட்டொழிந்தன.

பேய்ச்சுரைக்காய் முதலியன கைப்புநீக்க

பேய்ச்சுரைக்காய் தன்னுடனே பேசுபல கைப்பகற்ற
வாய்ச்சகடுக் காயவித்த வண்புனலில்-தீச்செறித்து
நன்றாய்க் கழுவினக்கால் நாசமாங் கைப்பனைத்தும்

துவர்ப்புவகைநீக்க

பொன்றாத் துவர்ப்புவகை போக்குதற்குக்-குன்றாக்
கடுக்காயைச் சுட்டுக் கனசாம்ப ராக்கி
யிடுக்காநன் னீரத்லே விட்டுச்-சடக்கெனவே
உப்புங் கலந்தங் குறவவித்து வற்றியபின்
செப்பமுடனே கழுவிச் செய்கறியைத்-துப்புடைய

மாங்காய்புளிப்புநீக்க

நன்மாங்காய் தன்னைமிக நன்றா யரைத்தறவில்
முன்னே கலக்கி முதலுரைத்த-நன்னயஞ்சேர்
சாம்பர் தனையிட்டாற் சலநல்ல தண்ணீராம்
ஏம்பலுறு நீர்க்கடுப்பு ரத்தபித்தம்-போக்துவர்ப்பும்

நீரிலுப்புநீக்க

உப்புச் செறிநீ ருவர்நீ ரகற்றுவதற்
கிப்புவியிற் றாழை விழுதெடுத்துத்-துப்பாய்
நருக்கிப் பிழிந்தெடுத்த நன்னீர் கலந்தால்
பொருக்கெனவே யுப்பகன்று போங்காண்-திருக்கறிக்கங்

கறிவகையில் உப்புமிகுந்தால்

குப்பதிகப் பட்டா லுரைக்குமந்த நீர்புகட்டிச்
செப்பமுடன் காய்ச்சிவிடத் தீருமே-தப்பிதமில்

எலுமிச்சம் பழம் முதலியவற்றின் புளிப்புநீக்க

தேசிக் கனிக்குந் திகழ்புளிக்கு மாங்காய்க்கும்
வீசு புளிப்பகற்ற வேண்டுமேல்-ஆசில்
புளியம் பொருக்கும் புகழ்பழத்தி லோடும்
தெளிவெண் பலியாக்கித் தெண்ணீர்-வழியவொரு
நாழி தான்புகட்டி நற்புளிதேங் காயளவு
தேனை கரைத்துத் தெளியவிட்டால்-ஆன

புளிப்பகன்று தேன்சுவையைப் போலேதித் திக்கும்
களிப்புமிகு மாங்காய்கண் டித்துச்-செழிப்புமிகு
நற்சாம்ப ரிட்டதிலே நன்னீர்வார்த் தூறியபின்
பொற்பாய்க் கழுவப் புளிப்பகலும்-அற்புடனே
எல்லாப் புளிப்பினையு மீதே யகற்றுவிக்கும்
சொல்லுமந்தச் சாம்பர்தனைத் தூய்நீரில்-மெல்லவிட்
டூறினநீ ரைத்தெளித்தங் குண்பீரேன் மூன்றுதினம்
மாறிலுட லுட்புளியை வாங்குமே-வீறுடனே
நாளும் புசித்தபுளி நாசமாய்க் காயசுத்தி
வாளும் படிதான் வயங்குமே-கேளுமந்த

எண்ணெய்ச்சிக்குநீக்க

எண்ணெய் பலவு மிருந்ததெலாம் வாங்குவதற்
குண்ண மருந்ததனை யோதக்கேள்-மண்ணுலகில்
காரெள்ளின் கோதைக் கடுஞ்சாம்ப ராயெரித்து
நீரிற் செரித்திடவே நீகரைத்துச்-சேருமிந்நீர்
நன்றாய்த் தெளித்தப்பை நாலுநா ளுண்பீரேல்
துன்றுசரீ ரத்திற் சுவறுதலாய்-நின்றவெண்ணெய்
நீங்கிப்போம் பின்பு நிகரின் மருந்துவகை
ஆங்குப் பலவு மருந்தநன்றாம்-ஓங்கும்

வேப்பிலையின்கைப்பகற்ற

குறிஞ்சி சமூலங் குணமா யுலர்த்தி
நிறைஞ்சகன றானெரித்து நீறாய்ச்-செறிஞ்சதுடன்
வேம்பி னிலையரைத்து வெந்நீரி லேகரைத்துச்
சாம்பலுமிட் டூறவைத்தாற் சாராதே-தேம்பியகைப்
பெந்தவித மானகைப்பு மேகு மெரிப்பகற்றச்
சந்த முளமிளகின் றன்கொடிதான்-கந்தமுறக்
காய்க்கும் பருவங் கடிதுசமூ லத்துடனே
வாய்க்க வெடுத்தெரித்து வண்சாம்பல்-ஊக்கமுடன்
இட்டா லெரிப்புவகை யேகுமே தீயதனில்

பாலைச்சர்க்கரையாக்க

அட்டிடுபால் சர்க்கரைய தாக்கவகை-கிட்டுபசுப்
பாலறுநா ழிக்குப் பகர்தகரைச் சாறதுவும்
ஏலவொரு காசளவை யிட்டெரித்துச்-சாலவடிப்
பற்றுமற் காய்ச்சியந்தப் பால்திரண்ட வாறெடுத்து
நற்றுலத் திட்டுநன்று கப்பாப்பி-மற்றுமொரு
சட்டியிலே தண்ணீர் தனைவார்த்துத் தீயெரித்து
வெட்டெனவே யக்கலத்தை மீதேற்றித்-திட்டமரை
நாழிகைதான் சென்றவுட னல்லபஞ்ச தாரையைப்போல்
தாழ்விலறு மாதமட்டுந் தானிருக்கும்-மீளவுமே
பால்வேணு மென்றாற் பகர்நாழி நீர்தனில்
சால வொருபிடி தூள் தான்விரவிச்-சீலமுடன்
காய்ச்சினாற் பாலாங் கருதுபிரை யிட்டக்கால்
வாய்ச்சதயி ராகி வயங்குமே........................
....
....

தாகம்நீக்க

நற்சந் தனமரைத்து நல்லநவ பாண்டத்திற்
சுற்றுமுள்ளும் பூசித் துவக்கறவே-சொற்ற
உமிக்காந் தலிற்கவிழ்த் தூற்றவதன் பின்னர்
அமைக்கும் படிகே ளணங்கே-நமக்காக
முன்னோர் மொழிந்த முறைசாம் பிராணியது
தன்னைப் பொடித்துத் தழன்மீது-முன்னிமிகத்
தூவி யதிற்கவிழ்த்துத் தோயவிட்டுத் தோயமதிற
பாவுசிறு கல்வறுத்துப் பாவியே-ஆவியதிற்
போயாறு முன்னம் புகலுமிலா மிச்சையின்வேர்
நாவலுடன் மாவி னறுந்துளிரும்-காய
வறுத்தமல்லி யுங்கூட்டி வாய்ப்பான தேனும்
இறுத்ததிலே யிட்டுக் கலக்கி-யுறத்தெளித்துக்
கொள்ளக் கொடுந்தாகங் கூடுமுழலையுடன்
கள்ளவிக்கல் நாவரட்சி காந்தலும்-எள்ளலறும்

வாந்தி பரதவிப்பு மாறு மெனவுரைத்தார்
ஏந்திழையே மேலு மியம்பக்கேள்-ஆய்ந்த
அரிசிவறுத் தந்நீரி லானகஞ்சி காய்ச்சி
வரிசைபெறு மண்சட்டி யொன்றில்-கரிசறவே
நற்சீ ரகமதுர நாடுசுக்குத் திப்பிலியும்
பொற்பா யரைத்தப்பிப் போதடுப்பில்-சொற்பாக
மாகவைத்துத் தேன்விட் டதிற்கஞ்சி யூற்றியே
பாகமுறத் தாளித்துப் பண்புபெற-வேகவிட்
டேயிறுத்துக் கொள்ளநன்று மீதன்றி யிம்மருந்தில்
தூயவந்நீர் கஞ்சிக்காய்ச் சொன்னபடி-நேயமுற
விட்டுத்தா ளித்துமே வேகவிறுத் துங்கொளலாம்
உட்காய்ச்சல் பித்தசுர மோங்கும் பழவெதுப்பும்
வெப்பமுறும் பொல்லா விடசுரமும்-ஒப்பும்
அதிதாகந் தீரு மரியநஞ்சு தின்று
விதியுறவே வெப்பித்த பேர்க்கும்-அதிகமாய்க்

இதுவுமது

கொள்ளநன்று மின்னமொன்று கூறுதுங்கே ணீர்த்தாகம்
உள்ளபடி தீரு முறையாகும்-தெள்ளுகின்ற
நற்சீர மெட்டொன்று நாடியவி நன்னீரும்
சொற்பாவு மிஞ்சி சொரிசாறும்-பொற்பார்
எலுமிச்சை தன்கனியி லேற்றபுளி தானும்
வலுமிக்க தேனு மதியாய்-நலமிக்க
சார்முந்திரிக்கனியின் சாறுங் குறையாதே
ஓரளவா யெல்லா மொருமிக்கச்-சேராய்
நவபாண்ட முன்போ னயந்துபுகை காட்டி
அதிலே யவையெல்லாம் விட்டு-மதியொன்று
சென்று லெடுத்துத் தினங்கொள்ள நீர்த்தாகம்
குன்றுத வுட்டணங்கள் கூறெரிப்பு-நன்றாகத்
தீரும் பசியுண்டாஞ்...............................

....

வேறு

நோய்கண்டு சிகிச்சைசெய்ய

சொல்லிய நாலின் வண்ணந் தோன்றுநோய் குணங்கள் கண்டும்
அல்லதுந் தோன்றுங் கால மவனுடை வயதுங் கண்டும்
நல்லதோர் சாத்தி யங்க ளசாத்திய நாடிக் கண்டும்
வெல்லுறு முடலின் வன்மை மென்மையுங் கண்டு பின்னும் 272

பிணிவரு நாளுங் கண்டு பிணியினி லேதுக் கண்டு
பிணியினில் வன்மை மென்மை பிணிதவிர் நாளுங் கண்டு
கணிதரு கிரக தீமை கண்டுநன் மருந்து பேணித்
தணிவுறு முணவ ளித்துத் தகும்படி சிகிச்சை செய்யே 273

சொற்பெறு வியாதி யெல்லாந் துகளறக் கண்டு ணர்ந்து
நிற்பது நில்லா தென்று நிதானமுந் தெளிந்து கண்டு
விற்பெறு நுதலா யந்த வியாதியின் மரபுங் கண்டு
மற்புறு வியாதிக் கொத்த மருந்துசெய் யவல மில்லை 274

ஆணவ மின்றி யன்பா யருஞ்செபஞ் சாந்தி பண்ணிப்
பேணிய நாட்பின் னிட்டுப் பெலன்பெல வீனங் கண்டு
வீணதாய்த் தன்மேற் குற்றம் மேவிடா வியற்கை கண்டு
ஊண்மற வாமல் நல்ல வுறுதியாய் மருந்து செய்யே 275

அனுபவத் திறமை தன்னா லவையெலாங் கண்டு கொண்டு
வினைவழி யறிந்து மெல்ல மெல்லிதா மருந்து தன்னைத்
தினையள வெனினு நல்ல தீர்க்கமாய்ச் செய்து கொள்ளல்
அனைநிக ராயுள் வேத ரருங்கட னாகு மன்றே 276

நோய்க்கேற்ற மருந்தறிய

சுரவகை

வேறு

வாதபித்த சேற்பனத்திற் சுரங்கள் தோன்றில்
வந்தடுத்த தோஷமெலாம் வகுத்துக் கண்டு
பேதமுறு கஷாயவகை பேணிச் செய்க
பெருத்தெழும்பிற் பன்னிரண்டிற் குணங்க டேர்ந்து 277

போதமுறு மாத்திரைக ளறிந்து செய்க
பொருந்துசுர மீறிநிற்கில் முப்ப தானல்
சேதமறு முக்கூட்டுத் தயிலந் தேய்த்துச்
செய்மருந்து வாதமதைப் பேணித் தானே 278

சுரமேறிச் சுரங்குறைந்து சுரமீ ளுகிற்
றுலங்குநல்ல முக்கூட்டுத் தயிலந் தேடிச்
சிரமேறப் பொருத்திநன்ருய் வாதம் பேணிச்
செய்துவர நாடோறுந் தீர்வி யாதி
உரமேறுந் தலைக்கனப்புக் கபால வீக்க
முறைத்தசுரங் காதடைப்புச் சன்னி தீரும்
பரமேறித் தலைகனத்துத் திமிருண் டாகிற்
பகர்ந்தகொதி யெண்ணெய்த‌னைக் கொதித்துப் பூசே 279

பெருத்தசன்னி வாதசுரம் பெலத்து நிற்கிற்
பேதமற முக்கூட்டி லெண்ணெய் வைக்கப்
பொருத்துமதிற் றிரும்பாதேன் மருந்தி னேடு
புகன்றசன்னி வாதசுரத் தெண்ணெய் வைக்க
வருத்தமற வேறுதி குடிநீர் தாமும்
வாகடத்தின் முறைபுரிய மாறுங் கண்டீர்
திருத்தமுறச் சன்னியென்று திடனுய்க் காணிற்
திறமான கொதியெண்ணெய் தேடிச் செய்யே 280

வாதசன்னி பெலத்தேறி மயக்கி நிற்கில்
வலியபெருங் கொதியெண்ணெய் கோழிமுட்டைத் தயிலம்
சேதமுறு சன்னிவா தந்தான் சேரிற்
செப்புசன்னி வாதசுரத் தெண்ணெய் வாங்கிப்
போதமுறச் சிரத்துமுள்ளும் பூசித் தின்னப்
பொருந்துசரீ ரத்திலிட மாவிலங்க மெண்ணெய்
சீதமுறு வாதமெண் பதுக்கு நன்று
சினேகபொட் டளியிலுடன் வாதசீ வனியே 281

பெருவாத சீவனிமா வாத வெண்ணெய்
பேசியநற் பந்தத்தின் றபிலந் தானும்
தருவாத ராட்சதனுஞ் சன்னிக் கேற்கத்
தந்துரைத்த மாத்திரையே ளுகி யாதி
பரிவாகச் செய்துவரப் பையப் பையப்
பகர்ந்தசன்னி சுரமனைத்தும் பாறிப் போகும்
சரியாகச் செய்யாது பிழைப்பிற் காய்ச்சல்
சாருமத்தி தனிற்சுரமாய்ச் சாற்றி ளுரே 282

சாற்றுமத்தி சுரத்திற்கு முலைப்பா லெண்ணெய்
தகுந்தமுறை யேலாதிச் சூர ணங்கள்
போற்றுசந்த ளுதியெண்ணெய் தானு நன்றும்
பொருத்தமுறு மேலாதி கடுகந் தானும்
மாற்றமுறு வாகடத்தை நுணுகிப் பார்த்து
வந்தசுரந் தனக்கேற்ற வண்ண மாகத்
தேற்றமுறு மருந்துசெய மாறு மென்று
செப்பினர் பண்டிதத்தின் றிண்மை கண்டோர் 283

கண்டறிந்த பழஞ்சுரங்கள் வரட்சி காந்தல்
கருதுநல்ல மிருதசஞ் சீவி யெண்ணெய்
பண்டறிந்த மருந்துவகை பித்தம் பேணிப்
பகர்ந்தவெண்ணெய் வகையுமே லாதி தானும்
கொண்டறிந்த மெழுகெண்ணெய் வெருகி னெண்ணெய்
குடிபோக்கு மோரெண்ணெ யிவையு மாகும்
வண்டறிந்த கரியகுழன் மானே சொல்லும்
வாகடத்தின் பயனறிந்து மருந்து செய்யே 284

வாதரோகம்

வாதமெலாஞ் சினேகபொட் டளியி ளுலும்
வாதாரி மருந்துபே ரிலங்கை யெண்ணெய்
போதமுறுங் குறுமுனிசொற் சிந்தா ரங்கள்
புகல்கஞ்சா விலைச்சாற்றி விலங்கைச் சாற்றில்

சேதமறக் கொளலாகுங் கொம்பு வைக்கச்
செப்பியநல் விரட்சைசெயச் செப்பும் வேதம்
ஏதமறு மகப்பிரதா னியினி லெண்ணெ
யேற்றபடி சஞ்சீவித் தயில மாதி 285

வலி உட்குத்துப் பிறவீச்சு முதலியன

வலிகளுட னுட்குத்துப் பிறவீச் சாதி
வாதமதைப் பேணியே மருந்து கொள்க
நலிவகற்று மாத்திரைகள் செல்லா விட்டால்
நாடுபந்த தயிலமுத லுடலிற் றேய்க்க
மெலிவகற்று மிரட்சைமுதற் கருவி யெல்லாம்
விளம்பியநன் முறைகண்டு மிகாமற் செய்க
கலியகற்றுந் தென்கதிரை வேலன் பாதங்
கருதிவினை யணுகாமற் காத்துப் போற்றே 286

பித்தரோகம்

வேறு

பித்தரோ கங்கட் கெல்லாம் பேசினர் சீர கத்தின்
சுத்தமார் சூர ணங்கள் லேகியங் கிருத மாதி
அத்துடன் கூஸ்மாண் டத்தி னரியநெய் லேகியங்கள்
சித்தவே லாதி தானுஞ் செப்பினர் சந்த னாதி 287

மகிழம்பூச் சந்த னாதி வைக்கவு மெண்ணெய் நன்றாம்
தகவுறு கழுதைப் பாலுஞ் சார்சிறு பயறு மேற்கும்
மிகவுறு புளியி னாலே மேம்படு பித்தம் பாறும்
அகமகிழ் கீழ்காய் நெல்லி யாதியு மதனுக் காமே 288

சிலேற்பனரோகம்

ஐயத்தி லெழுந்த நோய்க ளகன்றிடுங் கூஸ்மாண் டத்திற்
செய்யுறு நெய்க ளாலுஞ் சேர்ந்ததா துளைநெய் யாலும்
மெய்யுறு கண்டங் காரி மிகுவட்டுச் சிறுகாஞ் சோன்றி
கொய்யுறு மிவற்றி னாலுஞ் சிலேற்பனங் குடிபோ மன்றே 289

கோணழவிற் புருதி வந்து குத்துட னிருமு மாகில்
மீளுநற் குடிநீர் காரி நெய்யுடன் முலைப்பா லெண்ணெய்
நாளுமுக் கூட்டி லெண்ணெய் நற்பாகு குழம்பு நன்றாம்
கேளுஞ்சிற் றிளைப்புத் தாகஞ் சேர்ந்திடில் நொச்சிநெய்யே 290

மிண்டிய கசத்துக் கெல்லாம் வெல்லப்பா குடனற் பாகு
கொண்டிடு முயலி னெய்யுங் குறித்தகல் யாணி நெய்யும்
கண்டிடு முலைப்பா லெண்ணெய் கடியமுக் கூட்டிலெண்ணெய்
உண்டிடா கரியி னெய்யு முற்றதா துளையி னெய்யே

நெய்யுடன் குடிநீ ருண்ணா நன்றாமே னாதி தானும்
செய்யுறு மருந்தி னாலே தீராது மிகுந்து வந்தால்
ஐயமோ கால னூரை யணுகுவன் பொல்லா நோயால்
மையுறு களத்தெம் மண்ணல் வகுத்திடு மாணை தன்னால் 292

மகோதரம் முதலியன

வேறு

உற்றமகோ தரநீ ராமை யாதி
யுரைத்தவெலா மிலைக்குழம்பு காந்த பற்பம்
மற்றிவற்றாற் றீருமே பாண்டு தீர
வழுத்தினார் காந்தபற்பம் புளிக்கூட் டெண்ணெய்
சொற்றகற் றாழையெண்ணெய் கீழ்காய் நெல்லி
சுகமுதவுங் காமாலை பித்தம் பேணி
உற்றமுறை கொள்கவினி மூலங் தீர
வுரைத்தாரே வச்ரவல்லிக் கடுக மாதி 293

கருணை தரு சூரணமு நாக பற்பங்
காட்டினார் குன்மவகை யெட்டுந் தீர
வருகுன்ம குடோரியுடன் தாம்ப்ர பற்பம்
வங்கார சஞ்சீவி யக்னி குமாரன்
தருநாரத் தங்காயின் கடுகு தானுஞ்
சாற்றினார் நீரழிவு மேகந் தீர
உருகுவங்க பற்பமுட னப்பி ரேக
முரைத்தாரே நீரழிவுச் சந்த னாதி 294

கூறுசங்கு சோகியுமா நாரி நெய்யாங்
கூஸ்மாண்ட நெய்யாகுஞ் சூர்ண மாகும்
வீறுகெர்ப்ப வாயுவுக்கா முள்ளி யெண்ணெய்
விளம்பினர் காயங்கள் சூர ணங்கள்
ஊறுகுட்டந் தனக்காகும் பெருரோ கந்தி
னல்லதொரு குடோரியெண்ணெய் தாம்பிர பற்பம்
வேறுபல நோய்களுக்கு மருந்து பார்த்து
மிகாமலுங் குறையாது மாய்ந்து செய்யே 295

வாதபித்ததொந்தம்

வாதமும் பித்துங் கூடி வன்பெலத் துடனே யோடில்
தீதுற வயிற்றி னுள்ளே திரண்டதோர் மந்தத் தோடு
வேதனை யெரிப்புங் கூடி விரசிடும் பித்த குன்மம்
ஆதிசேர் சீனி கூட்டி யட்டசூ ரணங்கள் கொள்ளே 296

பித்தவாத தொந்தம்

பித்தந்தான் வாதத் தோடு பெலத்தெதிர்ந் தேறு மாகில்
மத்திம சன்னி வாதம் வந்திடும் பிதற்று முண்டாம்
அத்தினில் வாத பித்த மதிகரித் தேறி யோடில்
நித்தமும் பிதற்றி யோடி நினைவழிந் திருப்பன் காணே 297

பித்தசிலேற்பன தொந்தம்

முற்றுமிக் குணங்கள் கண்டால் முயிற்றினின் முட்டை யோடு
கர்த்தபப் பாலுங் கூட்டிக் கடிதருந் திதமாம் பின்னும்
பித்தந்தா னையத் தோடு பெருமுகந் திரும்பி நோக்கின்
மத்திய கசரோ கத்தின் வரவென வழுத்த லாமே 298

இருமலுஞ் சியலும் வீழ்ந்தே யிடைச்சுரம் விளைந்து காயும்
பருவமாய் நெஞ்சிற் பற்றிப் பறிந்திடு மிரத்தம் வீழும்
கருதிய விவைக்கு நல்ல கண்டுலே கியத்தி னோடு
மருவிய வாழைப் பூநெய் கொள்ளென வழங்கும் வேதம் 299

சிதசந் திரனி ேனாடு செப்புகல் யாணி நெய்யும்
ஓதுதூ துளையி னெய்யு முற்றநா யுருவி நெய்யும்
பேதமின் முலைப்பா லெண்ணெ யாதியும் பேசி னார்கள்
ஆதிதன் பாத முன்னி யவிடதஞ் செய்ய நன்றே 300

செய்வதுவு மூலிவகை மருந்தே மேன்மை
திருத்தமுறு நிலம்பார்த்துத் தேடிச் செய்க
பொய்தவிரும் பாஷாண மூலோக மாதி
பொருந்த நன்றாய்ச் சுத்திகண்டு பின்னேகொள்க
எய்தவரு மூலிகையா னேைத்தீர்ப் பானை
விவனேபண் டிதமறிந்த முனிவ னாகும்
பொய்தவிரு முளத்துடனே கடவுட் போற்றிப்
பூசைபுரிந் ததன்பின்னே மருந்து செய்யே 301

நாட்பலன்

குதிரைநாட் சுரம்வந் துற்றாற் குறித்தநா ளெட்டில் நீங்கும்
முதிருநற் பரணி மூன்றில் விடாவிடின் முந்தக் கொல்லும்
பொதுநன் மீனெட்டிற்பத்திற்பொறுத்திடும்பொருதே யாகில்
விதியது பதினே ராநாள் விண்ணிடை மேவு வாரே 302

உரோகிணி யெட்டி னாத லுரைத்தபன் னிரண்டி னாதல்
எரிசுர நீங்கா தாகி லிருபத்தே ழாநாட் கொல்லும்
தெரிவுறு மிருக சீர்ஷந் தெசநாளில் விட்டு நீங்கும்
வருதிரை நாளும் பத்தோ டஞ்சினில் மாறு மன்றே 303

புணர்தரு பூச மொன்றோ டிரண்டினிற் போகா தாகில்
இணைதரு குழலா யாங்கோ ரிருபத்தே ழாநாள் நீங்கும்
கணமறு பூச மஞ்சிற் கழியுமா யிலியங் கொல்லும்
பணைமகம் பன்னி ரண்டிற் பதினைந்திற் பறிந்து போமே 304

பூரமோர் பத்து நாளிற் பொறுத்திடும் பொருதேன் மூன்று
சீருடை மதியி னீங்குந் திகழுமுத் திரமு மாங்கே

ஏரணி யத்த மூன்றி லிளகுஞ்சித் திரைதா னுங்கோர்
வாரணி முலையா யேழ்நாள் வளமுடன் பறிந்து போமே 305

சோதியேழ் விடுமேற் கொல்லுஞ் சொல்லிய விசாக மெட்டில்
ஓதிய விருபத் தஞ்சி லுயிரற வகற்று முண்மை
நீதிசே ரனுடந் தானு நிரைவளை மானே கேளாய்
வேதிய ருரைத்த வாக்கால் விடுதிபன் னிரண்டா நாளே 306

கேட்டைநா ளஞ்சி னுதல் கிளர்ந்தொரு மாத மாதல்
நாட்டமாய்க் கொல்லு மூல நலமொரு மதியி னீங்கும்
பூட்டுபூ ராட மெட்டிற் பொறுத்திடு முத்தி ராடம்
ஓட்டுபன் னிரண்டில் நீங்கா வுயிர்கொளும் பலநாட்சென்றே

ஓணமோர் பத்தில் நீங்கு மோங்குப ரவிட்ட மஞ்சில்
பேணியே கொல்லா தாகிற் பெரிதுநா ளெட்டில் நீங்கும்
ஆணியாஞ் சதய மாதே யாருயிர் கொள்ளு மென்றே
வேணிசே ரீசன் சொன்ன விதியது தப்பா தன்றே 308

பொருந்திய பூரட் டாதி போமுயி ருத்ரட் டாதி
திருந்திய வெட்டிற் றீரு மல்லது சின்னாட் செல்லும்
அருந்கிரே பதிதா னெட்டி லல்லது பத்தி னுதல்
வருந்தவே யாவி கொள்ளு மென்றர் வழுவா நூலோர் 309

திதிப்பலன்

பற்றுகலை மதியத்தா லடர்ந்து சேரும்
பாக்கியமும் போக்கியமும் பகரக் கேளும்
உற்றெழுந்த முதற்பிறையி லெழுந்த நோய்க
ளுரைத்தபடி யீரேழி விருபத்தொன்றிற்
குற்றமுறு நாலேழிற் கொல்லா தாகிற்
குறித்தறியக் கடியமிடை துணமா முண்மை
பெற்றரண்டிற் பத்தாநாள் வதையா தாகிற்
பெருத்தமதி யாறுக்கு ணேய்க டரும் 310

பிசக்கறவே பிறைமூன்றிற் றொடர்ந்த நோய்கள்
பெலக்காமற் றெடுத்ததுடன் விடுத்துப் போகும்
மசக்குறவே பிறைநாலி லடர்ந்த நோய்கள்
வன்மமுற வெழுமூன்றின் மரணந் தப்பில்
தசைக்குளுயிர் தனைநிறுவும் பிறையஞ் சாகிற்
றணிந்தபிணி யுரத்துப்பின் சாந்த மாகும்
அசக்கிவிடும் பிறையாறி லுடனே தீரு
மாகாமன் மேல்நின்று லவத்தை காட்டி 311

காட்டியபி னஞ்சேழிற் சாந்த மாகுங்
கடினமில்லை யிடறீரும் பிறையே ழாகில்
மூட்டிவிடும் பிறையெட்டில் நாளீ ராறின்
மொழிந்தபிணி தீர்ந்துவிடுந் தீரா தாகில்
கூட்டியுயிர் தனைப்பறித்துக் கொலைதான் செய்யுங்
குறித்தபிறை யொன்பதினிற் குணத்தைச் செப்பில்
நாட்டுவினை யுடன்றீரும் பிறைபத் தாகி
னன்மையில்லைப் பதினேந்தா நாளிற் கொல்லும் 312

கொல்லாத பிறைபதினொன் றினிலே வந்த
கொடும்பிணிக ளுடன்றீரு மீறி நின்றால்
மல்லாக வதைத்துவிடும் பிறைபன் னண்டில்
வருத்தமற மூவைந்திற் றீரா தாகில்
பொல்லாது வதைத்துவிடு மறியச் சொன்னோம்
புகழ்ந்தபிறை பதின்மூன்றிற் பொருந்து நோய்கள்
நல்லாய்கேள் பதினெட்டா நாளிற் றீரு
நவின்றபிறை பதினாலிற் கலந்த நோய்கள் 313

கலந்தநோ யிருபத் தைந்திற் கணக்குட னிருக்கத்தீரும்
அலர்ந்திடு மூவைந் தாநா ளடர்மதி நாலா நாளில்
பிலன்தெறு நோய்க ளரும் பிசகினாற் பின்பு கொல்லும்
புலர்ந்தநோய் பிறையி ரெட்டிற் புக்குநோய் புகறு வோமே 314

புகன்மதியம் பதினாறிற் றொடர்ந்த நோய்கள்
பொல்லாப்பு நீங்கிவிடும் பதினெட் டாநாள்
இகமதியம் பதினேழில் வருநோ யெல்லா
மிடரகலும் பதினெட்டா நாளி லின்னும்
தகவுபிறை பதினெட்டி லடரு நோய்கள்
சாந்தமா முடனேமெய் தணியா தானால்
பகலிரவு நெடுநாளா யவத்தை பண்ணிப்
பாதகமா யுயிரிளைக்கப் பண்ணுந் தானே 315

பன்னுபதி னொன்பானி லெழுந்த நோய்கள்
பகையற்றே யுடன்றீரும் பரிசு பார்க்கில்
ஒன்றுபிறை யிருபதிலே தொடர்ந்த நோய்க
ளுயிர்போக்கு மேழிலுயிர் போகா தாகில்
நன்றுபடு மூவேழி லெழுந்த நோயகள்
நாடுபத்தி லேயுயிரை நாசம் பண்ணும்
கொன்றுவிடா தேயிருக்கிற் றிங்க ளொன்றிற்
குணமாக விருக்குமெனக் குறித்திட் டாரே 316

குறித்தவிரு பத்திரண்டாம் பிறையில் வந்த
கொடும்பிணிகள் பத்தாநாட் கொல்லா தாகில்
அறிக்கைபன் னிரண்டாநாட் சாந்த மாகு
மடர்மதிய மிருபதுமூன் றணிந்த நோய்கள்
வெறிக்கவுடல் வேதனைகண் மிகவுங் காட்டி
விட்டுவிடு மாறைந்து மிருநாண் முன்னே
பறக்கவிடு மதியமிரு பத்து நாலிற்
படர்ந்தபிணி தொடர்ந்துவந்த பரிசு கேண்மின் 317

தொடர்ந்துவந்த பரிசுபன் னிரண்டா நாளிற்
துன்பமறுந் தணியாமற் றுயர மானால்
மடந்தையரே திங்களொன் றி லடருஞ் சாவாம்
வழுத்துபிறை யிருபத்தைந் தழுத்து நோய்கள்

இடந்தவளர் நாளாறின் மரணந் தப்பி
விடர்வினைக ளகன்றுபதி யிருப்பா ருண்மை
நடந்தபிறை யிருபத்தி யாறு நன்றாய்
நாலவினை புறுத்தியபின் னன்மை தானே 318

தானே யிருபத் தேழாருந் தரித்த பிறையி லுபந்த பிணி
ஊனே யுருக்கும் வினையோடே யுயர்த்திப் பலநோ யுறக்கிவிடும்
மானே நாலேழ் பிறைபடர்ந்த வருத்த மிருபத் தோராநாள்
கானேற் றிடவே யுயிர்பறிக்கக் கடுகி முடுகுந் தப்பாதே 319

தப்பா திருபத் தொன்பதிலே தளர்ந்த பிறையி லெழுந்த மிடை
செப்பார் முலையாய் நாளடைவிற் றீருங் கண்டாய் நிடணுக
ஒப்பா முப்ப தாம்பிறையி லுவந்த நோய்க லோடிவந்தால்
மேப்பாங் கொடிய வல்வினைகள் மீளுமென்று விளம்பினரே

மரணநாளறிய

ஆயில்மூப் பூரஞ் சோதி யாதிரை பரணி கேட்டை
வயநல் லங்கி பக்க மீராறு நான்கோ டொன்பான்
காய்கதிர் செவ்வாய் காரி வாரங்கள் கலந்த நாளில்
நோய்வரின் மரண மென்றே நுவன்றனர் நூல்வல் லோரே 321

குருசனி செவ்வாய் கேது குறித்திடு மிராகு வெய்யோன்
வருமிவர் சென்ம மெட்டில் வருத்தசக் கரங்க ளீறில்
பொருவருந் தீக்கோ ணேக்கிற் பொருந்துநா விராசி தத்தில்
மருவுறு நோய்வந் தெய்தின் மரணமென் றுரைக்கு நூலே 322

குற்றமுள்ளவியாதிகள்

வாதசன்னி யுளைமாந்தை யிரத்த ரோகம்
வருத்துபெரும் பாடுகச ரோக மீளை
பேதமுறு பிறவிச்சுக் கண்டமாலை
பெரும்பிளவை குதிரைவலி சிங்க ரோகம்
சீதமுறு சன்னிபத்துச் சூலை யெட்டுத்
திகழுதிர மாலைருத்து வாத ரோகம்

சேதமுறு குப்டமெட்டுக் கிராணி யெட்டுச்
செப்பியநெஞ் சடைவாத முடக்கு வாதம் 323

முடக்குசன்னி வாதமுடன் வாய்வி யாதி
முயலகண்டன் முதலான வலியீ ராறு
மடக்குபெரு வாதமுடன் பெருவி யாதி
மாறுத குறளையுடன் வசூரிபெரும் பிளையன்
தடக்குபிர மியவாதம் படர்காச வாதஞ்
சத்திகுன்ம முதலான குன்ம மெட்டும்
அடைத்திடுமக் கரமெட்டுக் கரப்ப னெட்டு
மரிபிளவை விற்புருதி சுவாதம் பத்தே 3:4

பத்திருசேற் பனங்கடிய கைக்குழித்தா மரையும்
பகர்மேக நீரடைப்புப் பக்க வாயு
சுற்றிமிகு மந்தார காசமுடன் கிரந்தி
சொல்லு மத்தி சுரமுதலாஞ் சுரமோ ரெட்டும்
அத்திகரும் பித்தமுதற் பித்த மெட்டு
மடுத்தபீ நசம்பீட மூக்கி னீரும்
குத்திரமார் கோழைகண வாத சூலை
கொலைபடுவன் கொடியமுக சிங்கி மூலம் 325

மூலமுறு கிரந்தியுடன் மூல ரோக
முதிரிலிங்கப் புற்றுடனே யிலிங்க சூலை
சூலமுறு நீரழிவு கபால வீச்சுச்
சொல்லுமகோ தரகரப்பன் காய சேற்பம்
சீலமுறு முள்ளுருக்கி யுலற்று சூலை
சிரங்கினமுந் திமிர்வாத சன்னி காசம்
கோலமுறு வெண்குட்டம் வெள்ளு ரோகங்
கொடியகெர்ப்ப ரோகமுத லிரத்த குன்மம் 326

உரத்தபெரு வயிறுகள கண்ட மாலை
யுற்றசேற் பனமகோ தரநீர்க் கோவை

சலக்கழிச்ச லிரத்தசல நீர்பே ராமை
　　தருசேற்ப பாண்டெகுத்து வயிரை வாங்கி
செத்தினீர்ப் பாய்ச்சலுட னீல காசஞ்
　　செப்பியதோர் மணியூறல் விரண வெள்ளி
சாந்தில்வரு குக்தமுடன் காச வூறல்
　　சாற்றியகு ரியகாசம் மாலை காசம் 327

காசமுறு கெர்ப்பகுண மீரல் வாதங்
　　கடியபவிங் திரரோக மரிகரப்பன்
நாசமுறு பெரும்பிளவை மூல மேக
　　நடுக்கிவிழுத் திடும்வாதம் பெரியவாதம்
பேசுமுலர்த் திடுவாதம் பெருவாத கரப்பன்
　　பெருமிரத்தக் கிராணியுடன் வேதாள வாயு
பாசமுறு வினைக்கிடா மிங்நோ.யெல்லாம்
　　பகர்ந்திடுகிற குற்றமுள்ள வியாதி யாமே 328

கொன்றிடுஞ் சிலபிணி கொடுமை செய்துபின்
நின்றிடுஞ் சிலபிணி நீங்கி நீங்கியே
சென்றிடுஞ் சிலபிணி செய்ம ருந்தினை
வென்றிடுஞ் சிலபிணி விரும்பிக் கண்டிடே 329

குற்றமுள்ளவியாதிகள் சிலவற்றின்
கால எல்லை

சன்னி வாதம் வந்திடுகிற் சாக மூன்று மாதமென்பர்
தன்னிற்கொல்லாதெனின்மரணஞ்சாற்றின் மூன்றுவருடமென்பர்
நில்லா தெனிலே கொன்றுவிடு நெடிய குத்துப் பிறவீச்சுப்
பொல்லாதொன்பான்பன்னிரண்டிற்பொருதேற்றீர்தலரிதாமே

கோளை வியாதி பதினைந்திற் கொல்லா தென்னிற் றீர்ந்துவிடும்
மீளும் பிள்ளைப் பெறும்வீட்டில் விளம்பு சுவாத மிகுவதெனில்
தாழுஞ் சுவாத மும்மதியிற் றூழா தென்னின் வருடமொன்று
பீளைச் சுரமும் பன்னிரண்டிற்பெலக்கிற் பதினெட்டாஞ்சுரமே

சுரமே மூக்கு விருபதினிற் சொல்லு முப்பத் திரண்டில்விடும்
தரமே செல்லிற் சிலநாளிற் சாருஞ் சன்னி மகோதரமும்
சிரமே வலித்தக் கரம்வருகிற் றீரும் பதினெட் டிருபதினில்
உரமே தருமந் தரகாச முறுமே சரீர முள்ளளவும் 332

இப்படிக் கன்மத் திடா யிருந்திடும் பலவி யாதி
செப்பிடின் மரணத் திட்டந் தேவர்க்குந் தெரிவ தில்லை
மெய்ப்படி செபங்கள் சாந்தி விளம்பிய சிவதன் மங்கள்
ஒப்பிடச் செய்த பின்ன ருண்மையா மருந்து செய்யே 333

விதிவழி யென்று நம்பி விடுமுபி ருள்ள மட்டும்
மதியுறு மருந்து செய்து வறுமைக்கு முதவி செய்து
கதிபெறு வழியை நாடிக் கடவுளி னருளே யாக
அதிகமாய்ப் பேணிச் செய்தா லவர்விதிப் படியே யாகும் 334

சிலேற்பன பித்ததொந்தம்
சிலேற்பன வாததொந்தம்

ஐயந்தான் பித்தந் தன்னை யமைந்தெதி ரேறு மாயின்
நையவோர் நாளிற் கால னமக்கென வருவ துண்மை
பையவே யையும் பாய்ந்து வாதத்தைப் பற்றி நின்றால்
செய்யு மாறில்லை யோர்நாள் தனிற்கால னூர்போய்ச் சேரும்

நோயற்றநிலை

வாதமும் பித்து மையும் வல்லபத் துடனே தத்தம்
பேதமொன் றில்லா வண்ணம் பேசிய தான மாக
நீதிநன் னிலையி னின்றால் நெடும்பிணி யில்லை யாகும்
பேதமா யொன்றோ டொன்று பிணங்கிடிற் பிணிக டாமே 3.6

நோயின் வகை

பெற்றிடு முத்தமம் பெலத்த மத்திமம்
சொற்றிடு மதமமென் றின்ன தன்மையால்
உற்றிடு வியாதிமூ வகையென் றோதினார்
மற்றதிற் சாத்திய மடுத்த மூன்றதே 337

உற்றதோர் பசியி னுரு முதாவக் கினிகோ பித்துப்
பற்றியே யப்பு வற்றப் பருகிடப் பித்த முண்டாய்ச்
சொற்றிடும் வியாதி யாகித் தோன்றியே தோஷி னிற்கும்
மற்றது சாத்தி யத்தி னடைவென வகுத்தா ரன்றே 338

அசாத்தியம்

அடுத்துடற் கடுப்பி னூலு மசீரண மந்திப் பாலும்
கடுத்துட னப்பு வந்து கனலினை மறைத்து மூடிக்
கெடுத்திடும் வாதம் வந்து கிளருமா மிசத்தி னின்று
மடுத்திடு பிணிய தாகின் மற்றசாத் தியம தாமே 339

கட்டசாத்தியம்

மன்னுநீர் சருகி னூறல் மண்டிநீர் பாசி கூட
உன்னிய சோற்றி னுப்பி னுறுதுகண் மயிர்மென் கல்லு
நண்ணியே யெழுந்த சேற்ப நாடொறு மெலும்பிற் றோலில் 340
கண்ணிய தசையிற் சேரிற் கட்டசாத் தியம தாமே

சரீரமு முலர்ந்து வற்றிச் சஞ்சல மிகுதி யுண்டாம்
உரியதோ ருவாந்தி யாகி யுண்டியு மொறுத்து மேனி
கருகியே வயிறு மூதிக் கழிந்திடுங் கஞ்சி தண்ணீர்
அருவருத் திடும்வா யூறி யருங்கட்ட சாத்தியமே 341

உத்தமவியாதி-சாத்தியம்

உத்தம வியாதி பித்த மொருசிறி துடன்கோ பித்து
மெத்தவே மெல்ல மெல்ல மேவிடு மருந்தி னாலே
சுத்தமாய்ப் பன்னி ரண்டிற் சகம்வரு மதில்வா ராதேல்
ஒத்திரு பத்தி ரண்டி லொழிந்திடு மாத மொன்றே 342

மத்திமவியாதி-அசாத்தியம்

அடுத்தமத் திமவி யாதி யானதில் வாதம் வந்து
கடுத்துடன் மிண்டி மிண்டிக் கடினமா யெண்ணெய் பற்பம்
கொடுத்திடில் நெடுநாட் சென்று குணம்வரும் வாரா தென்னில்
கெடுத்திடுந் தீரா தென்றே கிளத்திடு மாயுள் வேதம் 343

அதமவியாதி-கட்டசாத்தியம்

உற்றிடு மதமங் தன்னி லுதித்திடுஞ் சேற்பம் வந்து
பற்றிடு முந்தி நின்று பரந்திடு முயர வேறிச்
செற்றிடுஞ் சடுதி யன்றேற் செலுத்திடா நாட்செல் வீங்கும்
கற்றிடுங் கலைவல் லோர்கள் கட்டசாத் தியமென் றுரே 344

சாத்தியம்முதலிய மூன்றின்
இயல்பு

திருமிகு சாத்தியந் தீருஞ் சில்பகல்
வருமிகு மசாத்திய மாற நாட்செலும்
கருமலி கட்டசாத் தியப்பின் காலனும்
அருமறை மொழிந்தன வறிந்து ணர்ந்திடே 345

அறிந்திடு சாத்திய மடுத்த முத்தொகை
பிறிந்திடு குணத்தொகை பேத மில்வழி
செறிந்திட வுரைத்தனஞ் செய்வி னைப்பழி
பறிந்திடு மரணத்தின் பகுதி பேசுவாம் 346

பித்தமதிகரித்த மரணக்குறி

பித்தமு முயர வேறிப் பேதித்து வெதுப்புண் டாகிச்
சத்தியு மெடுத்தாள் வற்றித் தாகமும் பசியு மற்றுச்
சுத்தமாய் வயிறு மூதிச் சோர்ந்திடக் கழிச்ச லாகி
ஒத்திடு மருந்தை மீறி யுரத்திடின் மரண மாமே 347

வாதமதிகரித்த மரணக்குறி

வாதமு முயர வேறி மயக்கியே மூர்ச்சை யாகிப்
பேதமாய் விறைத்து வேர்த்துப் பேதிக்க நாவும் வீழ்ந்து
சீதமாய்க் குளிர்ந்து கால்கை திமிர்த்துடன் றெய்வு முண்டாய்
ஏதமாய்க் கண்ணு மேலே யேறிடின் மரண மாமே 348

சிலேற்பனமதிகரித்த மரணக்குறி

சேட்டும நெஞ்சைக் கட்டித் தீன்மறந் தெடுத்து முட்டாய்
காட்டமும் பஞ்சு போல நாவரண் டிடனும் வேர்த்துக்

கோட்டமாய்ச் சரீரம் வற்றிக் குறித்தவுண் மூச்சு முண்டாய்
ஈட்டிய மருந்தை மீறி யிழுத்திடின் மரண மாமே 349

நீர்க்குறி

தர்க்கசாத் திரிக ளானோர் தங்களிற் றேர்ந்து நோயின்
வர்க்கமா நாடி தன்னா லறிவது மயக்க மென்றே
உற்றநீர்ப் பரீட்சை யாய்ந்தே யுணர்த்தின ரிதற்கு நேராய்
மற்றொரு விதிநா வில்லை மருத்துவக் கலைவல் லோர்க்கே 350

இரத்தமதிகரித்தகுறி

விட்டநீர் சிவந்தி றுக்கி வேற்றுமை கண்ட போதே
மட்டிலா விரத்தம் மிஞ்சி வளர்ந்ததாற் சிவந்து தோன்றும்
உட்டணம் மிகுந்த தாலே யுற்றநீ ரிறுகிற் றன்றே
இட்டமா யறிந்து கொள்ளற் கிடமென வியம்பி னாரே 351

பித்தநீர்

பெத்தநீர் சிவந்து தோன்றி மெதுவெனத் தெளிந்து நின்றால்
பித்தமாங் கோப மென்று பேசுதற் கிடம தாகும்
இத்தைமூ லத்தின் வெப்பா லெரிந்துநீர் சிவந்து தோன்றும்
வற்றிய வரட்சி தன்னால் வளமுறத் தெளிந்த தாமே 352

சேடநீர்

வளமுற வெள்ளை யாகி வற்றிநீர் குறுகி நின்றால்
தெளிவுறச் சேட்டு மத்தின் செய்கையென் றுரைக்க லாகும்
குளிர்மையி னாலே வெண்மை யாகிய குணமா மென்றும்
இளகுமச் சிரத்தந் தன்னா லிறுகிய தென்றுந் தேரே 353

வாதநீர்

சொல்லரும் வெள்ளை யாகித் தோயமுந் தெளிவ தானால்
வல்லப மிகுந்து வாதம் வருத்திய குணமென் றோதும்
நல்லதோர் குளிர்மை யாலே நாடிய வெள்ளை யாகும்
அல்லல்சேர் வரட்சி யாலே யந்தநீர் தெளிவ தாமே 354

தொந்தபித்தக் குறி

இந்நீர் கனப்பு மாகி யிறுகினு லிரத்தம் மிஞ்சி
வந்தவக் குணங்க ளாகு மற்றிது வல்லால் நாளில்
விந்தையா யந்த நீரின் மேலுற்றுத் தெளிந்து நின்றால்
தொந்தித்த பித்த மொன்றிற் றெகைமென வகைசொல் வாயே

வகைவகை யாக ....வந்துமெல் லியதாய்த் தோன்றித்
தொகையுறத் தெளிந்து நின்றாற் சொல்கரும் பித்த மென்றே
....
.... 356

தேட்டமுன் சொன்ன தெல்லாஞ்சிக்சிடுங்குண மென் னென்றால்
மூட்டிய வயதி னுலு முதியகா லத்தி னுலும்
கோட்டுநட் சத்தி ரத்தின் குணங்களி னுலும் வெறு
நாட்டமாய்ப் பித்த மிஞ்சி நவில்பல குணங்கள் காட்டும் 357

சுரரோகிகளின் நீர்க்குறி

நவமிகு சுரமுற் றோர்த நவிற்றுநீர் வெள்ளை யாகி
உவருறத் தெளிந்து நின்று லுட்டண மென்று தேறுய்
கவர்முறைக் காய்ச்ச லானுற் கனத்துநீ ரிறுகி நிற்கில்
தவனமுற் றடைந்த காய்ச்சல் சடுதியில் விட்டுப் போமே 358

விட்டநீர் சிவந்து தோன்றி மிகவுமே தெளிவ தானுல்
மட்டிது மூன்று நாளை மாறலென் றுரைக்க வேண்டும்
இட்டமாய் முகனை தன்னி லிறுகியே சிவந்து பின்பு
கட்டுநீர் வெள்ளை யாகிற கபாலத்திற் சேரும் பித்தம் 359

பித்தஞ்சேர் நாம்பு பச்சை பேதித்தாற் பெலன்கே டென்னுய்
மற்றுநிட் டூர மாகி வலிமைசேர் கடின மானுல்
உற்றபொல் லாப்பித் தென்றே யுறத்தெளிந் துரைக்க லாகும்
கற்றைசேர் நாம்பு விம்மிக் கறுத்திடின் மரண மென்னே 360

என்னமுன் சொன்ன நீரை யேந்தியே பார்க்கின் மேலே
வன்னமாய்ப் புருவ முள்ள வளையமாய்ப் பரந்து நின்றால்

சென்னியுங் கனத்து வெப்பாய்த் தியக்கமுற் றிருக்கு மென்று
பன்னுசாத் திரிக ளாய்ந்து பகர்ந்ததைப் பகர்ந்த தாமே 361

பகருநீ ரடியிற் றாழ்ந்து பற்றிய சிவப்பி னாலும்
நிகர்மஞ்ச ணிறமா னாலு நீர்கொஞ்சந் தெளிவா னாலும்
மிகவுமே சென்னி தன்னில் விதனமா மிடது பக்கம்
இயல்புரி நோவுண் டென்றே யியம்பினா ரியல்பி னாலே 362

இயல்பிலாச் சுரத்தோர்க் கின்ன மியம்புநீர் வெள்ளை யாகிச்
செயல்பெறு கறுப்பு மாகித் தெளிந்திடு நீரு மாகி
வயமுற விருந்தாற் புத்தி வளர்சென்னி வலது பக்கம்
துயர்பெறு நோவுண் டென்று சொல்லலாந் துலக்க மாக 363

துலங்குநீ ரடியிற் பாதி ‡தோயவுஞ் சிவந்து தோன்றிக்
கலந்துமேற் றெளிவு மாகிக் காய்ச்சலுங் கடின மானால்
மலங்கிட மார்பு நெஞ்சு வாதையுற் றிருக்கு மென்றே
இலங்குசாத் திரநூல் வல்லோர் யாவரு மியம்பி னாரே 364

நாரத்தி னீர்ப்பால் போல நவையுற்ற சவ்விற் கால
மாருற்ற பாத்தி ரத்தி லடிமண்டி கிடந்து தானால்
பாருற்ற மெழுகு மாங்காய் பற்றிய கல்லி னாலும்
சீருற்ற செய்கை யென்று தெளிவுறச் செப்ப லாமே 365

செப்புநீர் சிவந்து சற்றே தெளிவுமா யிருந்த தென்னில்
துப்புறு மிரத்தத் தாலே தொந்தித்த வியாதி யென்பர்
அப்புநீர் கலங்கிக் கொஞ்ச மாகவே கறுப்பு மானால்
வெப்பது வீரல் தாவி வெதும்பிய சுரமுண் டாமே 366

உண்டாறு கின்ற நீர்தா னுயர்தலை முடியே போலக்
கண்டிடு மெழுக தாமாங் காயினில் வியாதி யென்று
விண்டிடச் செய்வா யிந்த விதமுறு சாத்தி ரத்தைக்
கொண்டுதொந் துப்பின் மேலோர் கூறிய குணமி தாமே 367

‡ தோய்தல்-உறைந்துபோதல்

எண்ணெய் நீர்க்குறி

கல்விசாத் திரங்கள் கற்ற கனதவ முனிவ ராய்ந்து
சொல்லுமூத் திரப்ப ரீட்சை சொற்றிட வினிது கேண்மின்
அல்லிடைச் சாம மொன்று சென்றத னப்பால் நீரை
நல்லபீங் கானில் வாங்கி நல்லெண்ணெய் விட்டுப் பாரே 368

பித்தமதிகரித்த குறி

விட்டதோர் துள்ளி யெண்ணெய் வீசியே பரந்து தோன்றி
வட்டமாய் நின்று தானல் வளர்ந்திடு மிரத்த மிஞ்சி
உட்டண மிகுந்த தென்றே யுடற்குளிர் பதார்த்த மூட்டி
வெட்டைசேர் பித்தந் தாழ விரேசனஞ் செய்ய நன்றே 369

விரவுறு கதிர்போல் நீண்டு வேற்றுமைக் குணங்கள் கண்டால்
குருதிதான் கெட்டு நாசங் குறுகிய குணம தென்ப
பெருகவே குளிர்மை கூட்டிப் பித்தம்பே திக்கச் செய்தால்
வருபிணி நீக்கி நல்ல வச்சிர காய மாமே 370

வாதக்குறி

…ண்ணெய் துள்ளி வார்த்ததி னெகிழா தாகில்
…ளிர்மை மீறித் தோஷமுற் றெய்து மென்றே
…ம சீத மகற்றியே வருந்தி டாமல்
… தெளிந்துநன் மருந்தே செய்வாய்

…குறி

…நீரில் விட்ட போதில்
…பமே யாகும்
…டய சித்தம்
…ம்பொ ணுதே 372

…க மிகுதியிலே
[illegible]

ஈன மிருந்தே யிடுப்புளையு மிருகால் காமுங் குளிர்ந்திருக்கும்
தேனே சிறுநீர் சிவப்பாகுஞ் செப்பிர் வெப்பின் செயலாமே

குளிர்

செய்யநா வரட்சி யில்லை தெளிந்தநீர் சுவையு மில்லை
கையவே குளிரு மேனி நடுங்கிடும் வாய்நி ரூறும்
மெய்யுடல் காமுங் காலும் வெதும்பிடு மிரவி லேநீர்
பெய்வது மிகுதி யாகிற் பேசுவாய் குளிர்மை யென்றே 374

குளிர்மைசேர் சேற்ப னத்தின் குணங்களை யகற்ற வேண்டில்
வளியொடு சுளிவா ராமன் மருந்தினைத் திருந்தச் செய்வாய்
பிழையுறச் சாவா ரென்றும் பிழைத்திடு வார்க ளென்றும்
குழையணி கூத்தர்க் கன்றி யொருவர்க்குக் கூறொ ணாதே 375

வாய்வு இடப்பக்கத்திலாயின் வெப்பும் வலப்பக்கத்திலாயின் குளிரும் என்பதறிக.

இடையுறு வாயு வர்க்க மெழும்பிடி லிடது பக்கம்
தொடர்புற வின்றால் வெப்பின் தொகையெனத் தொகுத்துச் சொ
உடலுடை வலது பக்கந் தொதுங்கியே பதுங்கி நின்
மடமயின் மானே யந்த வாயுவுங் குளிர்மை யாமே

முலைப்பாலால்நீர்ச்

பிழையறப் பிள்ளைப் பெற்ற பே
பழுதுற வியாதி யுற்றோர் பசி
வழுவறக் கலந்து தாகில் வ
வழுவுறக் கலவா தாகின் ப

பன்றிக்கொ

மரணமென் றறிவ த
ணத்தின் மேலுங்
ந்திற் போடத்
ய

இரத்தப்பரிட்சையால் மரணக்குறியறிய

குறியின்னஞ் சொல்லக் கேளாய் குளிர்ந்தநீர் தன்னை வாங்கி
இறகிய வருந்தக் கார னிரத்தத்தி [illegible]ணடு துள்ளி
உறுதியாய் விட்டுப் பார்க்க வுள்ளுறத் தாழ்ந்தால் நன்று
மறுகியே தாழா தாயின் மரணமென் றியம்ப லாமே 379

§காயத்து நீரி லெண்ணெய் கதிர்முனை நின்று தானல்
சீயுற்ற பித்த மீறிச் செய்குண மென்று கண்டு
நீயுற்ற குளிர்மை பூட்டி நெகிழ்ந்திடப் பேதி கொண்டால்
நோயற்றுப் போகு மென்று நுவன்றனர் நூல்வல் லோரே 380

பத்தியமறிய

சுரமிலா வியாதி யில்லைச் சுரம்வந்து காயு மாகில்
திரமதாய்த் தெளிவு கஞ்சி சிறந்தபன் னிரண்டிற் கொள்க
உரமிலாச் சுரந் தணிந்தா லுறும்புற்கை மிளகு நீரே
தரமுறு சன்னி யாகிற் றன்பொரித் தரிசி நீரே 381

பொரித்திடு மரிசி சுக்குப் புதுநில வேருங் கூட்டி
எரித்திடுங் கஞ்சி நன்றா மேதமா மந்த மாகில்
கரித்திடுங் குடிநீர் தானுங் கஞ்சிநீர்த் தெளிவு நன்றாம்
பரித்திடும் பற்பத் துக்குப் பத்தியம் பசுப்பால் நெய்யே 382

உப்புடன் புளியும் விட்டே யுவந்தபன் னிரண்டு நாளும்
மெய்ப்படி வெந்நீர் கூட்டி மே றுபத் தியமுங் கொள்க
செப்பிடும் வெப்பு மிஞ்சிற் றினங்குளிர் நீரின் மூழ்க
இப்படிப் பத்தி யங்க ளியல்புடன் பிடிக்க நன்றாம் 383

மகோதரக் காப்ப னுக்கு மாறிடக் குழம்ப ருந்தில்
தகவுடன் கோழி முட்டை சாரணைக் கீரைத் தண்ணீர்

---

§இச்செய்யுள் 71ம் பக்கத்தில் பித்தமதிகரிக்குறி, என்னும் தலைப்பின்கீழ் இருக்க வேண்டியது

தொகையுடன் முருங்கைக் கீரை சொல்லும்வெள் ளுள்ளிகூட்டி
மிகைபட வவித்த நீரும் மிக்கிடும் வாத மாகில் 384

பத்தியங் கடின மாகும் பருப்பும்வெள் ளாட்டின் பாலும்
சுத்தமா மிளகு நீருஞ் சொல்லிய முருங்கைப் பிஞ்சும்
நித்தியம் வெந்நீர் கூட்டி நிதானமாய் வீட்டில் வைத்துச்
சித்தியாச் சிவனை வேண்டித் தின்றிட மருந்து நன்றாம் 385

காற்றினிற் றிரிய லாகா கடும்வெயிற் போக லாகா
சீற்றமாக் கோப மாகா தீமையை நினைக்க லாகா
ஏற்றமா மினிப்புங் கைப்பு மிடர்செயுங் கிரந்தி யாகா
சாற்றரு மோட மோறிச் சமுத்திரம் போக லாகா 386

இலைபிள கருந்த லாகா வின்பத்தை நினைத்த லாகா
பலர்புகழ் கேட்க லாகா பத்திய முறிக்க லாகா
நிலைபெறு மனையாள் தன்னை நிச்சயங் காண லாகா
அலைவிலா மனத்த னாகி யமலனை நினைக்க நன்றே 387

நீதியோ டிருந்து நாளு நிமலன தருளை யுன்னிச்
சோதியே தியான மாகச் சொல்லிய மருந்துட் கொள்ளில்
ஆதியிற் செய்த கன்ம வினைவழிப் பிணிய கன்றே
ஏதமி லுலகி னூடு மிடரின்றி யிருக்க லாமே 388

பத்திய மில்லார்க் கென்றும் பகர்பிணி நீங்கா தென்று
சத்திய வாயுள் வேதஞ் சாற்றிய வுண்மை யாலே
உத்தம மருந்தின் மேலா முபர்ந்தபத் தியம தாகும்
சுத்தபத் தியமில் லார்க்குச் சொல்லிய மருந்தென் செய்யும் 389

மெய்ப்படி யாயுள் வேதம் விளம்பிய நீதி கண்டு
செப்புநன் மருந்து கொள்ளிற் சிவனை முன் வணங்கிப் போற்றி
இப்படி யெனது நோயை யிரங்கியே தீர்ப்பா யென்றே
ஒப்புடன் மருந்து கொள்ள வுறுபிணி நீங்கிப் போமே 390